www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

செப்.24–30,1995

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 120

## தப்புக் கணக்குகளும் தவறான கணிப்புக்களும்!

யுத்தகள நிலவரங்கள்

## சென்னையில் குண்டுவெடிப்பு பின்னணியில் புலிகளா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## பம்பாய் நடிகைகளுக்கு தடையா?

## விலை உயர்ந்த குற்றம்

## கார்லோசின் சாகசங்கள்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தாமதம் நல்லதல்ல

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

விவாதங்களையும்-சர்ச்சைகளையும்
கிளப்பியதல்லாமல்-
வேறு பயன் எதுவுமில்லை
என்ற நிலையில்
தீர்வு யோசனைகள் நின்றுகொண்டிருக்கின்றன.

காலநிலை சீரற்று இருந்தால்
கப்பல் ஒரு இடத்தில்
தரித்து நிற்பது வழக்கம்தான்.

காலநிலையைக் காரணம் காட்டி
கப்பலுக்குள் உள்ள
ஒரு சில பெறுமதியான
பொருட்களையும் தூக்கி
கடலில் வீசாதிருக்க வேண்டும்.

இல்லாவிட்டால்,
வெறும் கப்பல்தான் கரைக்குவரும்.
தீர்வு யோசனைக்கும்
இது பொருந்தும்.

யோசனைகளை கைவிடமாட்டோம்
என்றும் கூறுகிறார்கள்.
இது இறுதித் திட்டமல்ல
மாற்று யோசனைகளை கூறுங்கள்
என்றும் கேட்கிறார்கள்.

மாற்று யோசனைகளுக்கு இடமுண்டு
என்றாகும் போதே
தற்போதுள்ள யோசனைகளில்
மாற்றம் செய்யத் தயார்
என்றுதானே அர்த்தம்.

தனது யோசனைகளுக்காக
அரசு வாதாடுவதற்கு பதிலாக
மாற்று யோசனைகளை தாருங்கள்
என்று கேட்டுக் கொண்டிருப்பது
ஊசலாட்டத்தையே உணர்த்துகிறது.

யோசனை என்பதே
விவாதங்கள் நடத்த
முன்வைக்கப்படுவதுதான்.

ஆனால்-யோசனையை
யார் முன்வைக்கிறார்களோ அவர்கள்
தமது யோசனைகளுக்காக
வாதாடுபவர்களாக இருக்க வேண்டும்.
அதில் உள்ள நியாயங்களை
எடுத்துச் சொல்ல வேண்டும்.

அப்படியானால் தான்
முன்வைக்கப்பட்ட யோசனையை
ஒட்டியதாக விவாதங்கள் தொடரும்.
முன்வைத்தவர்களே தடுமாறினால்
விவாதிக்க வருபவர்கள்
ஆளாளுக்கு புதிய யோசனைகளோடு
ஆஜராகிக்கொண்டிருப்பார்கள்.

இவ்வாறான நிலையில்-
அரசு தாமதம் செய்துகொண்டிருந்தால்
தீர்வு யோசனைக்கு
எதிரான சக்திகளுக்கு
போதிய வாய்ப்பு வழங்குவதாக
அமைந்துவிடுமே தவிர,
ஆக்கபூர்வமான தீர்விற்கு உதவாது.

ஆறப்போட்டு செய்யவேண்டிய
சில காரியங்களும்
அரசியலில் இருக்கின்றன.

அரசியல் தீர்வை எட்டும்
முயற்சிகளுக்கு
ஆறப்போட்டு காரியம் பார்க்கும்
அணுகுமுறை பயனளிக்காது.

தமது துருப்பிடித்த கத்திகளை
சாணை பிடித்துக் கொண்டு
இனவாதிகள் முழுதாகத் தயாராக
சந்தர்ப்பம் வழங்குவது
புத்திசாலித்தனமாகவும் அமையாது.

அரசு மனம் வைத்திருந்தால்
ஒரு வார காலத்திற்குள் கூட
பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம்
தீர்வு யோசனைகளை
சமர்ப்பித்திருக்க முடிந்திருக்கும்.

நீண்ட தாமதத்தின் பின்னர்
தெரிவுக்குழுவிடம் போய்,
பின்னர் தெரிவுக்குழு
அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்து
ஆராய்ந்து முடிக்க
எவ்வளவு காலம் தேவைப்படுமோ?

காலாகாலத்தில் சிகிச்சை
செய்யப்படாவிட்டால்
நோய்முற்றி விபரீதமாகும்
என்பதை-நமது
அரசியல் தலைவர்கள்
எப்போதுதான் உணரப் போகிறார்கள்?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### கணவன்-மனைவி-கடமை-உரிமை



லௌகிக வாழ்வில் நாம் வாழும் விதம்தான் ஆன்மீக வாழ்விற்கு ஆதாரமாகிறது. எனவேதான், கணவன் மனைவி இல்வாழ்வில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றி விவிலியத்தில் நற்கருத்துக்கள் இயம்பப்பட்டுள்ளன.

'புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்யக் கடவன்: அப்படியே மனைவி தன் கணவனுக்குச் செய்யக் கடவள். மனைவியானவள் தன் சொந்த சரீரத்துக்கு அதிகாரியல்லள்: புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷன் தன் சொந்தச் சரீரத்துக்கு அதிகாரியல்லன்: மனைவியே அதற்கு அதிகாரி.' (1 கொரி: 7: 3-5)

கணவன், மனைவி இருவரின் கடமைகளும், உரிமைகளும் சமமாக உள்ளன. என்பதை தெள்ளத் தெளிய விவிலியத்தில் கூறப்பட்டிருப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். கணவர் மனைவியர் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சமமானவர் என்பது நன்கு உணர்த்தப்படுகின்றது.

இதற்கு, திருமணத்திற்கு முன்னமேயே ஒருவர் ஒருவரை விரும்பி- முழு சம்மதத்தோடும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பெண்ணின் சம்மதம் பெறுவது அவசியம் என்பதை ஆதியாகமம் நமக்கு விளக்குகிறது.

அவள் விருப்பம் இன்னதென்று அறிந்து கொள்வோமென்றனர்: அவளைக் கூப்பிட்டனர். 'இம்மனிதனோடு கூடப்போகிறாயா' என்று கேட்டனர். அவள் 'போகிறேன்' என்றாள். (ஆதி: 24:58) நவ உலகிலும் இந்நற்பழக்கம் அவசியமே.

ஏ.பி.வி.கோமஸ்.

### அலி (ரலி) அவர்களின் அபார பசி

'நிச்சயமாக நான் பணிக்காலத்தில் ஒரு நாள் வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். அன்று கடும் பசியுடையவனாக இருந்தேன் (ஆதலால் உண்ணுவதற்கு) ஏதாவது தேடினேன். அதேசமயம் நான் ஒரு யூதனைக் கடந்து சென்று கொண்டிருந்தேன். அவன் தன் தோட்டத்திற்கு வாளியினால் நீர் இறைத்து ஊற்றிக் கொண்டிருந்தான். எனவே. நான் அவனை சுவரிலுள்ள துளையின் வழியாக எட்டிப் பார்த்தேன். அப்பொழுது அவன் 'அரபியே, உமக்கு என்ன வேண்டும்' எனக் கேட்டான்.

'ஒரு வாளிக்கு ஒரு பேரீச்சம் பழம் வீதம் தண்ணீர் இறைத்து ஊற்றுகின்றீரா?' என்று அவன் வினவினான். 'சரி கதவைத் திற நான் உள்ளே வருவதற்கு' என்று கூறினேன். உடனே அவன் கதவைத்திறக்க நான் உள்ளே சென்றேன். உடனே அவன் என்னிடம் ஒருவாளியைத் தந்தான். பின்னர் நான் ஒரு வாளித்தண்ணீர் இறைத்ததும் ஒரு பேரீச்சம்பழம் எனக்கு அளித்தான்.

இவ்விதமாக ஒரு கைப்பிடி நிறைய பேரீச்சம் பழம் கிடைக்கும்வரை நீரை இறைத்துவிட்டு அவனுடைய வாளியை அவனிடம் கொடுத்துவிட்டு எனக்கு இவை போதுமானவை என்றுகூறி அவற்றைச் சாப்பிட்டு தண்ணீர் குடித்துவிட்டு பின்னர் பள்ளிக்குச் சென்றேன்' என்று அறிவின் தந்தை அலி(ரலி) அவர்கள் தனது பசியின் அவல நிலையைப் பற்றி மிகவும் கவலையாகச் சொன்னார்கள்.

வெ.முஹம்மட் ஸம்ஸம்-நற்பிட்டிமுனை 03

## கவிதைப்போட்டி இல-117

### பரிசுக்குரிய கவிதை

#### தீர்வொன்று காணீர்

பொம்மைகள் தரினும்
பொருட்கோடி பெறினும்
தேசமின்று தெருவில்
நேசமின்னும் கருவில்
தீருமோ என் கண்ணீர்
தீர்வொன்று காணீர்

நீர்கொழும்பு-நிலா ஸ்நேகி

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**சிரியுங்கள்**

குழந்தைகளின் மகிழ்ச்சியினைக்
குழிதோன்றிப் புதைக்கின்ற
அரக்கர்களே விழியுங்கள்!
போரென்ற வெறிப்பிடித்து (ப்)
பொன்னுலகை மண்ணாக்கி
சீரென்ற பக்குவத்தைச்
சிதறடித்துப் போகின்றீர்- சற்றுச்
சிரியுங்கள்! சிநேகங்கள் உருவாகும்.

பாண்டியூர்-பொன்.நவநீதன்.

**சொல்மலரே.**

பூவே!
நீயே- ஓர்
புதுக்க(வி)தை
ஆனபோது.
பூக்குமோடி
இன்னுமோர்
புதியவார்த்தை?

செல்வி.சுப்ரமணியம் வாகீஸ்வரி,
அப்பர் கலஹா

**கண்டீர்களா**

அங்கு மிங்குமாய்
மிதந்த பல்லுடல்களில்-என்
எந்தை-தாயை
கண்டீர்களா?

அனு-திருமலை

**தேம்பல்**

தேசத்தின் கொடுமையிலே.
தேம்பி அழும் குழந்தையிங்கு.
தேடித்தான் யார் வருவார்?
தேசம் விட்டுப் போன பின்பு.

உம்முல் முபீனா-கற்பிட்டி

**ஆண்டவனே!**

துப்பாக்கி சத்தத்தில்
தூக்கமும் வரவில்லை
ஆராரோ பாடச்சொல்ல
அம்மாவும் எனக்கில்லை
பத்தாம் வயதினிலே
பரிதவிக்கும் இன்நிலையை
இறைவனிடமும் கூறிவிட்டேன்
இன்றுவரை முடிவேயில்லை!

எஸ்.யூ.எம்.இம்தியாஸ்-சாய்ந்தமருது.



**விம்மல்கள்**

பிரபஞ்சத்தின் வாழ்க்கையிலே
யுத்தக்காற்றில் அடிபட்டு
வீதியோர சாலைகளில்
உறவுகளை தேடிவந்த
பிஞ்சுத்தென்றல் விம்மல்கள்.

தெ.லோஜனா-கொழும்பு 15

**பக்குவநிலையே வேண்டும்**

பொம்மை, சொக்கா, பந்து
வேண்டாம்-பாப்பா எனக்கின்று
பாசத் தந்தை, தாயோடு
பயமின்றி நான் வாழ-பதட்டம்
பாரினில் இல்லாத
பக்குவ நிலையே தான் வேண்டும்

நிஜந்திக்கா.கனகசிங்கம்-மட்டக்களப்பு

**எதற்காக?**

பட்டினியால் உயிர்ப் பாவை
பரிதவிக்கும் போதினிலே
வெட்டுத் துணி வேய்ந்த
வெறும் பாவை எதற்காக?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

**ஏன் ஐயா?**

'அன்னையை அழித்து
அனாதையாய் ஆக்கிவிட்டு:
பொம்மையை ஏன் ஐயா
அளித்தீர்? வாழ்வு
பொய்யென்றே உரைத்திடவோ!'

ந.அரங்கன்-குருக்கள்மடம்.

## கவிதைப் போட்டி இல-120



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.09.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 120
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**முரசு வாசகரின் ஆசை**

தினமுரசின் வெண்மதியே
கவிதை உன்னை நான் பாட
கண்ணை விட்டு கையெடுத்து
வட்டமான உன் முகத்தை
வாசகர்க்கு காட்டிவிடு

என்.சத்தியசீலன்-நாவலப்பிடிய

**எச்சம்**

அடித்த 'ஷெல்லில்'
அழியாமல்
எஞ்சியது
பஞ்சுப் பொம்மையும்
பிஞ்சு மழலையும்.

ஷர்மி-கண்டி

**நிலைமாற**

அன்னை தெரேசா
ஆயிரம் வேண்டும்
அனாதையில்லா நிலை
வரவேண்டும்

எம்.துரையப்பன்-அக்கரைப்பற்று

**அநாதை**

கடவுளின்
கணக்கில்
கணக்கிடப்படாத
காணிக்கைகள்

தேன்மொழி-கொழும்பு

### எப்படித் தெரியும்?

கப்பலை கடத்தித்தான் புலிகள் கடற்படைப் படகுகளை தாக்கினார்கள் என்று நாரதருக்கு எப்படித் தெரியும்? விடுதலைப் புலிகளை ஆதாரமின்றி விமர்சிப்பது அவசியம் தானா?

எஸ்.சிவலோகநாதன்-வவுனியா

ஐரிஸ்மோனாவில் சென்ற வெளியூர் பயணிகள் கொழும்பு வந்திருக்கிறார்கள். கப்பல் கடத்தப்பட்டு, தாம் இறக்கப்பட்ட பின்னர், மீண்டும் கப்பல் கடலுக்குள் கொண்டு போகப்பட்ட பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர்கள் சொல்லியுமிருக்கிறார்கள். ஆகவே, நாரதரின் கணிப்பு மிகச் சரி. தவிர-புலிகளது செய்தி மூலமும் அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆ.ர்

ஐரிஸ்மோனா கப்பல் விவகாரத்தில் பல விமர்சகர்கள் கப்சிப்பாகி விட்டார்கள். முரசே! நீயோ முடிந்த வரை உண்மை சொன்னாய்.

கு.நாகராஜா-கொழும்பு-5

'தாய்' பிரமாதம். லேடீஸ் ஸ்பெசல், ஹலோ டாக்டர் இரண்டுமே சூப்பர்.

செல்வி.ரஸீனா யாசின்-அக்குறணை

### 'ஒரு நிமிஷ நிசப்தம்' தந்த ரஜேஸ்குமாரோடு கைகுலுக்குபவர்கள்

ராஜேஸ்குமாரின் தொடர் ஆரம்பத்தில் சூடு கொஞ்சம் குறைவு போல இருந்தது. முடிவு நெருங்கும்போது அசத்த ஆரம்பித்து, எதிர்பாராத திருப்பத்தில் நிறைந்து விட்டது.

வே.சுசிலன்-மாத்தளை

'ஒரு நிமிஷ நிசப்தம்' சூப்பர். அதனை மிஞ்சட்டும் பட்டுக்கோட்டையாரின் படையல்.

எல்.எம்.ரஹீம்-கல்முனை.

கதையின் முடிவில் தனது கிரைம் சக்கரவர்த்தி பட்டத்தை காப்பாற்றி விட்டார் ராஜேஸ்.

ம.புவனேஸ்வரி-கொழும்பு 06

பாராட்டு மடல்களை குவித்திருப்போரில் இங்கு இடம்பிடித்துக் கொள்பவர்கள் இவர்கள்:

ரி.நவநீதன்-இறக்வானை,
நஜ்பு-கிண்ணியா,
எஸ்.நிர்மலா-கொழும்பு-15,
மு.தவராஜன்-மடுல்சீம,
எம்.மகேஸ்வரன்,எம்.பரமேஸ்வரி-முறக்கொட்டான்சேனை.
க.சந்திரகலா-இராகலை,
சிவாஜினி சதாசிவம்-மாத்தளை,
கைல் எம்.சாஹிரா-கிண்ணியா 05,
எம்.சுஜன் மகேந்திரன்-கொழும்பு-13,
எஸ்.பாலகுமார்-நுவரெலியா,
தமிழ்ச் செல்வி பெருமாள்-பறகடுவ,
ரெ.சிவலிங்கம்-நீர்கொழும்பு,
ஏ.சி.எம்.அன்வர்-திகழி-ஏத்தாளை,
எம்.எஸ்.எம்.-ஜெஸீர்-கிண்ணியா,
சப்னா கப்பார்-புத்தளம்.
பி.பாஸ்கரன்-வட்டெகாடை.

## வாசகர் சாலை





முன்னுக்குப்பின் முரணாக செய்திகளை வெளியிடாமல், ஆதாரங்களோடு செய்திகளை வெளியிடுகிறாய். செய்திச் சுதந்திரம் என்பது பொய்யான செய்திகளால் வாசகர்களை குழப்புவதற்கல்ல என்பதை நிரூபித்து வருகிறாய். ஐரிஸ்மோனாவின் மாலுமிகளை புலிகள் சுட்டதாகவெல்லாம் செய்திகள் வந்தன. முரசே, நீயோ சரியான தகவல் கிட்டும்வரை பொறுமைகாத்து பொறுப்புணர்வை காட்டினாய்.

வ.ரவிகரன்-வவுனியா

அஸ்வதியின் (அருமையான படைப்பின் தலைப்பின்) நெற்றிக்கு துணிந்து திலகமிட்டேன். (வித்தியாசமான கதையேதான் சபாஷ்) அனைவரும் வாழ்த்தலாம்.

உன்னஸ்கிரிய ஏ.பி.சதாசிவம்-
கொழும்பு -12

இராஜகுமாரனின் இராமாயணத் தொடருக்கு முன் கூட்டியே எனது வரவேற்பும், வாழ்த்துக்களும்.

ஆர்.பவானி-
திருக்கோணமலை.

தேன் சிந்தும் முரசே,
உன் தேன்கூட்டில் சிதறும் தேனின் சுவை தித்திக்க வைக்கின்றது. ஒவ்வொரு பக்கமும் அதில், இலக்கிய நயத்தின் சுவையே தனிதான்

க.சத்தியசிவகுமார்-உடபுஸ்ஸல்லாவ

திருமலை சுந்தரப் பிரியாவின் 'ஆடவர் ஸ்பெஸல்' பிரமாதம். பெண் முகத்தில் ஆண் உதடு படாத இடம் எது? தனித்தனியாய் போட்டு ஜப்பான் குழப்பிவிட்டது. முதல் முத்தம் என்றால் நாடியில் என்று ஞாபகம்

எம்.ஆனந்த்-
திருக்கோணமலை.

அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' அரசியல் கட்டுரை பேரினவாத அரசியல் வாதிகளின் அத்துமீறல்களையும், தமிழ் இயக்கங்களின் தவறுகளையும் பக்க சார்பின்றி எடுத்துரைக்கும் தினமுரசுக்கு எனது வாழ்த்துக்கள் என்றும்.

ஏ.எம்.இப்திகார்-புத்தளம்



படிப்பகம்

www.padippakam.com

# ஒக்டோபரில்தான் பாரிய தாக்குதல்

## யாழ்ப்பாணத்தில் புலிகள் தெரிவிப்பு

## வெளிநாடுகளில் வீடியோ பிரசாரம்

பாதுகாப்புப் படையினரின் பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒக்டோபர் மாதத்தின் நடுப்பகுதியில்தான் நடைபெறும் என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை யாழ் குடாநாட்டில் நவாலி தேவாலய வளாகத்தில் குண்டு வீச்சில் மக்கள் கொல்லப்பட்ட காட்சிகளை விளக்கும் வீடியோ படங்களும், புலிப்பாய்ச்சல் நடவடிக்கைகளைச் சித்தரிக்கும் காட்சிகளும் மக்களுக்குக் காண்பிக்கப்பட்டு வருகின்றன. புதிய உறுப்பினர்கள் திரட்டும் நடவடிக்கைக்கு உணர்ச்சி பூர்வமான பிரசாரமாக அவை அமைந்துள்ளன.

### வீடியோ படம்

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் போர்க்கால பிரசார நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

படையினரின் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது நவாலி தேவாலயத்தில் தஞ்சமடைந்த மக்கள் பலியான காட்சிகளும் புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சிப் பிரிவினரால் படமாக்கப் பட்டிருந்தன.

அவை தற்போது வீடியோ பிரதிகளாக யாழ்-குடாநாட்டில் மக்களிடம் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

பைபிளைக் கட்டி அணைத்தபடி ஒரு முதியவர் பலியாகி உள்ளார். பைபிள் இரத்தத்தில் தோய்ந்து கிடக்கிறது.

கைக்குழந்தை ஒன்று உருத்தெரியாமல் சிதைந்து கிடக்கிறது. பலியான மக்களின் அவயவங்கள் சிதறிக் கிடக்கின்றன. இவை தவிர, பிரபாகரன் தனது துப்பாக்கியால் முதலாவது வேட்டைத் தீர்த்துவைக்க, புலிப்பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்ப மாகிறது.

பின்னணியில் உணர்ச்சிகரமான வசனங்களோடு வீடியோ பிரதிகள் வெளியிடப் பட்டுள்ளன.

இவற்றைக் காணும் மாணவர்கள் பலர் உடனடியாகவே இயக்கத்தில் சேருகின்றனர்.

### வெளிநாடுகளில் பிரசாரம்

வெளிநாடுகளுக்கும் 'ஒளி வீச்சு' என்ற பெயரில் அந்த வீடியோ பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள ராஜதந்திரிகளுக்கு புலிகளின் கிளையினரால் வீடியோ படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

வெளி உலகில் இலங்கை அரசின் பிரசாரத்தை முறியடிக்க அந்த வீடியோ படங்கள் புலிகளுக்குப் பெருமளவு உதவி வருவதாகக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெருமளவு நிதி திரட்டவும் அவை உதவும் என்று நம்பப் படுகிறது.

கடந்த 13ம் திகதி அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரை புலிகள் இயக்கத்தின் அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் சந்தித்து பேசியுள்ளனர். மெல்போர்ண் நகரில் அச் சந்திப்பு நடைபெற்றது. இலங்கை இரண்டு தேசங்களை கொண்டது என்ற அடிப்படையிலேயே அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்று புலிகளின் பிரதிநிதிகள் அச்சந்திப்பில் வலியுறுத்தி உள்ளனர்.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு பிரபல வர்த்தகர்கள் சிலர் தலா ஐம்பது லட்சம் ரூபாய் வீதம் வழங்கியுள்ளனர்.

### தமிழீழ வங்கி

தமிழீழ வங்கியின் மூன்றாவது கிளையொன்றும் சமீபத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள நெல்லியடியில் மூன்றாவது கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வலிகாமத்திலும், கிளிநொச்சியிலும் புலிகளின் தமிழீழ வங்கிக் கிளைகள் இயங்கி வருகின்றன.

நெல்லியடியில் வங்கியின் திறப்பு விழாவில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில், "சிறீ லங்கா அரசைப் போல எந்த நாட்டிடமும் கையேந்தாமல், மக்கள் உதவியுடன் பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தவே தமிழீழ வைப்பகங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. தனியரசுக்கான கட்டுமானங்களில் இதுவும் ஒன்றாகும்" என்று தெரிவித்தார்.

## ஷெல் விழுந்தால் மக்கள் ஓட்டம்

### யாழ் குடாநாட்டில் தினசரி அவலம்

இம்மாத ஆரம்பத்தில் 4.09.95 அன்று பலாலி படைத்தளம்மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து புலிகளிடம் நீண்டதூரம் ஷெல்களை ஏவக்கூடிய பீரங்கிகள் இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்தது.

கடந்த 10.09.95 ஞாயிற்றுக்கிழமையும் புலிகள் மீண்டும் ஷெல்தாக்குதல் நடத்தியிருந்தனர். பலாலி விமானதளத்தில் நின்ற வை.8 விமானம் மயிரிழையில் தப்பியதாக சில தகவல்கள் தெரிவித்தன.

இதன்பின்னரே பலாலி படைத்தளப் பரதேசத்தை விஸ்தரிக்கும் மட்டுப்படுத்தப் பட்ட இராணுவ நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டனர்.

ஞாயிற்றுக்கிழமையன்று பலாலியில் இருந்து படையினர் ஏவிய ஷெல்கள் மல்லாகத்தில் விழுந்து வெடித்தன. பொது மக்கள் அங்கிருந்து பெருமளவில் இடம் பெயர்ந்து விட்டதால் பாரிய அழிவுகள் ஏற்படவில்லை. நான்கு பேர் காயமடைந்தனர்.

திங்கட்கிழமை இரவு (11.09.95) பூநகரி இராணுவ முகாமிலிருந்து தீவுப்பகுதிக்கும், மற்றும் யாழ் குடாநாட்டு கடற்கரையோர மார்க்கமாகவும் ஹெலிகள் பறந்து திரிந்தன.

புலிகளது கவனத்தை திசை திருப்பவே அவ்வாறு செய்யப்பட்டது.

12.09.95 அன்று 'கைகுலுக்கல்' என்ற பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தனர்.

சுமார் ஆறாயிரம் படையினர் கவச வாகனங்கள், கனரக ஆயுதங்கள் சகிதம் நடவடிக்கையில் இறங்கினார்கள்.

புலிகளிடம் இருந்து பெரியளவில் எதிர்ப்புக் காட்டப்படவில்லை. எனினும் படையினர் விரைந்து முன்னேறிச் செல்ல முயலவில்லை. உள்ளே வரவிட்டு புலிகள் தாக்கலாம் என்று கருதியே இராணுவத்தினர் குறிப்பிட்ட பகுதிகளோடு நின்றுகொண்டனர்.

ஏழாலைப்பகுதி படையினரின் கட்டுப் பாட்டில் வந்துள்ளது. ஏழாலை பங்குத் தந்தை வண-ஜெபநேசன் அடிகளாரும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ள பகுதியில் சிக்கிக்கொண்டார் என்று யாழ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

தெல்லிப்பளையில் இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியில் புலிகள் நடத்திய கண்ணிவெடியில் ஒரு இராணுவ வாகனம் சேதமடைந்தது. படையினர் இருவர் பலியானதாக புலிகள் அறிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவனிலிருந்து 4 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 400 குடும்பங்கள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளன.

ஷெல் வீச்சுக்கள் காரணமாக அச்சுவேலி, குப்பிளான், சுன்னாகம் போன்ற பகுதிகளில் இருந்தும் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நீர்வேலி, புத்தூர் போன்ற இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

வடமராட்சியில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து ஓடுவது; பின்னர் திரும்பிவந்து வீட்டில் இருப்பது; ஷெல் ஒன்று வந்து விழுந்த சத்தம் கேட்டதும் மூட்டை முடிச்சுக்களோடு ஓடுவது போன்ற காட்சிகள் யாழ் குடாநாட்டில் வழக்கமாகி விட்டன.

## விமான விபத்துக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

### விமானிமீதும் யாழ்ப்பாணத்தில் கண்டனம்

(நமது நிருபர்)

அன்டநோவ் விமான விபத்துக்கும் புலிகள் இயக்கத்திற்கும் தொடர்பிருக்கக் கூடுமோ என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பிரசார சாதனங்கள் வெளியிட்டுவரும் செய்திகள் அந்த சந்தேகத்துக்கு ஆப்பு வைத்துள்ளன.

16.09.95 அன்று 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பான செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"அன்டநோவுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னமும் காரணம் கண்டுபிடிக்கப் படவில்லை. நிலமை இவ்வாறிருக்க, விமானி பாக்கியநாதனே தற்கொலைத் தாக்குதல் புரிந்து விமானத்தை அழித்திருக்கலாம் என்ற வதந்தி தெற்கில் பரவியுள்ளது.

தமிழர்களை அழிப்பதற்காக துணை போகின்றவர்களுக்கு பாக்கியநாதன் விவகாரம் ஒரு படிப்பினையாகும். அற்ப சலுகைகளுக்காக சிறீலங்கா அரசின் படைகளில் உள்ள தமிழர்களுக்கு இது ஒரு பாடமாகும்"

இவ்வாறு புலிகளின் குரல் வானொலி தெரிவித்திருக்கிறது.

விமானப்படையில் விசுவாசமான ஒரு விமானியாக பாக்கியநாதன் செயற்பட்டும் கூட அவர்மீது சந்தேகம் எழுப்பப்பட்டு வருவது குறித்தே புலிகள் அவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## பயணிகளில் ஒருவர் பலி! துப்பாக்கிச் சூடே காரணம்

ஐரிஸ் மோனா கப்பல் புலிகள் அமைப்பினரால் கடத்தப்பட்டபோது நடந்த துப்பாக்கிச் சூட்டில் பயணி ஒருவர் பலியானார். அனலைதீவைச் சேர்ந்த மயில்வாகனம் கருணாகரன் (வயது 23) என்பவரே பலியானவராவார். கப்பலை இடை மறித்து கடற்புலிகளின் பெண்கள் அணியினரே கைப்பற்றினார்கள். சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறே கப்பலுக்குள் பெண் புலிகள் பிரவேசித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மயில்வாகனம் கருணாகரன் மீது ஒரு சூடு விழுந்தது. இன்னொரு சூடு பயணிகளில் ஒருவரான பெண்மணி மீது விழுந்தது.

தகுந்த சிகிச்சை அளிக்கப்படாமையால் அதிக இரத்தப்போக்கு காரணமாக கருணாகரன் பலியானார். கருணாகரன் இறந்த பின்னர் பயணிகளிடம், செத்தவர் ஈ.பி.டி.பி. இயக்கத்தவராக இருப்பாரோ? என்று புலிகள் துருவித்துருவி விசாரித்தார்கள். அவர் ஒரு பொதுமகன் என்று தெரிந்தவுடன் பயணிகளில் ஒருவர் இயற்கை மரணம் அடைந்துவிட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் புலிகள் அறிவித்தனர்.

ஐரிஸ் மோனா பயணிகளில் இரண்டு வியாபாரிகள் மட்டுமே புலிகளால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதுதவிர கப்பல் மாலுமிகளும், சிப்பந்திகளும் புலிகளின் பாதுகாப்பில் உள்ளனர்.

## வடக்கில் திரட்டிய நிதி மோசடி!

### நிதி திரட்டிய உறுப்பினர்கள் தலை மறைவு

(யாழ் நிருபர் வர்மா)

வடக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் பாதுகாப்பு நிதி என்ற பெயரில் தனிப்பட்டரீதியில் நிதி சேகரித்த விடயம் புலிகளின் தலைமைப் பீடத்திற்குத் தெரியவந்தது.

இதனையடுத்து உஷாரடைந்த புலிகள் இயக்க தலைமைப்பீடத்தினர் அவசர அறிவித்தல் ஒன்றை வெளியிட்டனர்.

"தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தியதற்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளாமல் எவரிடமும் நிதியைக் கையளிக்க வேண்டாம்" என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியால் வெளியிடப்பட்ட அந்த அறிவித்தல் புலிகளின் குரல் வானொலியிலும், யாழ்ப்பாண பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தன.

இதன் பின்னர் நிதி திரட்டலில் இடம் பெற்ற மோசடி குறைந்திருந்தது.

இதே வேளை, விடுதலைப் புலிகளது நிதிப்பொறுப்பாளரால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டோடு நிதி திரட்டலில் ஈடுபட்ட புலிகள் உறுப்பினர் சிலர் திடீரென்று தலை மறைவாகி விட்டனர். 25 லட்சம் ரூபாய் வரை அவர்களிடம் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர் சிலரிடமிருந்து அவர்கள் நிதி திரட்டியிருந்தனர்.

இதனையடுத்து இந்த மாத ஆரம்பத்தில் கிளாலிப் போக்குவரத்து புலிகளால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நிதியைக் கையாடியவர்கள் யாழ் குடாநாட்டை விட்டு தப்பி ஓடாமல் தடுக்கவே கிளாலிப் போக்குவரத்து நிறுத்தப் பட்டிருந்தது.

ஐரிஸ் மோனா விவகாரம் வெளியே தெரியாமல் இருக்கவே போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்ததாக தவறான செய்திகள் வெளியாகியிருந்தன. ஐரிஸ் மோனா கடத்தல் நடந்தது யாழ் குடாநாட்டுக்கு வெளியே என்பது குறிப்பிடத்தக்கது.

கிளாலியை அண்டியிருந்த பகுதிகளில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்திவிட்டே கிளாலிப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மிக நம்பகமான உறுப்பினர்களை மட்டுமே நிதி திரட்டும் நடவடிக்கைகளில் புலிகளது நிதிப் பிரிவினர் ஈடுபடுத்தி உள்ளனர்.

## வெள்ளைவேன் கோஷ்டியினர் விடுதலை

### பிணையில் வர பொலிசார் உதவி?

(சஞ்சீவன்)

திருக்கோணமலையில் வெள்ளைவேனில் திரியும் கான்-பைசல் என்னும் இருவர் பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

வீட்டைச் சோதனையிடுவதாக கூறிக் கொண்டு திருமலையில் உவர்மலைப் பகுதியில் இருந்த வீடொன்றுக்குள் புகுந்தனர். லட்சுமிப்பிள்ளை என்னும் பெண்மீது பலாத்கார பாலுறவில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து கானும் பைசாலும் கைது செய்யப் பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

தற்போது கானும் பைசாலும் ஐயாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் தரப்பிலிருந்து ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதாலேயே பிணை வழங்கப்பட்டுள்ளது.

பலாத்கார பாலுறவு குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்படுபவர்கள் வைத்திய பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கும் வரை விடுதலை செய்யப்படுவதில்லை. அவ்வாறு விடுதலை செய்யப்படுவதைப் பொலிஸார் ஆட்சேபிப்பதும் உண்டு. வெள்ளைவேன் கோஷ்டியினர் விடயத்தில் பொலிஸார் வழக்கத்திற்கு மாறாகச் செயற்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் புலிகள் தேடுதல் வேட்டை!

### குண்டுவைத்ததாக குடும்பஸ்தர்கள் கைது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மர்மக் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்று வருவது குறித்து கடந்த இரு வாரங்களாக முரசு செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

புலிகள் இயக்க உள் முரண்பாடுகளே குண்டு வெடிப்புக்களின் பின்னணியில் இருந்தன. இதேவேளை மட்டக்களப்பில் புலிகளுக்குள் ஏற்பட்ட உள்மோதல்களைப் படைத்தரப்பினரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடும் என்று நம்பப்படுகிறது.

குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயித்தியமலையில் நடைபெற்ற கிறிஸ்தவ தேவாலய உற்சவத்தின் போது புலிகளால் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இளைஞர்கள் சிலரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

தமது உறுப்பினர்கள் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தியவர்களையே கைது செய்ததாகப் புலிகள் கூறியிருந்தபோதும் கைது செய்யப்பட்டவர்களைப் பின்னர் விடுதலை செய்து விட்டனர்.

பருத்திச்சேனை, கொத்தியாபுலை பகுதிகளில் குடும்பஸ்தர்கள் சிலரும் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களால் இதுவரை ஏழு புலிகள் பலியாகியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பலியானோர் விபரம்

12.09.95 அன்று யாழ் குடாநாட்டில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை காரணமாக பலியான பொதுமக்களில் எமக்கு கிடைத்துள்ள பெயர் விபரங்கள்-

1. அருந்தவராஜா சஹானா-வயது 6, புன்னாலைக்கட்டுவன். 2. பத்மநாதன் தேவசுதர்சினி-வயது 17, ஏழாலை. 3. தேவராசா தாட்சாயினி-வயது 20, சுன்னாகம். 4. தேவராசா ருஜீவன்-வயது 12, சுன்னாகம். 5. தேவராசா மைதிலி-வயது 10, சுன்னாகம். (மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்). 6. மனோன்மணி இராமச்சந்திரன்-வயது 44. 7. சாந்தி மகேந்திரன்-வயது 32, அச்செழு. (இவர் ஒரு ஆசிரியை. 6 பிள்ளைகளின் தாயார்). 8. ராணி கனகசபை-வயது 34, அச்செழு. 9. வோல்டர் வைத்திலிங்கம்-வயது 73, ஏழாலை. 10. சபாரத்தினம் சுகந்தி-வயது 19, குப்பிளான். 11. ஐ. தவபாலசிங்கம்-வயது 39, கந்தரோடை.

### பலியான புலிகளின் விபரம்

1. கப்டன் வாணி, குருநகர், 2. கப்டன் கிருஸ்ணா, புத்தூர், 3. செங்குட்டுவன் (நல்லதம்பி அருளானந்தம்) மட்டக்களப்பு. 4.லெப்டினன்ட் தயாளன் (சுப்பிரமணியம் சாந்தகுமார்-சித்தங்கேணி).5.காந்தி (இராசையா சுபாஸ்கரன்- உரும்பிராய் கிழக்கு).

## விவசாயிகளிடம் நெல் பறிப்பு

### ரெலோ மீது குற்றச் சாட்டு

மட்டக்களப்பில் உள்ள செங்கலடி பாலத்தில் படையினருடன் சேர்ந்து ரெலோ அமைப்பினர் மக்களை தொல்லைப் படுத்திவருகிறார்கள். நெல் மூட்டைகளுடன் வரும் விவசாயிகளிடம் நெல் அல்லது பணம் பறிக்கப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்தும் மாதாந்தம் குறிப்பிட்ட தொகைப் பணம் அறவிடப்படுகிறது. இவ்வாறு புலிகளின் குரல் வானொலியில் 17.09.95 அன்று தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ உறுப்பினர்கள் புலிகள் அமைப்பினரால் கொல்லப்பட்டு வருகின்றனர். அந்த நடவடிக்கைகளுக்கு விளக்கமளிக்கும் வகையிலேயே புலிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புலிகள் அமைப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளிடம் நெல் மூட்டைகளை பெற்றுக்கொள்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# திருத்தச் சென்ற தொலைபேசி திரும்பி வராததேனோ?

(அம்பாறை மாவட்ட நிருபர்)

பொதுத் தொலைபேசி வசதிகளின்றி நிந்தவூர் பகுதி மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக, நிந்தவூர் பிரதம தபாலகத்தில் தொலைபேசி அழைப்புக்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், வெளியிடங்களுக்குத் தொலைபேசி மூலம் அவசர தேவைகளுக்குக்கூட தொடர்பு கொள்ள முடியாத பெரும்கஷ்டநிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

சுமார் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் நிந்தவூரில் தொலைபேசி அழைப்புக்களைப் பெறக்கூடிய தனியார் தொலைபேசி நிலையங்கள் ஒன்றுகூட இல்லாத நிலையில் பிரதம தபாலகத்தையே மக்கள் நாடிவந்தனர்.

நிந்தவூர் பிரதம தபாலகத்தில் தபால் அதிபருக்கென ஒரு தொலைபேசியும் (067-2495) பொது மக்களுக்கு அழைப்புக்களை வழங்கவென மற்றொரு தொலைபேசியும் (067-2496) பொருத்தப்பட்டிருந்தன.

பொதுமக்களுக்கு தபாலகத்தில் அழைப்புக்களை வழங்கவென இயங்கிவந்த தொலைபேசியை கடந்த 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கல்முனை தொலைத் தொடர்புத் திணைக்கள ஊழியர்கள் திருத்த வேலைகளினிமித்தம் எடுத்துச் சென்றனர்.

ஆனால் இன்றுவரை குறித்த தொலைபேசியை மீண்டும் கொண்டுவந்து பொருத்துவதில் கல்முனைத் தொலைத்தொடர்புப் பிரிவினர் மௌனம் சாதித்து வருகின்றனர்.

இதனால் பொதுமக்களுக்கு பிரதம தபாலதிபருக்குரிய தொலைபேசி மூலமே இதுகாலவரை தொலைபேசி அழைப்புக்கள் வழங்கப்பட்டு வந்தன.

இருந்தும் தபால் திணைக்களத்தின் கண்டிப்பான உத்தரவு ஒன்று காரணமாக தபால் அதிபருக்கான தொலைபேசியை ஒரு குறிப்பிட்ட தொகைக் கட்டணத்திற்கு மேல் உபயோகிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் தற்பொழுது பொதுமக்களுக்கு அழைப்புக்களைக் கொடுக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

# கார்ட்டூன் மூலை




# சங்கங்களுக்குப் புறக்கணிப்பா? அதிகாரியால் அவமரியாதை

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை மீன்பிடித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் சட்டப்படி அமைக்கப்பட்ட மீனவர் சங்கங்களையே தமது சொந்த நலன் கருதிப் புறக்கணிக்கிறார்களா? அண்மையில் மீனவர் சங்கமொன்றின் நியாயமான கோரிக்கையைப் புறக்கணித்து அதன் தலைவரை மேற்படி உத்தியோகத்தர்கள் அவமரியாதை செய்ததைத் தொடர்ந்து கடற்றொழிலாளார் சங்கங்கள் மத்தியில் இவ்வாறான அச்சம் தோன்றியுள்ளது.

கடற்றொழில் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு ஒன்றைத் தொடர்ந்து தமது நிலையை விளக்குவதற்காகச் சென்றிருந்த அரசடி அர்ச் சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான திரு.இ.பாக்கியராசாவை, அவரது சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் மேற்படி அதிகாரிகள் அவமதித்ததாகவும், சுயலாபங் கருதித் தனிமனிதன் ஒருவருக்குச் சாதகமாக நடந்து சங்கத்தின் கோரிக்கையை அலட்சியப் படுத்தியதாகவும் பிரதேசச் செயலாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக கட்டுக்கோப்பாக இயங்கிவரும் பதிவு செய்யப் பட்ட தமது சங்கம், உத்தியோகத்தர் சிலரால் அவமதிக்கப்பட்டது, அடாத்தான செயல் என்றும் நீதி கிடைக்கும்வரை தாம் ஓயப்போவதில்லை என்றும் சங்கத் தலைவர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு குண்டு வெடிப்புக்கள் யாழில் இருந்து வந்த குழு விசாரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் உள்முரண்பாடுகள் பற்றி விசாரிப்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளின் உயர்மட்டக் குழுவொன்று மட்டக்களப்பு வந்து விசாரணைகளை மேற்கொண்டு திரும்பியுள்ளது.

கடந்த நான்கு தினங்களாக இக்குழுவினர் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

உள் முரண்பாடுகளால் ஏற்பட்ட மர்ம குண்டுவெடிப்பு சம்பவங்களைப் பற்றி பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அதனை திசைதிருப்புவதற்காக பொதுமக்களில் சிலரை புலிகள் கைதுசெய்துள்ளனர்.

இராணுவத்தினரின் கையாட்களாலேயே குண்டு வெடிப்புக்கள் மேற்கொள்ளப் பட்டதாக புலிகள் கூறிவருவதுடன் உன்னிச்சையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு மரண தண்டனையும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திலீபன் நினைவு நிகழ்வுகள்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரை வவுணதீவு போன்ற பிரதேசங்களில் கடந்த 12ம் திகதி முதல் இருவாரங்களுக்கு புலிகள்-உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் நினைவு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு தொடரும் நினைவுதின நிகழ்ச்சிகளுக்காக சிரமதானம், கருத்தரங்குகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தியாகி திலீபன் நினைவுதின நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவர்களையும் ஈடுபடுத்துமாறு புலிகள் பாடசாலைகளுக்குச் சென்று கேட்டுள்ளனர்.

# நேரம் ஒதுக்கியும் நிறைவில்லை ரூபவாகினி மீது நேயர் புகார்

தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ரூபவாஹினியில் தற்போது போதியளவு நேரம் ஒதுக்கித் தந்துள்ள போதும் அவற்றில் தரமான நிகழ்ச்சிகளை எம்மவர்கள் ஒளிபரப்புவதில்லை. ஒரே நிகழ்ச்சிகளையே மீண்டும் மீண்டும் ஒளிபரப்புகின்றனர்.

சனிக்கிழமைகளில் பிற்பகல் 1.00 மணிக்கு வழங்கப்பட்ட நேரத்தில் முன்பு ஒளிபரப்பிய நாடகங்களையே மீண்டும் மீண்டும் தருகின்றனர். ஏன் இந்நேரத்தில் புதிய நாடகங்களையோ அல்லது வேறு தரமான நிகழ்ச்சிகளையோ ஒளிபரப்ப முடியாதா?

வெள்ளிக்கிழமை 'ஒளி-ஒலி' நிகழ்ச்சியில் கடந்த இரு நிகழ்ச்சிகளில் அடுத்தடுத்து ஒரே பாடல்கள் ஒளிபரப்பாகின. ஏன் புதிய நிகழ்ச்சிகள் கிடைப்பதில்லையா?

'பொன்மாலைப்பொழுதில்' ஏதாவது புகார் கிடைத்தால் புதிய பாடல்கள் ஒளிபரப்பாகும். இரண்டு மூன்று நிகழ்ச்சிகளுக்கு பின் மீண்டும் பழையபடி மிகவும் பழைய பாடல்கள் ஒளிபரப்பாகின்றன.

நல்ல நாடகங்களோ அல்லது ஒளி-ஒலி புதிய நிகழ்ச்சியோ கிடைக்காதவிடத்து அந்நேரத்தை பழைய பாடல் நேசிக்கும் ரசிகர்களுக்கு ஒதுக்கலாமே?

இவற்றை நான் குறிப்பிடுவது ரூபவாஹினியை குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. எமது தமிழ் நிகழ்ச்சிகள் தரமாக அமையவேண்டும் என்பதற்காகவே.

(செல்வி.தி. சுஜிதா-பதுளை)

# தெளிவில்லாத தமிழ் ஒலிபரப்பு

பொகவந்தலாவை டின்சின் நோர்வூட் பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (FM) தமிழ் அலைவரிசையில் ஒலிபரப்பு தெளிவில்லை. ஆனால், சிங்கள, ஆங்கில (FM) அலைவரிசை தெளிவாக கேட்கமுடிகின்றது. மற்றும் தனியார்த்துறை ஒலிபரப்பான FM99 வானொலி தமிழ் அலைவரிசை முற்றாகவே கேட்பதில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவை.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

**தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான

**தினமுரசு வாரமலர் சந்தா விபரம்**

ஒரு வருடத்திற்கு–தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)

ஆறு மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 1145/= (26 வாரங்கள்)

மூன்று மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | | அமெரிக்கா/கனடா | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= (52 வாரங்கள்) | US $ 38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) | US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) | US $ 20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) | US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) | US $ 11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) | US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772, COLOMBO.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.


# வெளியூர் பயணிகள் திரும்பினர்

ஐரிஸ்மோனா கப்பல் பயணிகள் புலிகளின் பராமரிப்பிலேயே இருக்கின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும், பயணிகளின் உறவினர்களும் அவர்களை பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். தீவுப்பகுதிக்கு செல்லும் பயணிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அழைத்துச் செல்லும். அதற்கான கப்பல் ஒழுங்கை மேற்கொள்வதிலேயே தாமதங்கள் நிலவுகின்றன.

பயணிகளில் சிலர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலோ, தீவுப்பகுதிகளிலோ இருக்கவிரும்பவில்லை என்று கொழும்பு தமிழ் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. அது விளக்கம் இன்றி வெளியான செய்தியாகும்.

தீவுப்பகுதிகளில் உள்ள தமது உறவினர்களை பார்வையிடச் சென்ற வடபகுதிக்கு வெளியே வாழும் பயணிகளே தமது இடங்களுக்கு திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்தனர். தீவுப்பகுதி போக்குவரத்துக்கள் கேள்விக்குறியாகியுள்ளதால் அவர்கள் தீவுப்பகுதிக்குச் சென்றால் உடன் திரும்பிவரமுடியாது. அதனால் அவர்கள் தமது இடங்களுக்கு திரும்ப விரும்பினார்கள். அவர்களைத்தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக புலிகள் அனுப்பிவைத்தனர்.

# உதவிக்கு வந்தது வாடகைக்கு

அவுஸ்திரேலிய அரசினால் அம்பாறை மாவட்டத்தில் விதவைகளுக்கான உதவியாக வழங்கப்பட்ட சில தகரங்கள் பல இடங்களில் தக்கவைக்கப் பட்டிருக்கின்றன என்னும் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

மேற்படி வர்ண முலாம் பூசப்பட்ட 15 அடி தகரங்கள் சில வாடகைக்கும் விடப்படுகிறதாம். வெளிநாட்டு உதவிகளின் நிலை இப்படியும் போவதா?

அதற்காக எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளையும் குற்றம் சுமத்த முடியாது எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

"பரமசிவன் கழுத்தில்" இருந்தால் எதனையும் எப்படியும் நடத்தலாம் என்பது மிகவும் சுலபம்.


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ருபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு–

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336,3570.
FAX 0094523093 EXT 28



## Bright வெளியிடுகிறது!

உங்கள் உறவினர்கள் நண்பர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவிக்க பொருத்தமான, சிறந்த வாழ்த்துமடல்கள்

தீபாவளி வாழ்த்துமடல்கள்



BBC1முதல் BBC6வரை 12/00
வாழ்த்து அட்டைகள் - /75
(15வெவ்வேறு டிசைன்களில்)

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. T.P. 434770


# தமிழ் பிரிவு செயற்படுவதில் தாமதம்

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறைப் பிரதேச தமிழ்ப்பிரிவு 13.07.93ல் நடைமுறைக்கு வந்தது. ஆனால் இன்னும் அது பூரணமாக இயங்கவில்லை. சொறிக்கல்முனையில் அதன் அலுவலகம் கட்டப்பட்டிருப்பினும் சம்மாந்துறையிலேயே முழுப் பணிகளும் நடக்கின்றன. பிரதேச செயலாளர் எம்.ஐ. அமீர், தமிழ்ப்பிரிவு தனித்து செயற்படுவதில் தனக்கு எந்தவித ஆட்சேபனையோ கருத்து வேறுபாடோ இல்லை என்றார். அப்படியிருக்கும்போது இன்னும் ஏன் சொறிக்கல்முனை அலுவலகம் வெறிச்சோடிக் கிடக்கிறது? இதற்குரிய ஆவணங்கள், ஆளணிகள்-வாகனங்கள் வழங்கப்படுமா, என்று பாமர தமிழ் மக்கள் கேட்கிறார்கள்!

எங்கு தாமதம் உள்ளது எனப்பார்ப்பது யாருடைய கடமை?



படிப்பகம்

www.padippakam.com

# தவறி விழுந்த விமானமும் தப்புக் கணக்குகளும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

**செ**ப்டம்பர் 17ம் திகதி காலையில் 7.19க்கு அன்டநோவ் 32B ரக விமானம் விபத்துக்குள்ளானது.

அதைத் தொடர்ந்து வதந்திகளுக்கு தலை கால் புரியாத சந்தோசம். ஊகங்கள் என்னும் சிறகுகளைப் பூட்டிக்கொண்டு பறக்கத் தொடங்கிவிட்டன.

இந்த வதந்திகளுக்கும், ஊகங்களுக்கும் மூன்று காரணங்கள் அடிப்படையானவை.

1. இராணுவ தொழில் நுட்பம் பற்றிய விளக்கமின்மை. 2. புலிகளின் பலம் தொடர்பாக இருக்கக்கூடிய பிரமிப்பு. 3. இனவாதக் கண்ணோட்டம்.

இந்த மூன்று காரணங்களும் எவ்வாறு வெளிப்பட்டன என்று நோக்குவோம்.

அன்டநோவ் விமானம் என்பது இராணுவ போக்குவரத்துக்கு உதவும் விமானமே தவிர, சண்டையிடும் இயல்புகள் உள்ள விமானம் அல்ல.

இலங்கை அரசின் சக்திக்கேற்ப குறைந்த விலையில் வாங்கக் கூடிய விமானங்களாக இருந்தவை அன்டநோவ் விமானங்கள்தான்.

தற்போது உலகின் யுத்த முனைகளில் அன்டநோவ் விமானங்களுக்கு மவுசு கிடையாது. அன்டநோவ் விமானங்களை தாக்கிச் சாப்பிடுமளவுக்கு தரமும், வசதியும் கொண்ட இராணுவ போக்குவரத்து விமானங்கள் பாவனையில் உள்ளன.

உதாரணமாக அமெரிக்காவின் 'ஹெர்குலிஸ்' இராணுவ போக்குவரத்து விமானம்தான் தற்கால யுத்த முனைகளில் துருப்புக்களையும், இராணுவ தளபாடங்களையும் ஏற்றி இறக்குகின்றன. அவற்றையெல்லாம் இலங்கை வாங்கினால் கட்டுப்படியாகாது.

அன்டநோவ் விமானத்தை இந்தியா தனது மலைப்பிரதேசங்களில் பாவிக்கிறது.

ஆனால், ஒரு விஷயம். இந்தியா அன்டநோவ் விமானங்களை வாங்கும் போது சோவியத் யூனியன் ஒரு வல்லரசாக இருந்தது.

சோவியத் யூனியன் உடைந்த பின்னர் ரஸியாவின் ஆற்றல் பொசுக்கென்று இறங்கிவிட்டது. ஆயுத தளபாட உற்பத்திகளின் தரமும் வீழ்ந்துவிட்டது.

ஆக, இலங்கை அன்டநோவ் விமானங்களை வாங்கியது சோவியத் யூனியனிடமல்ல. ரஸியாவிடம். எனவே, புதிய அன்டநோவ் விமானங்கள் அவற்றின் முன்னைய தரங்களைக் கொண்டதாக இருந்திருக்கும் என்று நம்ப இடமில்லை.

தரக்குறைவு என்னும் நீண்டகாலப் பாவனைக்கு, அல்லது அதிவ் பறப்புக்கு ஒத்துழைக்காமல் போகும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

வீழ்ந்த விமானம் 150 தடவை பறப்பு நடத்தியிருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

அன்டநோவ் விமானத்தில் உள்ள சாதகங்களில் முக்கியமானது, சிறிய ஓடு பாதையில் தரையிறங்க முடியும். விமான எதிர்ப்பு ஏவுகணைகளை தடுத்து அதிக்க முடியும். அதிக உயரத்தில் பறக்க முடியும்.

ஏவுகணைகள் வருவதாகத் தெரிந்தால் ஒரு பட்டனை அழுத்திவிட வேண்டியதுதான். ஏவுகணைகளைத் தடுத்து திசைதிருப்பும் ஃஹீற் பலூன்கள் விமானத்தில் இருந்து வெளிவரும்.

வெப்பத்தை நாடிச் செல்லும் ஏவுகணை ஃஹீற் பலூனை விமானம் என்று நம்பித் தாக்கும். அழிந்து விடும்.

யுத்தம் நடக்கும் பகுதிகளுக்கு மேலாகப் பறக்கும்போதுதான் ஃஹீற் பலூன்களைப் பாவித்துக்கொண்டு செல்வது வழக்கம்.

எனவே-வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள பகுதியில் பறக்கும்போது ஃஹீற் பலூன்களை பயன்படுத்தி இருக்க முடியாது.

ஆனால்-விமானத்திற்கும் ராடர் நிலையத்திற்கும் இருந்த தொடர்பின்படி விமானம் 14 ஆயிரம் அடி உயரத்தில் கடல் பரப்புக்கு மேலாக பறந்திருக்கிறது.

விமானத்தை புலிகள் தாக்கியிருக்க வேண்டுமானால் கடலின் மத்தியில் படகுகளில் இருந்து தாக்கியிருக்க வேண்டும்.

அவ்வாறு தாக்குதல் நடத்துவதானால் தோளில் வைத்து இயக்கும் ஏவுகணைகள் மூலமே தாக்க முடியும்.

தோளில் வைத்து தாக்கும் ஏவுகணையால் அதிகமாகப் போனால் 9 ஆயிரம் அடி உயரம்வரைதான் சென்று தாக்க முடியும்.

புலிகளால் தாக்கப்பட்ட இரண்டு 'அவ்ரோ விமானங்கள்' தாழப் பதிந்து தரையிறங்கும் நேரத்தில் தாக்கப்பட்டன. முன்னேறிப் பாய்ச்சலை எதிர்த்துப் புலிகள் தாக்குதல் நடத்திய நேரத்தில் 'புக்காரா' வீழ்த்தப்பட்டது. 8 ஆயிரம் அடிக்கு உட்பட்ட உயரத்தில் பறக்கும்போதே 'புக்காரா' தாக்கப்பட்டது.

கம்யூட்டர் மூலமும், புதிதாக லேசர் கதிர்கள் மூலம் வழிநடத்தப்படும் ஏவுகணைகளும் வல்லரசுகளிடம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்போதைக்கு நமது போர்க்களங்களில் எதிர்பார்க்க முடியாது. அவற்றால் அதிக உயரத்திற்கு செல்ல முடியும்.

அவ்வாறான ஏவுகணைகள் இருந்தால் எந்தப்பக்கத்தால், எந்த உயரத்தில் சென்றும் வடக்கு-கிழக்கு இராணுவ தளங்களுக்கு விமானங்கள் செல்லவே முடியாதிருக்கும். அந்த ஏவுகணைகள் சந்தைக்கும் வருவதில்லை. வைத்திருக்கும் நாடுகளும் யாருக்கும் கொடுப்பதில்லை. தமக்கே ஆபத்தாகி விடுமோ என்று பயம்.

சரி, ஒரு வாதத்திற்காக புலிகள்தான் தாக்குதல் நடத்தியதாக வைத்துக் கொள்வோம்.

புலிகள் ஏன் உரிமை கோரவில்லை? புலிகள் உரிமை கோராமல் விட்டுள்ள நடவடிக்கைகளும் இருக்கின்றன. அவை, ஒன்றில் உள்நாட்டு மக்களது கண்டனத்திற்குரியவையாக கருதப்படும் நடவடிக்கைகள். அல்லது உலக கண்டனத்திற்கு உரியவையாக மாறக்கூடிய நடவடிக்கைகள். அதாவது புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக சித்தரிக்கக் கூடிய நடவடிக்கைகள். எனவே புலிகள் உரிமை கோராமல் இருப்பதுண்டு.

ஆனால், அன்டநோவ் விமானம் இராணுவ போக்குவரத்து விமானம். யுத்தம் நடத்தும் தேவைக்காக என்று வாங்கப்பட்ட விமானம். விமானத்தில் சென்றவர்களும் இராணுவத்தினர்தான்.

எனவே-அதனை எப்படி, எங்கு வைத்துத் தாக்கினாலும் போர்விதிகளுக்கு மாறானது என்று யாரும் கண்டிக்க முடியாது.

தவிர விமானம் கடலில் விழுந்திருக்கிறது. பொதுமக்கள் எவருக்கும் பாதிப்பில்லை. ஆகவே, புலிகள் உரிமை கோரியிருந்தால், இராணுவ கண்ணோட்டத்தில் புலிகள் நோக்கப்பட்டிருப்பார்கள். வியப்பாகவே பார்க்கப்பட்டிருக்கும்.

அது மட்டுமல்ல, இலங்கையின் வான் பரப்பே அச்சுறுத்தலுக்குள்ளான பகுதியாக கருதப்பட்டிருக்கும். பொதுமக்கள் பயணிக்கும் விமானங்கள் கூட வந்து செல்ல யோசித்திருக்க வேண்டிவந்திருக்கும். அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

ஏவுகணை தாக்குதல் நடத்தியிருந்தாலோ, பொதிகளுக்குள் குண்டுவைத்திருந்தாலோ புலிகள் அதனை உரிமை கோருவதற்கு எவ்வித தடையுமில்லை.

அதுமட்டுமல்ல, அன்டநோவ் விமானம் 150 தடவைகள் வரை யாழ் சென்று திரும்பியிருக்கிறது.

ஆனால், இலங்கை வானொலி 13.09.1995 அன்று தனது செய்தியில் 'அன்டநோவ் விமானத்திற்கு இன்றுதான் வெள்ளோட்டம்' என்று விவரம்கெட்டதனமாகச் சொன்னது.

அதனைக் கேட்டுவிட்டு யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலியும் அதையே திருப்பிச் சொல்லியிருந்தது.

இதிலிருந்து அன்டநோவ் விமானத்தின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள்-புலிகளால் கவனிக்கப்படவில்லை என்ற விசயமும் உறுதியாகிறது.

எனவே அன்டநோவ் விமானம் என்றால் உலகில் சிறந்த போக்குவரத்து விமானம், உலகின் யுத்த முனைகளில் பாவிக்கப்படும் விமானம் என்ற தரவுகள் பொய். அதுபோல புலிகளது ஏவுகணைத் தாக்குதல் என்பதும் அழகான வதந்தி. புலிகள் வல்லவர்கள் என்ற எண்ணம் ஆழப்பதிந்திருப்பதும் அவ்வாறான ஊகத்திற்கு காரணமாகும்.

ஆனால், ஒன்று, புலிகள் தாம் தாக்குதல் நடத்தாத நிலையிலும், "நாமே தாக்கினோம்" என்று ஒரு போடு போட்டிருந்தால் உலகமே நம்பியிருக்கும். அரசின் மறுப்பெல்லாம் யார் காதிலும் ஏறியிருக்காது.

தாக்குதலுக்கு உரிமைகோரி அரசை சிக்கலில் மாட்டியிருக்கலாம் அல்லவா? புலிகள் ஏன் செய்யவில்லை? என்று கேள்வி எழலாம்.

புலிகள் இராணுவ தொழில் நுட்பம் தெரியாதவர்களல்ல. விழுந்த விமானம் கண்டுபிடிக்கப்பட்டால் எப்படி விழுந்தது என்று தெரிந்துபோகும்.

ஏவுகணை தாக்கியிருந்தாலோ, குண்டு உள்ளே வெடித்திருந்தாலோ விமானச் சிதைவுகள் கடலில் மிதக்கும். கடலுக்கடியில் விமானம் சென்றிருக்க முடியாது.

ஒரு பொய்யைச் சொல்லி, தமது உண்மையான இராணுவ ரீதியான சாதனைகளையும் அடிபட்டுப் போகச் செய்ய புலிகள் முன்வரமாட்டார்கள்.

வதந்திகளுக்கு வாய்ப்பாக இருந்த மற்றொரு விடயம், விமான ஓட்டி பாக்கியநாதன் தமிழர் என்பதுதான்.

இத்தனைக்கும் பாக்கியநாதனுக்கு தமிழ் தெரியாது. அவரது தாயார் சிங்கள இனத்தவர். அவரது மனைவியும் சிங்கள இனத்தவர்தான்.

இன்னமும் சொல்லப்போனால் பாக்கியநாதன் புலிகளின் எதிரி. ஏனெனில், குண்டு வீசச் செல்லும் விமானங்களுக்கு ஓட்டுநர்கள் பலரை பயிற்சியளித்து உருவாக்கிவிட்டவரே அவர்தான்.

1987 இல் வடமராட்சியில் நடைபெற்ற பாரிய இராணுவ நடவடிக்கையான 'ஒபரேசன் லிபரேசனுக்கு' உதவியாக விமானங்களும் குண்டுவீச்சு நடத்தின. அப்போது விமான ஓட்டியாகச் சென்று குண்டுவீசியவரில் பாக்கியநாதனும் ஒருவர்.

அதெல்லாம் இருக்கட்டும். பாக்கியநாதன் புலிகளது ஆளாக இருந்திருந்தால் விமானத்தை கடலில் வீழ்த்தியிருக்கத் தேவையில்லை. விமானத்தை வைத்து தலைநகரில் விபரீதங்களை உரு வாக்கியிருக்க முடியும்.

தவராஜா என்னும் பொலிஸ்காரர் புலிகளது ஆளாக இருக்கமுடியாதா? முடியாது. தவராஜா புலிகளது ஆளாக இருந்திருந்தால் விமானம் விமானத்தளத்தில் மேலெழும் போதே விமானத்தை வெடிக்க வைத்திருக்கலாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய். விமான தளமே அழிக்கப்படும் அபாயம் நேர்ந்திருக்கும். கீழே எதுவுமில்லாத கடலுக்கு மேலே வெடிக்க வைக்கும் தேவை ஏற்படாது. அல்லது பலாலி இராணுவ விமானத்தளத்தில் இறங்கும்போது குண்டை வெடிக்க வைத்திருக்கலாம். பாரிய அழிவுகள் ஏற்பட்டிருக்கும். குண்டு வெடித்திருக்கவும் செய்திருக்கலாம் அல்லவா.

ஆகவே-பாக்கியநாதன் மற்றும் தவராஜா குறித்து எழுந்த தப்புக்கணக்குகள் இனவாத கண்ணோட்டம் காரணமாகவே உருவானவையாகும். இனவாதம் கண்ணை மறைக்கும். கணிப்புக்களையும் தவறாக்கிவிடும்.

'அன்டநோவ்' விமான விபத்து யுத்த முனையில் அரச படைகளில் இருக்கக்கூடிய மிகச் சில தமிழர்களையும் சங்கடத்திற்குள்ளாக்கிவிட்டது. சந்தேகத்திற்குட்படுவோமோ என்ற நிலைக்கு தள்ளிவிட்டது.

விமானம் வீழ்ந்த காரணத்தை தெளிவாக முன்வைக்க பல வழிகள் இருந்தும், தவராஜாவின் பின்னணியை ஆராய்கிறோம். பாக்கியநாதனின் பின்னணியை துருவுகிறோம் என்றெல்லாம் அரசதரப்பு சொல்ல முற்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஆக, இந்த நாட்டில் அரசியல் தீர்வு விடயங்கள் மட்டுமல்ல, அசம்பாவித விசாரணைகள்கூட இனவாதிகளை திருப்திப்படுத்தும் நோக்கில் செல்ல வேண்டியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

▫▫

**த**மிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

உரிமைகோரப்பட்டிருக்காவிட்டால் சந்தேகங்கள் தோன்றியிருக்கக்கூடும்.

தமிழ் நாட்டில் தற்போது எழுந்துவரும் இலங்கைத் தமிழர்கள் மீதான அனுதாப அலையை திசைதிருப்பும் முயற்சியோ என்று நினைக்கப்பட்டிருக்கும்.

ஆனால், சந்தேகங்களுக்கே இடமில்லாத வகையில், 'தமிழ்நாடு விடுதலைப் படை' உரிமை கோரியிருக்கிறது.

'தமிழ்நாடு விடுதலைப் படை' என்பது தமிழ் நாட்டை தனிநாடாக்கும் இலட்சியத்தோடு செயற்பட்டுவரும் அமைப்பாகும்.

இந்த அமைப்பின் நிறுவனரின் பெயர் தமிழரசன். தமிழ்நாட்டில் திருச்சியில் உள்ள வங்கியில் கொள்ளை நடவடிக்கை ஒன்றில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர். யார் என்று இனம்காணப்படாத நிலையில் பொது மக்கள் தாக்கியதால் கொல்லப்பட்டார்.

தமிழரசனின் மறைவின் பின்னர் 'தமிழ்நாடு விடுதலைப் படை'யினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டன.

'தமிழ்நாடு விடுதலைப் படை'யின் உறுப்பினர்கள் சிலருக்கு புலிகள் ஆயுதப் பயிற்சி வழங்கியதோடு, நிதி உதவியும் செய்தனர்.

இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருந்த போது தமிழ்நாட்டில் சில குண்டுவெடிப்புக்கள் 'தமிழ்நாடு விடுதலைப் படை'யினரால் மேற்கொள்ளப்பட்டன.

சென்னையில் கத்திபாரா சந்திப்பில் இருந்த நேரு சிலைக்கும் 1987 இல் குண்டுவைக்கப்பட்டது. புலிகளால் வடபகுதியில் பயிற்சி வழங்கப்பட்ட 'தமிழ்நாடு விடுதலைப் படை' உறுப்பினர்கள் சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

ராஜீவ் காந்தி கொல்லப்படும் முன்னர் அவருக்கு சாபமிட்டு ஒரு கவிதை எழுதியவர் கவிஞர் பெருஞ்சித்திரனார். 'தசை சிதறிப் போவாய்' என்று தனது கவிதையில் அவர் எழுதியிருந்தார். அந்த பெருஞ்சித்திரனாரி மகன் பொழிலன் என்பவர்தான் தமிழ்நாடு விடுதலைப்படையின் முக்கிய தலைவர்களில் ஒருவர். ராஜீவ் கொலையான பின்னர் பொழிலனும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டார்.

ஆக, 'தமிழ்நாடு விடுதலைப் படை' புலிகளோடு தொடர்புள்ள அமைப்பு என்பது தெளிவானது.

இலங்கை தூதரகத்திற்கு சென்னையில் குண்டுவைக்கப்பட்ட விடயம் தமிழ் நாடு மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தப் போவதில்லை

ஆனால், இந்திய அரசு புலிகள் விடயத்தில் மேலும், மேலும் சினம் கொண்டு விலகி நிற்கவே இவ்வாறான சம்பவங்கள் வழிவகுக்கின்றன.

தமிழ்நாட்டில் மீண்டும் புலிகளுக்கு ஆதரவாக அரசியல் வாதிகள் துணிந்து பேச முற்பட்டனர். அந்த நேரம் பார்த்து வேலூர் சிறையை உடைத்துக் கொண்டு புலிகள் தப்பிச் சென்றனர்.

அதனையடுத்து புலிகளுக்கு ஆதரவாகப் பேசியவர்கள் மெளனமாகி விட்டனர். புலிகள் தப்பிச் செல்ல உதவியதாக தாமும் மாட்டிக் கொள்ள நேரும் என்று யோசித்து விட்டனர்.

'நடந்தது நடந்ததாக இருக்கட்டும் இனி நடக்கப் போவது நல்லதாக அமையட்டும்' என்பது தான் தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவாளர்களின் கோஷம்.

ஆனால், தொடர்ந்தும் தமிழ்நாட்டில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவோராக தம்மைப் பற்றிக் கருதிக்கொள்ளும் வகையில் புலிகள் செயற்படுகிறார்கள். இதனால் 'நடந்தது நடந்ததாக இருக்கட்டும் என்ற பேச்சு அடிபட்டுப் போய் விடுகிறது. நடப்பதும் நல்லதாக இல்லையே. புலிகளை எப்படி ஆதரிக்க முடியும் என்று தமிழ்நாட்டில் உள்ள புலி எதிர்ப்பாளர்கள் கேட்கமுடிகிறது.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற குண்டுவெடிப்பும் இந்தியாவைச் சீண்டுவதாகவே அமைந்திருக்கிறது.

இலங்கைத் தூதரகத்திற்கு குண்டு வைக்கப்பட்டதால் இலங்கை அரசைவிட இந்திய அரசுதான் அதிகம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல தமிழ்நாடு விடுதலைப்படை உரிமைகோரி யிருப்பதால் இந்தியா மற்றொரு கோணத்திலும் யோசிக்கும். புலிகள் பலமாக இருப்பதும் அவர்களது போராட்டமும் தமிழ்நாட்டில் தீவிரவாத சக்திகள் வளர உதவும் என்று இந்தியா யோசிக்கும்.



பாக்கியநாதன் மனைவியோடு

ஆக,, எப்படிப் பார்த்தாலும் இந்தியாவில் இலங்கைப் பிரச்சனையை ஒட்டியதாக வன்முறைச் சம்பவங்கள் நடத்தப்படுவது விவேகமானதாக இருக்காது.

அதனால் தனிமைப்பட்டுக் கொண்டிருப்பது புலிகள் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களும் தான் என்பது கவனிக்க வேண்டிய விஷயம். ●

## அதிரடி அப்பாத்துரை



**வி**ழுந்த பறவையைத் தேட அயல் நாட்டு மூழ்கியை அனுப்புமாறு கேட்கப்பட்டதாம். கடுமையாக யோசிக்க வேண்டிய சமாச்சாரம் எண்டு சொல்லிப்போட்டுதாம் அயல் நாடு. மூழ்கியை அனுப்ப, ரெண்டு எழுத்தார் மூழ்கிக் கொண்டு வந்து இடிக்க, வம்பை ஏன் வாங்க வேணும் எண்டு யோசித்துப் போட்டினமாக்கும். இப்படியாகப்பட்ட நிலைமையிலை படை அனுப்பப்போகினம் எண்டு சிலர் செய்திகள் போடுறது சிரிப்பல்லோ.

**அ**யலகச் கஞ்சிகை ஒண்டுக்கு கூட்டாண கட்சியின் நீலமானவர் கட்டுரை எழுதுகிறவராம். யோசனையிலை சபைகளை கலைக்கும் அதிகாரம் மேலிடத்திற்கு இல்லை எண்டு எழுதியிருக்கிறாராம். நீதிக்குப் பொறுப்பானவரே சொல்லிருக்கிறார் "கலைக்கும் அதிகாரம் இருக்கு" தெண்டு. ஒரு வேளை நீலமானவர் பின்கதவு வழியாகப்போய் தயாரிக்க உதவிய யோசனையிலை கலைக்கும் அதிகாரம் இல்லாமல் இருந்திருக்கலாம். பிறகு மாத்தியல்லோ போட்டினம். அந்த நேரம் நீலத்தார் வெளிநாட்டிலை இருந்திருப்பாராக்கும்.

**த**ந்தை மகனை பறிகொடுத்த சோகத்திலை துடிச்சுப்போயிருக்கிறார். மனைவி புருஷனை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறா. அவைமிடம் போய் பலியானவருக்கும் ரெண்டு எழுத்தாருக்கும் தொடர்பு இருக்குதோ எண்டு கேட்டாராம் தலைநகர ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒருவர். உதை கொடுத்தல்லோ அனுப்பியிருக்க வேணும். இன்னொரு கதை தெரியுமோ? ரெண்டு எழுத்தாரும் பறவையை செலுத்தியவரை வசைபாடியிருக்கினமாம். மத்தளத்திற்கு ரெண்டுபக்கமும் அடி.

**க**னடாவிலை தமிழ் பத்திரிகைகள் பலப் பல, புதுசு புதுசா வெளிவரும் செய்தி மகிழ்ச்சியாக இருந்தது. பத்திரிகைகளை தருவிச்சு பார்த்தவுடனை வெறுத்துப்போச்சு. பத்துப் பத்திரிகைகளில் 9 பத்திரிகைகள் முரசை அப்படியே மறுபிரசுரம் செய்கினம். மறுபிரசுரம் செய்வதில் தான் போட்டி. அது என்னவோ தெரியேல்லை முரசை தழுவுவதில் உள்நாட்டிலும்-வெளிநாட்டிலும் கடும் போட்டி ஏற்பட்டுப் போச்சு. யாராவது புதுசா செய்தா என்ன? முரசுக்கும் ஒரு போட்டியாக இருக்குமல்லோ?

**ரெ**ண்டு எழுத்தார் பிடிச்ச கப்பலில் தமிழ் கட்சி ஒன்டின் உறுப்பினர்கள் இருப்பதாக செய்திகள் வந்ததை பார்த்திருப்பியள். தங்களுக்குத் தெரியாமலேயே உறுப்பினர்கள் இருக்கினமாக்கும் எண்டு அந்த தமிழ் கட்சித் தலைவர் ஜோக்கடிச்சவராம். ரெண்டு எழுத்தாருக்கும் அது தெரிஞ்சதாலைதான் வியாபாரிகள் இருவரைத் தவிர ஏனையோரை விட்டுப்போட்டினமாம். அதெல்லாம் கிடக்க, கப்பல் பயணிகளில் ஒருவர் செத்தது இயற்கை மரணம்தானோ எண்டு போன கிழமை சந்தேகப்பட்டனான் அல்லோ? சந்தேகம் சரிதான். கப்பலை பிடிக்கும்போது ரெண்டு எழுத்தார் வெடி வைச்சவையாம். அதிலைதான் அவர் காயப்பட்டவராம். சிகிச்சை இல்லாமல் இரத்தம் போய் செத்த வராம்! "ரெண்டு எழுத்தார் நன்றாக உபசரித்தனர்" இது ஒரு பத்திரிகைச் செய்தி. பகிடியாக்கும்.

**ப**யணிகளை கொண்டுபோய் ரெண்டு எழுத்தார் தங்கவைத்த இடத்திலை சின்னதாக ஒரு திருட்டு. பயணி ஒருவரின் எட்டாயிரம் ரூபாய் அபேஸ். ரெண்டு எழுத்து பொறுப்பாளர் ஒருவரிடம் முறையிடப்பட்டதாம். "அண்ணை எங்களை உப்பிடி வளர்க்கேல்லையே" எண்டு சொல்லிப் போட்டு பறிபோன பணம் திருப்பிக் கொடுக்கப் பட்டதாம்.

**சி**லரை நினைச்சா சரியான பரிதாபமாக கிடக்கு. ஒரு வருசத்துக்கு முன்பு பத்திரிகைச் சுதந்திரம் எக்கச்சக்கமாய் குவிஞ்சு போச்சு எண்டு எழுதினவை. எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் அப்படி நடக்காது எண்டு நாரதர் அப்பவே எழுதியிருந்தார். இப்ப பார்த்தியளோ, குவிஞ்சு கிடக்கு எண்டு எழுதினவை. ஒப்பாரி வைச்சு எழுதிக்கொண்டிருக்கினம். மாற்றங்களை நிதானமாக நோக்காமல் துள்ளிக்குதிக்கிறது. பிறகு மறுபக்கம் பாய்ஞ்சு ஒரேயடியாக கொதிக்கிறமாதிரிக் காட்டுறது. ஏன் உந்த வேலை?

**த**லைநகரிலை சைவக் கடைகளில் சோற்றுப் பாசல்கள் அன்பளிப்பாக வாங்கப்படுகிறதாம். கொடுக்காட்டி சாப்பிட வாறவையை ரெண்டு எழுத்தார் எண்டு பிடிச்சுக் கொண்டு போயிடுவினம். வியாபாரம் பட்டுப்போகும் எண்ட பயத்திலை மேலிடத்திற்கு புகார் செய்ய கடைக்காரர் பயப்படுகினமாம். வேலியே கூலி கேட்டால் என்ன செய்யுறது?

அமீர் மீனாயியின் கவிதை ஒன்று

"சங்கம இரவின் நேரம்
மிகக் குறைவாக இருக்கிறது.
வானமே தயவு செய்.
பிரிவு இரவின்
ஒரு துண்டையாவது
இதோடு இணைத்துவிடு."



படிப்பகம்

www.padippakam.com

# வான்படைமீது புலிகளின் முதலாவது தாக்குதல்

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

## பொலிஸார் எங்கே?

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளை உள்ளடக்கிய வன்னித் தளபதியாக மாத்தையாவே புலிகள் இயக்க நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்து வந்தார்.

05.08.84 அன்று ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி முன்னர் கூறியிருந்தேன்.

அத்தாக்குதலும் மாத்தையாவின் வழிநடத்தலில்தான் மேற்கொள்ளப்பட்டது.

அத்தாக்குதலையடுத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்த மாத்தையா திட்டமிட்டார்.

திட்டம் எல்லாம் வகுத்தாகி விட்டது. தாக்குதல் நடத்தும் அணிகளையும் ஒழுங்கு செய்து முடித்தாகி விட்டது.

தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் பொலிஸ் நிலையத்தை நோட்டமிட்டு வர ஒருவரை அனுப்பி வைத்தார் மாத்தையா.

நோட்டம் பார்க்கச் சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பொலிஸ் நிலையம் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. அங்கு பொலிஸார் யாருமே இருக்கவில்லை.

தாக்குதல் திட்டத்தை முன்கூட்டியே அறிந்தோ என்னவோ பொலிஸ் நிலையத்தை மூடிவிட்டு வாபஸாகியிருந்தனர் பொலிஸார்.

இன்னொரு முறை, தாக்குதல் ஒன்றுக்குப் பயன்படுத்த வாகனம் ஒன்று தேவையாக இருந்தது. வீதியில் காத்திருந்தனர். ஜீப் ஒன்று வந்தது. கை காட்டி நிறுத்தினார்கள்.



ஜீப்பை நிறுத்திய சாரதிக்கு விஷயம் விளங்கி விட்டது. சட்டென்று ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு பறந்து விட்டார். மாத்தையா உட்பட யாருமே அதனை எதிர்பார்க்கவில்லை.

இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அக்கால கட்டத்தில் வாகனம் ஒன்றைக் கடத்துவதுகூட கடினமான காரியமாக இருந்தது.

இப்போது விமானத்தையே புலிகள் கடத்தக்கூடும் என்று நினைக்கும் அளவுக்குப் போராட்ட அனுபவங்கள் வளர்ந்திருக்கின்றன.

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத் தாக்குதல் முயற்சி தோல்வி அடைந்த பின்னர்தான் இராணுவ ரோந்து அணியினர் மீது குறி வைக்கப்பட்டது.

அத்தாக்குதல் குறித்து சென்ற வாரம் குறிப்பிட்டு விட்டேன்.

## திலீபனுக்குப் பொறுப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான புலிகளின் பொறுப்பாளராகக் கிட்டு பொறுப்பேற்ற பின்னர் ஒரு பிரச்சனை எழுந்தது.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக யாரை நியமிப்பது என்பதுதான் பிரச்சனை.

யாழ்-பல்கலைக்கழக மாணவரான ரவிசேகர்தான் அரசியல் பொறுப்பாளர் பதவிக்குப் பொருத்தமானவர் என்று யாழ் மாவட்ட புலிகளில் ஒரு பகுதியினர் அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

ஆனால் கிட்டுவுக்கு ரவிசேகர் மீது அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் கிடையாது.

எனவே ரவிசேகரை நியமிக்காமல் திலீபனை யாழ் மாவட்டத்திற்கான புலிகளது அரசியல் பிரிவு பொறுப்பாளராக நியமித்தார் கிட்டு.

திலீபனும் கிட்டுவோடு இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சிக்குச் சென்று விட்டுத் திரும்பியிருந்தார்.

ரவிசேகரை ஓரம் கட்டியது யாழ்-பல்கலைக்கழகத்தில் இருந்த புலிகள் அமைப்பு உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர்களில் சிலர் இயக்க நடவடிக்கைகளைக் கைவிட்டு ஒதுங்கி இருக்கத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற பெயரில் புலிகள் அமைப்பினர் செயற்பட்டு வந்தனர்.

மறுமலர்ச்சிக் கழகம் ஒரு பொதுவான அமைப்பு என்று கூறப்பட்டு வந்தபோதும், புலிகள் அமைப்பினரின் ஒரு பிரிவாகவே இயங்கி வந்தது.

தளிர் என்னும் சஞ்சிகை ஒன்றும் அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டு வந்தது. மறுமலர்ச்சிக் கழக செயற்பாட்டில் ரவிசேகரின் பங்கும் முக்கியமானதாக இருந்தது.

உண்மையில் ரவிசேகருடன் ஒப்பிடும் போது திலீபனுக்கு அந்தக் காலகட்டத்தில் பொறுப்பு வழங்கப்பட்டமை முறையல்ல என்ற கருத்தில் நியாயமில்லாமல் இல்லை.

எனினும், பின்னர் திலீபனின் செயற்பாடுகளும் புலிகள் அமைப்பின் வளர்ச்சியைப் பொறுத்தவரை குறைசொல்ல முடியாததாகவே இருந்தது.

## கிட்டுவின் தாக்குதல்

இந்த நேரத்தில் கிட்டுவின் சாகசங்கள் பற்றியும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் ஹெலிக்கொப்டர் வந்து இறங்கும் போது தாக்குதல் நடத்த வேண்டும் என்று திட்டமிட்டார் கிட்டு.

குருநகர் இராணுவ முகாமுக்குச் சமீபமாக மாடி வீடு ஒன்று இருந்தது. அங்கு நின்று பார்த்தால் இராணுவ முகாமின் ஹெலி இறங்கு தளம் தெரியும்.

அங்கிருந்து தாக்குதலை நடத்த வசதி என்று நினைத்தார் கிட்டு.

ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர் ஆயுதங்களை இந்தியா இயக்கங்களுக்கு வழங்கியிருந்தது.

ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர்கள் கனரக வாகனங்களை ஊடுருவிச் சென்று தாக்கக் கூடியவை. தோளில் வைத்துத்தான் இயக்க வேண்டும். (விமான எதிர்ப்பு ஏவுகணை அல்ல) தரைத் தாக்குதல்களுக்கே அனேகமாகப் பயன்படுத்தப்படும்.

ஹெலிக்கொப்டர் தாழப்பதிந்து இறங்கும் போதோ அல்லது தரையிறங்கி நிற்கும் போதோ ஆர்.பி.ஜி ரக ரொக்கட் லோஞ்சர்களால் தாக்க முடியும்.

மாடி வீட்டில் ஆர்.பி.ஜியுடன் கிட்டு காத்திருந்தார். ஹெலி வந்து இராணுவ முகாமுக்குள் தரையிறங்கியது.

கிட்டு ஆர்.பி.ஜியைக் குறிபார்த்து இயக்கினார். ரொக்கட் கிரனைட் பறந்து சென்றது. ஆனால் குறி தவறி விட்டது.

இலக்குத் தவறி ரொக்கட் கிரனைட் வெடித்தவுடன் இராணுவத்தினர் உஷாராகி விட்டனர்.

கிட்டு ஆர்.பி.ஜியுடன் மாடி வீட்டிலிருந்து தப்பி ஓடிவிட்டார். எங்கிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை துல்லியமாக அறிந்து விரைந்து வந்தனர் இராணுவத்தினர். தாக்குதல் நடத்தியவர் அங்கு இல்லை. கண்ணில் பட்டவர்களை நையப்புடைத்தனர்.

கிட்டு நடத்திய தாக்குதல் தோல்வி அடைந்தபோதும் வான்படையினர் மீது புலிகள் நடத்திய முதலாவது தாக்குதல் முயற்சி அதுதான்.

வான்படையினர் மீதான தாக்குதல் முயற்சியை ஆரம்பித்து வைத்தவர் என்று கிட்டுவைச் சொல்ல முடியும்.

## தேடுதல் தந்திரம்

1985ம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளுக்குப் புதிய



தந்திரங்களைக் கையாள ஆரம்பித்தனர்.

மினிபஸ்ஸில் வேட்டி, சட்டை அணிந்து, விபூதி, சந்தனம் இட்டுக் கொண்டு பயணிகள்போல சென்று கொண்டிருப்பார்கள்.

சந்தேகப்படும்படியான இளைஞர்களைக் கண்டால் மினிபஸ்ஸை நிறுத்தி ஏற்றிக் கொள்வார்கள். மினிபஸ்ஸில் வைத்தே சாத்துப்படி நடக்கும்.

ஒரு முறை ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர் ஒருவரைத் தந்திரமாகத் தமது வாகனத்தில் ஏற்றிவிட்டனர்.

தனக்காக வாகனத்தை நிறுத்தி ஏற்றிக் கொண்டதால் வாகனத்திலிருப்பவர்கள் தமது இயக்கத்தினர்தான் என்று நினைத்துவிட்டார் அந்த உறுப்பினர். வாகனத்தில் இருந்த இராணுவ வீரர் ஒருவரை நோக்கி, "எப்படித் தோழர்?" என்று நலம் விசாரித்திருக்கிறார் அந்த உறுப்பினர்.

தோழர் என்ற பதத்தைப் பிரயோகித்ததை வைத்தே, மாட்டிக்கொண்டவர் ஏதோ ஒரு இயக்கப் போராளி என்று இராணுவத்தினருக்குப் புரிந்து விட்டது.

அந்த உறுப்பினருக்குப் பலத்த கவனிப்பு. அவரை வைத்தே வேறு சில உறுப்பினர்களுக்கும் வலை வீசிப்பிடித்தனர்.

அதே நேரத்தில் கவச வாகனங்கள் சகிதம் சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டே வந்தன.

26.04.85 அன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் உள்ள இன்பருட்டி என்னும் பகுதியில் இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

அங்கு நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்துவிட்டுக் காத்திருந்த புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

11 இராணுவத்தினர் பலியானார்கள். இராணுவக் கவச வண்டி ஒன்றும் சேதமானது.

ஆத்திரம் அடைந்த இராணுவத்தினர் பருத்தித்துறை நகருக்குள் புகுந்து பொதுமக்களைத் தாக்கினார்கள் நகரில் இருந்த கடைகளுக்கும் தீ வைக்க முயன்றனர்.

நகருக்குள் மறைந்திருந்த புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இராணுவத்தினரும் பதிலுக்குத் தாக்கினார்கள்.

அதில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டார் அல்லது காயமடைந்தார்.

## கரவெட்டியில்

28.04.85 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள கரவெட்டிப் பகுதியில் எட்டுக் கவச வாகனங்களில் இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

ரோந்து அணியினர் கரவெட்டியில் உள்ள நவிண்டில் வீதியை வந்தடைந்தனர்.

அங்கு நிலக்கண்ணி வெடிகள் புலிகளால் புதைக்கப்பட்டிருந்தன. ரோந்து வாகனங்களில் ஒன்று நிலக்கண்ணி மீது ஏறியதும் வெடித்துத் தூக்கியெறியப்பட்டது.

அந்த வாகனத்திலிருந்த எட்டு இராணுவத்தினர் பலியானார்கள்.

ஏனைய வாகனங்களில் இருந்து குதித்த இராணுவத்தினர், வயலுக்குள் பதுங்கி நிலை எடுத்து தாக்க முற்பட்டனர்.

வயலுக்குள் முன்கூட்டியே பதுங்கி தயார் நிலையில் இருந்த புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார்கள்.

பின்புறம் இருந்து தாக்குதலை எதிர் பார்க்காத இராணுவத்தினரால் பதிலடி நடத்த முடியவில்லை. பத்து இராணுவ வீரர்கள் பலியானார்கள்.

மொத்தமாகப் 18 இராணுவத்தினர் அத்தாக்குதலில் பலியானார்கள். புலிகள் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேநாள் அன்று மற்றொரு சம்பவம். பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

பொலிஸ் நிலையம் அருகில் இருந்தமையால் இராணுவத்தினர் வெகு அலட்சியமாக ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

மறைந்திருந்த இளைஞர்கள் கைக்குண்டுகளை எறிந்து தாக்குதல் நடத்தினார்கள். அதில் நான்கு இராணுவத்தினர் பலியானார்கள்.

ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட இந்த இரண்டு தாக்குதல்களும் அலைந்து திரிந்து தாக்கும் கெரில்லா யுத்த முறையில் புலிகள் தேர்ச்சி பெற்று வருவதை புலப்படுத்திக் கொண்டிருந்தன.

## திருமலையில் தாக்குதல்

திருமலையிலும் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று 26.04.85 அன்று நடத்தப்பட்டது.

இராணுவ ஜீப்வண்டி ஒன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் வைத்து நிலக்கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு இராணுவ லெப்டினன்ட் உட்பட ஆறு அல்லது ஏழு இராணுவத்தினர் பலியானார்கள்.

அப்போது திருமலையில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு சந்தோஷம் மாஸ்டர், புலேந்தி அம்மான் ஆகியோர் பொறுப்பாக இருந்தனர்.

1985இல் வடக்கு-கிழக்குக்கு வெளியே ஒரு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர் புலிகள். ஆயத்தங்கள் துரிதமாக நடக்கத் தொடங்கின.

(தொடர்ந்து வரும்)

## தொடராக நடந்த கெரில்லாத் தாக்குதல்கள்

45

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பெண் கடற்புலிகளின் கௌரவப் பிரச்சனை

கடற்புலிகளுக்கு இந்த மாதத்தில் மற்றொரு தோல்வி காங்கேசன்துறை துறைமுகத்தில் நேர்ந்திருக்கிறது.

10ம் திகதி அதிகாலை 12.55 மணிக்கு எடித்தாரா தரையிறக்கக் கப்பலை குறிவைத்து கடற்கரும்புலி அருள்ஜோதி என்றழைக்கப்படும் முத்துமோகன் சியாமளா நீருக்குள் இறங்கினார்.

இவர் அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்தவர்.

1994 ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்தில் ஊடுருவி எடித்தாரா கட்டளைக் கப்பலை தாக்கிய கடற் கரும்புலிதான் அங்கையற்கண்ணி.

அவரது பெயரில் உருவானதே அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவு.

ஜுலை 16–1995 அன்று புலிப்பாய்ச்சலின் ஒரு கட்டமாக காங்கேசன்துறை துறைமுகத்தில் நடந்த கடற்சமரில் கடற்கரும்புலிகளால் எடித்தாரா கட்டளைக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது.

அப்போது அங்கு தரித்து நின்ற தரையிறக்கக் கப்பல்மீது குறிவைத்து கரும்புலிகளின் மற்றொரு படகு நகர்ந்தபோதும் கடற்படையினர் அத்தாக்குதலை முறியடித்து விட்டனர். தரையிறக்கக் கப்பல் தப்பிக் கொண்டது. ஒரு பெண் கடற்கரும்புலி கப்டன் தமிழினி (சிவப்பிரகாசம் கனிமொழி– வல்வெட்டித்துறை) பலியானார். இன்னொரு பெண் கடற்கரும்புலி செவ்வானம் நீந்திக் கரை சேர்ந்தார்.

ஜுலை 16இல் தப்பிக்கொண்ட தரையிறக்கக் கப்பல்தான் செப்டம்பர் 10ம் திகதி குறிவைக்கப்பட்டது.

ஜுலை 16 கடற்சமரில் ஆண் கடற்கரும்புலிகள் இருவர் கட்டளைக் கப்பலுக்கும், பெண் கடற்கரும்புலிகள் இருவர் தரையிறக்கக் கப்பலுக்கும் தாக்குதல் நடத்த அனுப்பப்பட்டனர். ஆண் கடற்கரும்புலிகள் மட்டுமே பணியை முடித்தனர்.



ஜீலை. 16ல் எடித்தாராவைத் தாக்கிய கரும்புலிகளோடு பிரபாகரன்

## தப்பிக்கொண்ட கப்பலுக்கு மீண்டும் குறி

எனவே-தமது அணியால் தவறவிடப்பட்ட தரையிறக்கக்கப்பலை மீண்டும் தமது அணிதான் தாக்கவேண்டும் என்று கடற்புலிகள் மகளிர் அணியினர் விரும்பினார்கள்.

ஏனெனில், அது அவர்களுக்கொரு கௌரவப்பிரச்சனை.

அதனால்-கடற்புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த அருள்ஜோதியை கரும் புலியாக அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் தரையிறக்கக் கப்பல் எங்கு தரித்து நிற்கிறது என்பதை கடற்புலிகளின் வேவுப்பிரிவு நீரடி நீச்சல் மூலம் மோப்பம் பிடித்து அறிந்துகொண்டது.

தரையில் உள்ள முகாம்களை தாக்குவதற்குமுன் வேவு பார்ப்பது போல, கடலில் தரித்துள்ள கப்பல்களை வேவு பார்ப்பதும் வழக்கம்.

கடற்புலிகளின் விசேட வேவுப் பொறுப்பாளர் மேஜர் மோகன், விசேட வேவுப் படையைச் சேர்ந்த கப்டன் ராம்குமார் ஆகியோர் முன் கூட்டியே வேவு பார்த்து விட்டனர்.

அருள்ஜோதியை கடலில் வழிகாட்டி அழைத்துச் சென்று, இலக்கை காட்டிவிட்டு திரும்புவதுதான் அவர்கள் இருவரது பணியுமாகும்.

நீரடி நீச்சல் மூலமாக மூவரும் தரையிறக்கக் கப்பலை நோக்கிச் சென்றபோது கடற்படையினரின் கப்பலில் இருந்த ராடர்கருவி காட்டிக் கொடுத்து விட்டது.

இந்த நேரத்தில் ஒரு தகவல். கடற்கரும்புலிகளது தொடர் தாக்குதல்களையடுத்து கடற்படையினர் சக்திமிக்க ராடர் கருவிகளை பெற்றுள்ளனர். முன்னர் கடற்படையினரிடம் இருந்த ராடர்கருவிகள் கடும் மழை பெய்யத் தொடங்கிவிட்டால் சூழலில் நடப்பதைச் சொல்லத் தெரியாதவையாகவே இருந்தன.

இப்போதுள்ள ராடர்கள் மழைக் காலத்தில் மட்டுமல்ல, நீருக்கடியில் நடக்கும் நடமாட்டங்களையும் கண்டறியக் கூடியவையாக இருக்கின்றன. ஆனால், ராடர் கருவியை கவனிப்பவர் தூங்கிவிட்டால் அவ்வளவுதான்.

ராடர்கள் மூலம் கடற்கரும்புலியையும், கடற்புலிகளின் வேவுப்படையினர் இருவரையும் கண்டுபிடித்து கடற்படையினர் தாக்குதல் நடத்தினார்கள். மூவருமே பலியானார்கள்.

கடற்படையினர் எந்நேரமும் விழிப்பாக இருக்க மாட்டார்கள் என்று புலிகள் போட்ட தப்புக் கணக்கே செப்டம்பர் 10ல் நடந்த தோல்விக்கு காரணமாகும்.

படையெடுப்புக்கான ஆயத்தமும், அதே நேரம் அதைத் தடுக்க புலிகளது தாக்குதல் உத்திகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் கடற்படையினர் விழிப்பாக இருக்க மாட்டார்கள் என்று புலிகள் நினைத்ததுதான் தவறான கணிப்பு.

இதேவேளை-தரையிறக்கக் கப்பலை தாக்கிவிட்டு ஒரு கடற்கரும்புலி உட்பட மூவர் பலியானதாக யாழ்ப்பாணத்தில் புலிகள் அறிவித்தும் விட்டார்கள்.

யுத்தத்தில் எந்தவொரு தரப்பும் தமது மக்களுக்கு உண்மையான தரவுகளை வழங்க முன்வருவதில்லை என்பதை புலிகளும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

3.9.95 அன்று 'டோராவை' தாக்கும் முயற்சியில் இரண்டு கடற்கரும்புலிகள் பலியாகி இருந்தனர். அப்போதும் 'டோரா' தாக்கி மூழ்கடிப்பு என்றே புலிகள் அறிவித்திருந்தார்கள்.

யுத்தமுனையில் தமது தரப்புப்பற்றிய வெற்றிகளை மிகைப்படுத்திக் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று, எதிரிக்கு உற்சாகம் கொடாமல் இருப்பது. இதன் ஒரு கட்டம்தான் தமது தரப்பில் பலியானோர் பற்றிய விபரங்களை குறைத்துக் கூறுவது. இந்த உத்தியை அரசாங்கம்தான் அடிக்கடி பிரயோகிக்கிறது.

இரண்டு, தமது மக்களிடம் தம்மைப் பலமானவர்கள் என்று காட்டுவது. இதன் ஒரு கட்டம்தான் தோல்விகளை மறைப்பது. இந்த உத்தியை அரசாங்கம் அடிக்கடியும், புலிகள் அவ்வப்போதும் பிரயோகித்து வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# 'அன்டநோவ் அனர்த்தம்'

அலசுவது—இராஜதந்திரி

# புகட்டும் பாடம்

'அன்டநோவ்-32' – விமானப்படைப் போக்குவரத்து விமானத்துக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தம், இலங்கையின் இன்றைய யுத்த நிலவரம் குறித்து தலையைக் குழப்பி விடுவதாக இருக்கின்றது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து இரு 'அவ்ரோ' ரக விமானப்படை போக்குவரத்து விமானங்களை இலங்கைப் பாதுகாப்புப் படையினர் இழந்திருந்தனர்.

இதன் பின்னர் 'புக்காரா' என்ற குண்டு வீச்சு ஜெட் விமானம் ஒன்றையும் படையினர் இழந்திருந்தனர். தற்போது அன்டநோவ்-32 ரக புத்தம் புதிய விமானப்படைப் போக்குவரத்து விமானமும் கடலில் வீழ்ந்து மூழ்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய 12 வருடகால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் விமானப்படை சுமார் 6 விமானங்களைப் பறிகொடுத்துள்ளது.

இந்த விமானங்களில் இரண்டு குண்டு வீச்சு விமானங்களாகும். ஏனைய நான்கும் இராணுவப் போக்குவரத்து விமானங்களாகும்.

தரையில் இராணுவ கவசவாகனங்கள், ஜீப் வண்டிகள், டிரக்குகள், டாங்கிகள் என்று எண்ணிலடங்காத இராணுவ வாகனங்கள் கண்ணிவெடிகளில் சிக்கியும், வேறுவிதமான தாக்குதல்களுக்குள்ளாகியும் அழிந்து போயுள்ளன.

கடலில் 'எடித்தரா' என்ற வடபகுதிக் கடற்படையினரின் ஆணையிடும் கப்பல் உட்பட டோரா என்ற இஸ்ரேலிய தயாரிப்பு அதிவேக பீரங்கிப் படகுகள் பலவும், வேறு பல்வேறு தரத்திலுமான ரோந்துக் கப்பல்களும் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

எனவே தரை, கடல், ஆகாய மார்க்கமாக பெருமளவு உயிர்ச்சேதம், பொருட்சேதங்களை எதிர்கொண்ட நிலையிலேயே இலங்கையின்

## முப்படைகளிலும் முன்னணி அதிகாரிகள் அகன்ற நிலையில் தொடரும் யுத்தம்

ஆட்சியாளர்கள் தற்போதைய வடக்கு-கிழக்கு நிலவரத்தைக் கையாண்டு வருவதை அறிய முடிகின்றது.

'அன்டநோவ்-32' விமானம் ரஷ்யாவின் உக்ரேயின் குடியரசில் தயாரானதொன்றாகும்.

புத்தம் புதியவையாக அன்டநோவ்-32 ரகத்தைச் சேர்ந்த மூன்று விமானங்களை இலங்கை அரசு இரண்டரை மாதங்களுக்கு முன்னர் வாங்கியிருந்தது.

இந்த விமானங்கள் தலா 45 லட்சம் அமெரிக்க டாலர்கள் பெறுமதி வாய்ந்தவையாகும். சர்வதேசச் சந்தையில் ஒப்பீட்டளவில் பார்க்கும் போது நவீன விமானங்களைத் தயாரிக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் விமானப்படை போக்குவரத்து விமானங்களை விட விலையில் மிகக் குறைந்தவையாகவே ரஷ்ய உக்ரேயின் குடியரசின் அன்டநோவ் விமானங்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாகவே இலங்கை விமானப்படையும் தனது தேவைக்காக அன்டநோவ் விமானங்களை கொள்வனவு செய்திருந்தது.

இந்த அன்டநோவ் விமானங்களில் ஒன்றே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அண்மித்த ஜா-எலப் பிரதேச கடற்பகுதியில் வீழ்ந்து மூழ்கியுள்ளது.

ரஷ்யத் தயாரிப்பு அன்டநோவ் விமானங்களை இலங்கையின் அயல் நாடான இந்தியா அதிகளவில் கொண்டுள்ளது.

இந்தியாவுக்காகவே அதன் தேவைகளுக்கேற்ற விதத்தில் ஆரம்பத்தில் அன்டநோவ் விமானங்களை ரஷ்யா வடிவமைத்திருந்ததெனவும் சொல்லப்படுவதுண்டு.

இந்தியாவிடம் சுமார் 120 அன்டநோவ் போக்குவரத்து விமானங்கள் இருக்கின்றன. இந்த விமானங்களில் சிலவே 1987ம் ஆண்டு இந்தியப்படையினரின் இலங்கை வருகைக்குக் 'கட்டியம்' கூறுவதுபோல உணவுப் பொட்டலங்களையும் யாழ்குடாநாட்டில் போட்டிருந்தன.

இந்தியா 120 அன்டநோவ் விமானங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும் இதுவரை இந்த ரக விமானங்கள் இந்தியாவில் விபத்துக்குள்ளாகியிருக்கவில்லை.

இதற்கு இந்திய விமானப்படையின் அனுபவம் மிக்க தன்மையும், அங்குள்ள விமானிகளின் திறமையுமே முக்கிய காரணமாகும்.

கடந்த வாரம் இலங்கை விமானப்படையின் அன்டநோவ் விமானம் கடலில் மூழ்கிய சம்பவம், இலங்கை ஆயுதப் படைகளின் அனுபவம், முதிர்ச்சி, திறமை என்பவற்றுக்கு சவால் விடுவதொன்றாகவே அமைந்திருந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் அவ்ரோ ரக இரு போக்குவரத்து விமானங்களை இலங்கை விமானப்படை பறிகொடுத்திருந்தது. எல்.ரி.ரி.ஈயினர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தி அந்த இரு விமானங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சுட்டு வீழ்த்தியிருந்தனர்.

இதனையடுத்தே விமான எதிர்ப்பு ஏவுகணைகளைச் சமாளிக்கும் திறனுடன் கூடிய அன்டநோவ் விமானங்களை விமானப்படை பெற்றிருந்தது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளைச் சமாளிக்கும் திறன், மற்றும் எத்தகைய காலநிலையையும் தாக்குப் பிடிக்கும் வல்லமை ஆகியனவற்றை அந்த அன்டநோவ் விமானம் கொண்டிருந்த போதிலும் கட்டுநாயக்காவுக்கு மேற்கே தோன்றிய காலநிலைச் சீர்கேடு அந்த விமானத்துக்கு எமனாகியுள்ளது.

விமானத்தைச் செலுத்திச் சென்ற ஸ்கொட்ரன் லீடர் ரஞ்சித் ராஜசிங்கம் பாக்கியநாதன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ராடர் அவதான நிலையத்துடன் தொடர்பு கொண்டு தாம் எதிர்நோக்கிய காலநிலைச் சிக்கல் பற்றிக் கூறியுள்ளார்.

விமானி பாக்கியநாதனுக்கும், கட்டுநாயக்கா ராடர் அவதான நிலையத்துக்குமிடையே இடம்பெற்ற சம்பாஷணை தெளிவாகப் பதிவாகியுள்ளது.

காலநிலைச் சிக்கல் மட்டுமல்ல, இயந்திரக்கோளாறையும் தாம் எதிர்நோக்குவதாக பைலட் பாக்கியநாதன் குறிப்பிட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான அன்டநோவ் விமானத்தை ரஷ்யாவின் உக்ரேயின் குடியரசிலிருந்து இலங்கை வரை ஓட்டி வந்தவரும் பைலட் பாக்கியநாதனே.

ஒரு விமானியின் அனுபவம் அவர் எவ்வளவு மணித்தியாலங்கள் வரை விமானங்களைச் செலுத்தியுள்ளார் என்பதிலேயே தங்கியுள்ளது.

விமானப்படையில் 15 வருடகால அனுபவத்தைக் கொண்ட பைலட் பாக்கியநாதன் சுமார் 8 ஆயிரம் மணித்தியாலங்கள் விமானங்களைச் செலுத்தியுள்ளார்.


அனர்த்தத்துக்குள்ளான அன்டநோவ் விமானத்தைக் கூட 200 மணித்தியாலங்களுக்கு மேல் அவர் செலுத்தியுள்ளார். அவ்விமானத் தயாரிப்பாளர்கள் பைலட் பாக்கியநாதனுக்குச் சான்றிதழ் வழங்கி அன்டநோவ்வைச் செலுத்தும் திறமை அவருக்கிருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இலங்கை விமானப்படை றோயல் விமானப்படையாக இருந்த காலத்தில் (Royal Air Force) கணிசமானளவு தமிழர்கள் விமானப்படையில் விமானிகளாகப் பணி புரிந்தனர்.

அசாதாரணமாக விமானங்களை ஓட்டுவதிலும் மற்றும் விமானங்களை பழுதுபார்க்கும் தொழில்நுட்பப்பிரிவிலும் அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

காலப்போக்கில் இனவாதம் ஆயுதப்படையினருக்குள்ளும் ஊடுருவி தமிழ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் வழங்கப்படாது, அவர்களது திறமைகள் தகுந்த வகையில் கணிக்கப்படாததனாலேயே தமிழ் விமானிகள், அதிகாரிகள் ஆகியோர் ஆயுதப்படைகளிலிருந்தும் விலகி, தனிப்பட்ட விமானக் கம்பனிகளில் சேர்ந்திருந்தனர்.

இருந்தபோதிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும் ஒருசில திறமைவாய்ந்த தமிழ் விமானப்படை அதிகாரிகளில் ஒருவராகவே ஸ்கொட்ரன் லீடர் ரஞ்சித் ராஜசிங்கம் பாக்கியநாதன் விளங்கியுள்ளார்.


'அன்டநோவ்-32'


அமெரிக்க தயாரிப்பான 'ஸ்டிங்கர்' ஏவுகணை- குறிபார்க்கும் ஆஃப்கான் கிளர்ச்சியாளர்

கூடவே அண்மைக்காலங்களில் இலங்கை விமானப் படையின் தேவைக்கேற்ற விதத்தில் பெருமளவு விமானிகளை உருவாக்கும் போதனாசிரியராகவும் பாக்கியநாதன் பணிபுரிந்துள்ளார். புத்தம்புதிய அன்டநோவ் விமானத்தைக் கூட யாழ்குடாநாட்டுக்கு விபத்து நடந்த தினத்துக்கு முதல்நாள் பலதடவைகள் பைலட் பாக்கியநாதன் ஓட்டிச் சென்றிருந்தார்.

கடந்த 12 வருட கால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இலங்கையின் முப்படைகளும் ஆயுத தளபாடங்கள், மற்றும் பெறுமதி மிக்க விமானங்கள், கப்பல்கள் என்பவற்றை மட்டும் பறிகொடுக்கவில்லை.

இராணுவம், ஆகாயப்படை, கடற்படை ஆகியவற்றின் நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் நல்ல அனுபவஸ்தர்களாகவும் விளங்கிய பல முன்னணிப்படை அதிகாரிகளையும் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பறிகொடுத்துள்ளனர்.

எனவே வடக்கு-கிழக்கு யுத்தத்தில் கடந்த 12 வருடகாலமாக முப்படையினரும் முழுஅளவில் குதித்துள்ள போதிலும் எல்.ரி.ரி.ஈயினரை வெற்றிகொள்ளவோ அல்லது ஆட்சியாளர்கள் குறிப்பிடுவதுபோல் பலவீனப்படுத்தவோ முடியாத நிலையே காணப்படுகின்றது.

சந்திரிகா ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வாகத் தமது தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளனர். ஆனால் அத்தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்களால் பெற்றிபெறச் செய்ய முடியுமா என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது.

தீர்வு யோசனைகள் தொடர்பாக எல்.ரி.ரி.ஈயினருடன் பேசப்போவதில்லை என்று அரசியலமைப்பு, நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் கூறியிருந்தார்.

ஆனால் தாம் பங்குபற்றும் பொது வைபவங்கள், மற்றும் சர்வதேச அரங்குகளில் எல்லாம் வடக்கு - கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலமே நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியும் என்று ஜனாதிபதி உட்பட அவரது அமைச்சர்கள் பலரும் கூறிவருகின்றனர்.

எல்.ரி.ரி.ஈயினருடன் பேசப்போவதில்லை என்று அரசாங்கத்தின் ஒரு சாரார் கூறிவருவதும், மறுசாரார் அரசியல் தீர்வு பற்றி பிரஸ்தாபிப்பதனையும் அவதானிக்கும்போது இந்த நாட்டில் இடம் பெறுவது ஒரு பித்தலாட்டமான அரசியலோ? என்று எண்ணத்தோன்றுகின்றது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் திரு.ஜயந்த தனபால கடந்த வாரம் எல்.ரி.ரி.ஈயினர் தொடர்பாக நியூயோர்க்கில் வைத்து கருத்து வெளியிட்டிருந்தார்.

அப்போது அவர் "இலங்கையில் எல்.ரி.ரி.ஈ இயக்கம் தடை செய்யப்படவில்லை. அந்த இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் வகையிலேயே இலங்கை அரசாங்கம் அதனைத் தடை செய்யாது வைத்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

பிரச்னைகள் எவ்வளவு 'கர்ண கடூர'மான போதிலும் பேச்சுவார்த்தைகள் மூலமான அரசியல் அணுகு முறைகளினாலேயே தீர்வுகளை எட்ட முடியும் என்பதே இன்று உலகலாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது.

இந்த வகையிலேயே அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜயந்த தனபாலவும்

## வடக்கு-கிழக்கு யுத்தம் 'விரலுக்கு மிஞ்சிய வீக்கம்'

இலங்கை அரசு, எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் என்ற எதிர்பார்ப்புடன் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஆனால் இலங்கையில் அவரது எதிர்பார்ப்புக்கு நேர்மாறான விதத்திலேயே நிலமைகள் காணப்படுகின்றன.

'ஒப்பரேஷன் ஷேக் ஹான்ட்' என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஆறாயிரம் துருப்புக்களுடன் ஆயுதப்படையினர் ஆரம்பித்திருந்தனர்.

இந்த ஒப்பரேஷன் நடவடிக்கைக்கு உதவும் வகையிலேயே சுமார் 70 படையினரை ஏற்றிக்கொண்டு ஸ்கொட்ரன் லீடர் பாக்கியநாதன் செலுத்திய அன்டநோவ் விமானமும் வடக்கு நோக்கிச் செல்கையில் அனர்த்தத்துக்குள்ளாகியிருந்தது.

இந்த அனர்த்தத்துக்கு முன்பதாக பாதுகாப்புப்படை வட்டாரங்களை ஆதாரங்காட்டி வெளியிடப்பட்டிருந்த செய்தியொன்று இலங்கை அரசு ரஷ்யாவிடம் இருந்து மேலும் அதிகளவில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் வாங்குவதற்கு உத்தேசித்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரஷ்யாவிடமிருந்து மட்டுமல்ல இஸ்ரேலிடமிருந்து கூட 'டோரா' அதிவேகவிசைப் படகுகளையும், சீனாவிலிருந்து போர்க் கப்பல்களையும் வாங்குவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டிருப்பதாக அச் செய்தி மேலும் குறிப்பிட்டிருந்தது.

இலங்கையில் இன்று 12 வருட காலமாக இடம் பெற்றுவரும் கொடிய ஆயுதங்களுடன் கூடிய இப் பலப்பரீட்சை நாட்டில் இனவாத, பிரதேச வாத, மற்றும் மொழி வாத விஷத்தை மேலும் கக்குவதாகவே இருக்கின்றது.

இதுதவிர 'விரலுக்கு மிஞ்சிய வீக்கம்' போலவே இலங்கையின் ஆட்சியாளர்களும் கோடிகோடியாகப் பணத்தை வாரியிறைத்து வடக்கு-கிழக்கு யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரம் நிகழ்ந்த 'அன்டநோவ் அனர்த்தம்', தற்போது ஒருவருட ஆட்சிக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சந்திரிகா ஆட்சியாளர்களை இன்றைய நிலவரம் குறித்து நிதானத்துடன் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவே இருக்கின்றது.

ஒருவருட கால ஆட்சியே யுத்தமுஸ்தீபுகள் குறித்த சந்திரிகா ஆட்சியாளர்களுக்கு பாரிய இழப்புக்களுடன் கூடிய படிப்பினையை வழங்கியுள்ளது.

இந்நிலையில் யுத்த முஸ்தீபுகளே தொடர்ந்து கொண்டே இருக்குமானால் கோடிக்கணக்கில் பணமும், விலைமதிப்பற்ற உயிர்களும் வீணே விரயமாகிக் கொண்டிருப்பது இலங்கையில் சகஜமாகிவிடும்.


www.padippakam.com

# மனித வெடிகுண்டு 2

# கார்லோஸ் கார்லோஸ்

## தருவது ரசிகன்





**மொ**ஸ்கோவில் இருந்து பயிற்சிக்காக ஜோர்தானுக்கு புறப்படும் முன்னர் 'இலிச்' காணவிரும்பியது சோனியாவை.

சோனியா சக மாணவி. கியூபாவில் இருந்து வந்து படித்துக்கொண்டிருந்தவள். சோனியா ஏனைய மாணவிகளில் இருந்து வித்தியாசமாக இருந்தாள். பெண்களும் போராட வேண்டும் என்ற கருத்துக்கொண்டவளாக இருந்தாள்.

"ஆர்ஜென்டினா நாட்டில் பிறந்த சேகுவேரா கியூபாவுக்கு வந்து, கியூபா புரட்சியில் தளபதியாக இருந்தார். பொலிவியாவில் கெரில்லாயுத்தம் நடத்தப்போய் மரணத்தை அணைத்தார். ஆகவே, என் இனிய சோனியா கியூபாவில் பிறந்த நீ, வெனிசுலாவின் புரட்சியில் பங்கெடுத்தால் என்ன? ஏன் முடியாது? யோசி!"

இலிச் ஒருநாள் அப்படிக்கேட்டான். சோனியா யோசிக்கவில்லை. உடனே பதில் சொன்னாள்.

"இதிலே யோசிப்பதற்கு என்ன இருக்கிறது இலிச். புரட்சியாளர்களுக்கு போராடும் மக்கள் எல்லாம் தம்மக்கள் தானே, அதனால் தானே கியூபா கொடுத்த அமைச்சர் பதவியைத் தூக்கிப் போட்டுவிட்டு, பொலிவியாவில் போராடப் போனார் சேகுவேரா. எங்கெல்லாம் மக்கள் அடக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் புரட்சியாளர்களுக்கு வேலை இருக்கிறது. பூகோள எல்லைகள் புரட்சியாளர்களைப் பிரிக்கமுடியாது இலிச். எனவே, நான்தயார். எப்போது வரச்சொல்கிறாய்."

சோனியாவின் ஒவ்வொரு வார்த்தையிலும் தெளிவிருந்தது. திடமிருந்தது. மொழு மொழுவென்றிருந்த தனது கன்னத்தை விரல்களால் தேய்த்துக்கொண்டு இலிச் அவளைக் கூர்ந்து கவனித்தான்.

"என்ன பார்க்கிறாய் இலிச்?"

"ஒன்றுமில்லை சோனியா. உன்னைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு ஆடவேண்டும் போல் இருக்கிறது."

"வேண்டாம். நல்லகனம் இருப்பேன். வேண்டுமானால் ஒன்று செய். என்னை உன் இதயத்தில் தூக்கி வைத்துக்கொள். ஐ மீன் என்றும், எப்போதும் நிரந்தரமாக!"

இலிச்சுக்கு இன்ப அதிர்ச்சி.

"சோனியா......... நீ......"

"யெஸ். ஐ.லவ். யூ."

நெருங்கி அவன் கழுத்தை தன் கைகளால் கட்டிக்கொண்டாள். முகம் உயர்த்தி அவன் உதட்டில் ஆழமாக முத்தமிட்டாள்.

காதல் வளர்ந்தது.

இப்போது இலிச் சோனியாவை தேடிப்போகும்போது, சோனியா வயிற்றில் கரு வளர்ந்து கொண்டிருந்தது.

சோனியாவை சந்தித்தபோது அவள் சொல்ல, இலிச்சுக்கு உடனே சந்தோசம் பூவாய் மலர்ந்தது. அடுத்த நொடியே பிரிவை நினைக்கையில் சந்தோசம் வடிந்து போனது. தயங்கித் தயங்கி-தான் பிரியப் போகும் தகவல் சொன்னான். சோனியாவின் முகம் இருண்டது. விழிகளில் நீர் திரண்டது.

"பயிற்சி முடிந்ததும் நாம் சந்திக்கலாம். இருவராக அல்ல மூவராக."

இறுகத்தழுவினார்கள். இதுதான் இறுதிப்பிரிவாக இருக்கப்போகிறது என்று தெரியாமலேயே முத்தங்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

இலிச் புறப்பட்டான். விழிகளில் நீர் திரையிட கையசைத்துக் கொண்டிருந்தாள் சோனியா.

**ஜோ**ர்தானில் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் (P.F.L.P) பயிற்சி முகாம் அம்மான் நகரின் வடக்கே அமைந்திருந்தது.

ஓய்வுகால விடுதி என்று வெளியே காட்டிக்கொண்டார்கள். உள்ளே இராணுவப் பயிற்சிகள் நடந்துகொண்டிருந்தன.

இலிச் அங்குதான் அனுப்பப்பட்டான். முகாம் பொறுப்பாளர் அவனை விநோதமாகப் பார்த்தார்.

"நீ ஒரு பாலஸ்தீனியன் அல்ல. ஆனாலும் பாலஸ்தீனத்துக்காகப் போராட வந்திருக்கிறாய். நல்லது வரவேற்கிறோம். இறுதிவரை தாக்குப்பிடிப்பாயா?"

"இப்படியொரு கேள்வியை சேகுவேராவிடம் பிடல் கஸ்ரோ கேட்டதாகத் தெரியவில்லை. கியூபாவின் விடுதலைக்குப் போராட



கியூபர்கள் இருந்தபோதும், தலைமைக் கமாண்டராக சேகுவேராவை காஸ்ரோ நியமித்தார். காஸ்ரோ சந்தேகப்பட்டிருந்தால் கியூபா ஒரு சிறந்த போராளியை இழந்திருக்குமல்லவா?"

"சபாஷ்! இனி நீ எங்களில் ஒருவன்."

என்று சொன்ன முகாம் பொறுப்பாளர் பின்னாளில் உலகமே கிலிகொள்ளப்போகும் அந்தப் பெயரை உச்சரித்தார்.

"இன்றுமுதல் உனது பெயர் கார்லோஸ் என்று மாற்றப்படுகிறது. உனது சொந்தப் பெயரை இங்கே எங்கும் உபயோகிக்காதே. எவருக்கும் தெரிவிக்காதே. பயிற்சி இன்று முதல் ஆரம்பமாகும்."

கார்லோஸ் திரும்பி நடந்தான். முகாம் பொறுப்பாளர் அவன் முதுகின் பின்னால் நின்று அழைத்தார்.

"கார்லோஸ்"

சட்டென்று நின்று திரும்பிப்பார்த்தான் கார்லோஸ். பொறுப்பாளர் புன்னகைத்தார்.

"நல்லது, நீ கார்லோஸாகிவிட்டாய்."

□□

**வெ**ளிநாட்டவன் ஒருவன் பாலஸ்தீன விடுதலைக்கு தன்னை அர்ப்பணிக்க முன்வந்திருப்பது அபூர்வ சந்தோசம்.

P.F.L.P தலைவர் டாக்டர் ஜோர்ஜ் ஹபாஸ் கார்லோஸை காண விரும்பினார்.

நீண்டநேரம் பேசினார்கள். பேச்சின் இடையே கார்லோஸ் சொன்னான்;

"என் காதலி சோனியா கியூபா நாட்டைச் சேர்ந்தவள். பிறக்கப் போகும் குழந்தை எந்த நாட்டுக்குச் சொந்தம்? மனித குலத்துக்குத்தானே சொந்தம்! எனக்கு நாட்டு எல்லைகள் முக்கியமல்ல. தங்கள் இரும்புக் கரங்களால் இயலாத மக்கள்மீது சவாரி செய்துகொண்டிருப்பவர்களை தாக்குவது தான் முக்கியம்."

டாக்டர் ஹபாஸ் வியந்தார். ஹபாஸ் மகிழ்ந்தார்.

ஒரு சிறந்த தலைவனால் எதிரில் உள்ளவரை மதிப்பிட இயலும். எப்படி எங்கு திறமையை பயன்படுத்த வேண்டும் என்று தெரியும்.

டாக்டர் ஹபாஸ் மதிப்பிட்டார். கார்லோஸ் ஐரோப்பிய நாடுகளில் செயற்படமுடியும். இஸ்ரேலின் கூட்டாளி நாடுகளின் முகத்தில் குத்த முடியும்.

பாலஸ்தீனியன் என்றால் ஐரோப்பிய நாடுகளில் உடனே அடையாளம் காணப்பட்டு மடக்கப்படலாம். அல்லது கண்காணிக்கப்படலாம்.

ஆனால்....கார்லோஸ்?

ஐரோப்பியர்களில் ஒருவனாகவே கலந்து விடுவான். கண்களில் மண்ணைத் தூவி விடுவான்.

இஸ்ரேலுக்கு உதவுவதும், பாலஸ்தீனர்களின் உணர்வுகளை புறங்கையால் அலட்சியம் செய்வதும் எவ்வளவு ஆபத்தானவை என்று ஐரோப்பிய நாடுகளுக்கு அடித்துச் சொல்லியே ஆகவேண்டும்.

கார்லோஸை வைத்து அடிக்கலாம்.

டாக்டர் ஜோர்ஜ் ஹபாஸ் உத்தரவின்படி கார்லோஸுக்கு வெடிகுண்டுகளை தயாரிப்பதில் விசேஷ பயிற்சி கொடுக்கப்பட்டது.

**ப**யிற்சி முடிந்தவுடன் கார்லோஸை சந்தித்தார் ஒரு முக்கியமான நபர்.

பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் அவர்தான்.

அவரது பெயர் டாக்டர் வாடிஹட்டாட்.

மருத்துவத்துறையில் கல்விகற்ற டாக்டர் வாடிஹட்டாடுக்கு அடிக்கு அடியே மருந்து என்பதில் அளவுகடந்த நம்பிக்கையிருந்தது.

அவர் வகுத்த ஒவ்வொரு திட்டமும் பயங்கர வன்முறையை பறைசாற்றுவதாக இருந்தது.

கார்லோஸை வைத்து டாக்டர் ஹட்டாட் வகுத்த திட்டமும் பயங்கரமானது.

பாலஸ்தீன விடுதலைப் போருக்கு ஆதரவளிக்காத அரேபிய செல்வந்தர்களை கடத்திவந்து பணம் கறக்க வேண்டும்.

இஸ்ரேலியர்களுக்கு உதவிக்கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள செல்வந்த யூதர்களை ஒழித்துக்கட்ட வேண்டும்.

திட்டம் கார்லோஸுக்கு பிடித்திருந்தது. டாக்டர் வாடி ஹட்டாட் கார்லோஸோடு கைகுலுக்கினார்.

> **கார்லோஸ்**
> **பாலஸ்தீன விடுதலைப் போரில் இணைந்து போரிட்டு–தனியாளாய் நின்று உலகைக் கலக்கியவன்.**
> **கார்லோஸ்.**
> **கார்லோஸின் கதையில் துணிகரம் உண்டு–**
> **காதல் உண்டு.**
> **நம்பமுடியாத திருப்பங்கள் உண்டு.**
> **தொடர்ந்து வாசியுங்கள்.**

கார்லோஸ் இலண்டனுக்கு புறப்பட்டான். இலிச் என்ற பெயரிலேயே விமானத்தில் பயணம் செய்தான்.

**ல**ண்டனில் ஜோசப்எட்வேர்ட்டின் பங்களா செல்வச் செழிப்பை தெரிவித்துக் கொண்டிருந்தது.

ஜோசப் எட்வேர்ட்டுக்கு இஸ்ரேல் வளர வேண்டும். இஸ்ரேல் வலுவாக வேண்டும். இஸ்ரேல் வல்லரசாக வேண்டும் என்பது மூச்சாக இருந்தது.

வட இலண்டனில் இருந்த ஜோசப் எட்வேர்ட்டின் பங்களாவும், அவரது நடவடிக்கைகளும் ஒரு இளைஞனால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கண்காணிக்கப்படுவது தெரியாமல் ஜோசப்எட்வேர்ட் இஸ்ரேலை எப்படி இன்னும் உயர்த்தலாம் என்று யோசித்து... நண்பர்களை அழைத்து ஆராய்ந்து, நானும் கொடுத்துக்கொண்டிருக்கிறேன், நீங்களும் கொடுக்கலாம். பணமா பெரிசு.? நாடுதானே உயர்த்தி. கொடுங்கள்... என்று அறிவுரை செய்து கொண்டு...

ஜோசப்எட்வேர்ட் பிஸியாக இருந்தார். ஜோசப்எட்வேர்ட் குறியில் இருந்தார்.

ஜோசப் எட்வேர்ட் வெளியே செல்லும் போது பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது.

ஆயுதம் ஏந்திய இரண்டு பொலிசார் அரண்போல் செல்வார்கள். வீட்டிலிருக்கும் போது பாதுகாப்புக்கிடையாது. "தேவையில்லை" என்றுவிடுவார்.

அதையும் கவனித்துக் கொண்டான் அந்த இளைஞன்.

அன்றுதான் ஜோசப்எட்வேர்ட்டைத் தீர்த்துக் கட்ட திகதி குறித்த நாள்.

அந்த இளைஞன் தனது மோட்டார் வண்டியில் புறப்பட்டான்.

நேரம் மாலை – 7மணி.

இலண்டனை முழுதாக வாரித்தழுவிக் கொண்டிருந்தது பனிப்படலம்.

எல்லோரும் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தார்கள்.

மோட்டார்வண்டி ஜோசப்எட்வேர்ட்டின் வீட்டுவாசலில் வந்து நின்றது.

அவன் தனது கோட் பொக்கற்றுக்குள் இரண்டு கைகளையும் விட்டுக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். பயங்கரமாகக் குளிர்ந்தது.

வீட்டுக்கதவை நெருங்கியதும் தனது கைகள் இரண்டையும் வெளியேஎடுத்து சோம்பல் முறிப்பது போல உயர்த்திக் கொண்டு சுற்றும் முற்றும் நோக்கினான். யாருமே இல்லை.

அதிஷ்டம்தான்!

அழைப்பு மணியை அழுத்தினான். இப்போது தனது வலதுகரத்தை கோட் பொக்கற்றுக்குள் விட்டுக் கொண்டான்.

கதவு திறந்தது. அது ஜோசப்எட்வேர்ட் அல்ல, அவரது பணியாள்.

"யார் நீங்கள்?"

பணியாளன் கேட்டுமுடித்த மறுகணம் இளைஞனின் வலதுகரம் துப்பாக்கியோடு உயர்ந்தது. பணியாளனின் கன்னத்தில் அழுத்தியது.

அப்படியே பணியாளனை உள்ளே தள்ளி கதவை தன் காலால் உதைத்து மூடினான்.

பனிக்கட்டியாய் உறைந்து நின்ற பணியாளனிடம், "வாயைத்திறந்தால் செத்துப் போவாய். எனக்கு நீ வேண்டாம். உன் எஜமான் வேண்டும், அழைத்துச் செல்"

ஜோசப்எட்வேர்ட் குளியலறையில் வெந்நீரில் இரசிப்பான குளிப்பொன்று நடத்திக் கொண்டிருந்தார்.

குளியலறையின் கதவின் முன்பாக பணியாள் போய் நின்றான். உள்ளே குளிக்கும் சத்தம் கேட்டது. கதவைத்தட்டு என்று சைகையால் உத்தரவிட்டான் இளைஞன். சொன்னபடியே தட்டினான்.

எட்வேர்ட் ஒரு டவலைச்சுற்றிக் கொண்டு கதவைத் திறந்தார். அதே நொடியில் பணியாளனைபிடித்து மறுபுறம் தள்ளி விட்டு, எட்வேர்டை குறிவைத்து.

-டுமீல்-

நெற்றிக்கு வைத்த குறி பதட்டத்தில் தவறியது. எட்வேர்ட்டின் மூக்குக்கும் வாய்க்கும் இடையே குண்டு பாய்ந்தது.

இரண்டாவது தடவை விசையை அமுக்கினான். விசை அமுக்கப்பட்டது, குண்டு மட்டும் உள்ளே சிக்கிக் கொண்டு வெளியே வரமறுத்தது.

மூன்றாவது தடவையும் முயன்றான். கைத்துப்பாக்கி கையை விரித்து விட்டது.

அந்த இளைஞன் ஓடத்தொடங்கினான்.

அந்த இளைஞன் கார்லோஸ்.

கார்லோஸ் தனது மோட்டார் வண்டியை நோக்கி தப்பிவிடும் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தான்.

(துணிகரங்கள் தொடரும்)

---

# ஹலோ டாக்டர்


## உங்களுக்கும் வால் இருக்குத் தெரியுமா?

"வணக்கம் டாக்டர், என் நண்பன் ஒருவனுக்கு நீண்ட நாட்களாக வயிற்றில் வலி இருக்கிறது. குடல்வால் (அபெண்டிசைடிஸ்) நோயாக இருக்குமோ டாக்டர்?"

"பரிசோதித்துத்தான் சொல்ல வேண்டும். ஆனாலும் 'அபெண்டிசைடிஸ்' நோய்க்குரிய அறிகுறிகள் சிலவற்றைச் சொல்கிறேன். அடிவயிற்றின் வலது பக்கம் எரிச்சல், வலி அதிகமாகும். வயிற்றின் மேல், கீழ் பாகங்களில் வலி உருவாகும். 100 டிகிரிவரை காய்ச்சல் இருந்துவரும். நாடித்துடிப்பும் அதிகரிக்கும்."

"மாத்திரைகளால் குணப்படுத்திவிட முடியுமா டாக்டர்?"

"அபெண்டிசைடிஸ் நோய் அதிகமாகும் போது அதன் வீக்கம் ரணமாகி அடி



வயிற்றையும், சிறுநீரகப் பகுதியையும் பாதிக்கிறது. இந்த நிலையில் ஒபரேசன் செய்து குடல்வாலை நீக்குவதுதான் ஒரேவழி. ஒரு மணி நேரத்தில் ஒபரேசனை முடித்துவிடலாம். ஒரு வாரம் கழித்து தையல் பிரிப்பார்கள். சில காலம்வரை கடுமையான உணவுகளை தவிர்த்து, எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவு வகைகளையே சாப்பிட்டு வரவேண்டும்."

"சிறுவர்களுக்கும் அபெண்டிசைடிஸ் வருமா டாக்டர்?"

"அதற்கு வயது வித்தியாசம் எல்லாம் கிடையாது. யாரையும் தாக்கும்!"

"காரணம் என்ன டாக்டர்?"

"உணவுப் பழக்க வழக்கங்கள் மாறும் போது இந்த நோய் உருவாகிறது. கீரை போன்ற உணவுவகைகளைச் சாப்பிட்டு வந்தால் அபெண்டிசைடிஸ் தாக்குதலை தவிர்க்கலாம். சில வகையான மாமிச உணவுகள் மூலமும் பாக்டீரியாக்கள் பெருங்குடலில் நுழையும் போதும் குடல்வால் பாதிக்கிறது. சுத்தமில்லாத உணவும் ஒரு காரணம்."

"டாக்டர் குடல்வால் என்கிறீர்களே. அது எப்போது தோன்றுகிறது?"

"பிறக்கும் போதே தோன்றுகிறது. இராமாயணத்தில் அனுமானுக்கு வால் பின் பக்கம் உள்ளது. மனிதர்களுக்கும் முன்பு அப்படித்தான் இருந்தது. இப்போது உடலின் உள்ளே இருக்கிறது."

"மூதாதையர்களின் நினைவாக இருக்கிறது என்கிறீர்கள். ஆச்சரியம்தான்."

"பெருங்குடலின் தோற்றம் சுருண்டு சுருண்டு இருக்கும். இந்தக் குடலின் இறுதியில் வால் போல ஒன்று வெளியே நீண்டிருக்கும். இந்தக் குடல் வால் 10 சென்ரிமீற்றர் நீளமும், 1.5 செ.மீற்றர் சுற்றளவும் கொண்டது."

"சிறுவயதிலேயே வாலை 'நறுக்' பண்ணி விட்டால் என்ன டாக்டர்?"

"செய்யலாம். ஆனால் சிலரது உணவு பழக்க வழக்கத்தால் நோய் வராதபோது குடல்வாலால் பிரச்சனை இருக்காது. அது தன் பாட்டில் இருந்துவிட்டுப் போகும். நோய் வந்தால்தான் 'குடல்வாலை' துண்டித்துவிடுகிறோம்."

"குடல்வால் நோய் (அபெண்டி சைடிஸ்) உயிரைப் பாதிக்கும் நோயா டாக்டர்?"

"இல்லையில்லை. மாத்திரைகளால் தீர்த்துவிடலாம் என்று நீங்களே டாக்டராக மாறினால்தான் விபரீதமாகலாம்."

"டாக்டர்களைக் கேளாமல், டாக்டர்களைப் பார்க்காமல், டாக்டர்கள் சொல்லாமல் எதையும் செய்து தொலைக்காதீர்கள் என்கிறீர்கள். அதுவும்சரிதான். அதற்காகத்தானே நீங்கள் சிரமப்பட்டு படித்து விட்டு வந்திருக்கிறீர்கள். சில டாக்டர்கள் நோயாளிகளோடு ஏறி விழுகிறார்களே. ஏன் டாக்டர்?"




"அவர்கள் டென்ஷன் டாக்டர்கள். சிலருக்கு தலையிலே கொஞ்சம் கனமும் இருக்கலாம். கவனிக்கும் முறையிலேயே நோயாளிக்கு 90 வீத நோய் தீர்ந்து விட வேண்டும். அதுதான் டாக்டரின் திறமை."

"சரியாகச் சொன்னீர்கள் டாக்டர். இப்போதெல்லாம் நோய் என்ன வென்றுகூட சரியாக கேட்காமல் மளமள வென்று துண்டெழுதித் தருகிறார்கள். பில் மட்டும் நெத்தியடியாக இருக்கும். ஓ.கே. வருகிறேன் டாக்டர்."

---


இரவல் சிரிப்பு □ இரவல் சிரிப்பு □ இரவல் சிரிப்பு □ இரவல் சிரிப்பு




நன்றி– குமுதம்

www.padippakam.com

# யானைக்கும் இப்போது இரண்டு கை



பயிற்சி இருந்தால் வித்தை சுலபம். சில வித்தைகள் அனுபவத்தால் வருகின்றன. சில வித்தைகள் பயிற்சியால் வருகின்றன. யானையாருக்கு அனுபவம் பாதி பயிற்சி மீதி. ஆகவே அசத்துகிறார். அமெரிக்காவில் உள்ள சாகசக்ககம்பனி ஒன்றில் இந்த யானையார்தான் சூப்பர் ஸ்டார். இப்போது ஒரு புதிர். இந்த யானையாருக்கு இருப்பது 2 கை. அவை என்ன? ஒன்று தும்பிக்கை மற்றது தன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை.

# கண்களை ஏமாற்றலாம்

படத்தில் இருப்பவர் பிரபல மஜிக் நிபுணர். ஸ்கொட்லாந்தில் உள்ள பழம்பெரும் கோட்டை வாசலில் சாகசம். செய்கிறார். கீழே அரைவாசி, மேலே மிகுதி அது எப்படி? அதுதான் மஜிக். அதுதவிர, மூன்று பந்துகளை இரு கைகளால் சுழற்றிக் கொண்டிருப்பார். பார்வையாளர்களின் விழிகளை பந்துச் சுழற்றல் கவரும் போது சாகச இரகசியம் மறைக்கப்பட்டு விடும். கண்களை ஏமாற்றலாம் என்பதும் மஜிக் சாகசத்தின் வெற்றிக்கு அடிப்படையான விஷயம்.

## தகவல் பெட்டி




## செலவில்லாத இசை

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் இருக்கிறார் மிஸ்டர் எம்.ஜே.ஜெல்லி. பல குரல்களில் பாடக்கூடியவர். எங்கு பாடச் சென்றாலும் அவரது தலையில் சமர்த்தாக அமர்ந்திருக்கும் ஓணான். இடைக்கிடையே ஒலி எழுப்பிக்கொள்ளும். ஓணானின் ஒலியும் மிஸ்டர் ஜெல்லியின் பாடலோடு கலக்கும் போது பின்னணி இசைமாதிரி கேட்கும். செலவில்லாத இசை. சரி ஓணானுக்கு ஜெல்லிமீது அப்படியென்ன பிரியம். ஜெல்லி அடிக்கடி குரலை மாற்றிக் கொள்ளுவார். ஓணான் அடிக்கடி நிறத்தை மாற்றிக் கொள்ளும் அதனால் ஜெல்லியும் ஒரு வகையில் தனது இனம்தான் என்று நினைத்து விட்டதோ? இன்னொரு சமாச்சாரம் என்னவென்றால்-தற்போதைய கடா முடா இசைகளை விட ஓணானின் இசை பரவாயில்லாமல் தானே இருக்கும்!





# துணிந்துவிடு பாப்பா!

நீர்யானையைக் கண்டாலே போதும் வயிற்றில் ஒரு பந்து போல பயம் உருளும். அந்த நீர்யானை வாயைப்பிளந்து விட்டால், அதன்வழியே தாராளமாக 4 பேர் உள்ளே போகலாம். அதனால் நீர்யானை வாயைத்திறந்தாலே நாம் வாபாஸாகிவிடுவோம். ஆனால், படத்தில் உள்ள சிறுமிக்கு பயங்கரமான துணிச்சல். நீர்யானையின் வாயிலெறி நின்று உள்ளே எட்டிப்பார்ப்பதில் குஷி. (புல்லரிக்குமே உங்களுக்கு) பிரான்ஸ் நாட்டின் மிருகக் காட்சிசாலை இயக்குநர் நீன் தனது செல்வ மகளை துணிச்சலாக வளர்க்கிறார். துள்ளிவிளையாட வைத்துவிட்டு அருகில் காவலுக்கு நிற்கிறார். மிரட்டியும் பயம் காட்டியும் குழந்தைகளை வளர்ப்பவர்களுக்கு இது ஒரு பாடம். பயங்கொள்ளலாகாது பாப்பா.

# அய்... எனக்கும் ஒரு கார்

பூனை எலிபிடிக்கும் என்றுமட்டும் சொன்னால் எப்படி? பூனை காரோட்டும் என்றும் இனிச் சொல்லலாம். பிரான்ஸில் உள்ள பூனைக்குட்டிப் பயிற்சியாளர் ஒருவர் பூனைக்காகாவே ஒரு குட்டிக்கார் தயாரித்து அதனைச் செலுத்த கற்றுக் கொடுத்தார். பூனையாருக்கு குணம் மாறவில்லை. காரைக் கோழிக்கூண்டு பக்கமாக கொண்டு சென்று விட்டார். பயிற்சியாளர் உசாராக இருந்ததால் கோழிகள் தப்பிவிட்டனவாம். இது-பூனையாரின் கார் வெள்ளோட்டத்தின் போது 'கிளிக்' செய்த படம்.



ட்ரைவிங் லைசென்ஸ் எடுக்க என்ன செய்யணும்? என்ன கொடுக்கணும்? ம்மியாவ்....

www.padippakam.com

## காதோடு சொல்கிறோம்

'ஐஸ்' நடிகை அம்மாவான பின்னரும் போதை மாத்திரை ஆசை போகவில்லையாம். விஷயமறிந்த கணவர் 'ஐஸ்' நடிகையை வீட்டுக்குள் ஒரு வாரம் பூட்டிவைத்து தண்டனை கொடுத்தாராம். ஒரு வாரம் சென்று திறந்துவிட, வெளியில் வந்த ஐஸ் காணாமல் போய்விட்டாராம். பின்னர் ஒருவிதமாக தேடிப்பிடித்தாராம் கணவர். கோடம்பாக்கம் வட்டாரத்தில் லேட்டஸ்ட் கிசு-கிசு இதுதான்.

கோலத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார் 'பூ' நடிகை. கோலமான படம் வெற்றிபெற்றால் திருப்பதிக்கு போய் அர்ச்சனை செய்யப் போகிறாராம். (நல்ல காலம் மொட்டை போடுவதாக வேண்டிக்கொள்ளவில்லை) 'பூ' நடிகையின் இயக்குநர் காதலர்-தற்போது மெல்ல விலகிவிட்டதாக தகவல். வாடிப்போயிருக்கிறார் 'ஸ்பூ'.

விசித்திரமான நடிகைக்கு வெளிநாடுகளில் இருந்து அழைப்புக்கள் வருகிறதாம். எல்லாம் ஒரு கலைச் சேவைக்குத்தானாம். சொன்னால் நம்பத்தானே வேண்டும்.

லட்சுமிகரமாக இருந்துவிட்டு தெலுங்கில் தாராளமாக நடித்ததை நினைத்து புலம்புகிறாராம் நடிகை. பாட்டியான பின்னரும் இப்படியா நடிப்பது என்று கேட்கிறார்களாம். போதாக்குறைக்கு தமிழிலும் வரப்போகிறது அந்தப் படம். லட்சுமிகரமான நடிகைக்குத் தூக்கம் போச்சுதாம்.

குதித்தோடி வரச்சொல்லிவிட்டு குளோஸப்பில் படம்பிடிக்க நினைத்தாராம் ஒரு இயக்குநர். நோ சொல்லிவிட்டேன். என்று சொல்லியிருக்கிறார் வெண்ணெய் நடிகை 'நக்'. ஆச்சரியமாக இல்லை?

## நானும்கூட நாயகிதான்

"மிஸ்டர் ரோமியோ படத்தில் ஷில்பா ஷெட்டிதான் கதாநாயகி என்று நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். நானும் அதிலொரு கதாநாயகி. பிரபுதேவாவுக்கு இரண்டு ஜோடிகள். அதிலொரு ஜோடிதான் நான்." என்று சொல்லியிருக்கிறார் மதுபாலா. ஷில்பாவை பற்றியே எல்லோரும் ஜிலுஜிலுப்பாக பேசிக்கொண்டிருப்பதால் மதுபாலா அப்படிச் சொல்ல வேண்டியதாகிவிட்டது. மதுபாலாவின் நிலை இப்படியாகிவிட்டதே?!

## பலத்த போட்டி

'பம்பாய்' படத்தின் பின்னர் மளமளவென்று புகழ் ஏணியில் ஏறிவிட்டார் மனிஷாகொய்ராலா. இப்போதும் இந்தியில் மாதுரிடிக்ஷித்தான் முதலிடத்தில் இருக்கிறார். என்றாலும் மாதுரிக்கு பலமான போட்டியாக உருவாகிவிட்டார் மனிஷா. வினோத் சோப்ராவின் 'கரீப்' படம் வெளிவந்த பின்னர் மனிஷாவின் மார்க்கெட் மேலும் உயருமாம்.

## தள்ளிவைத்த படம்

'அசுரன்' படத் தோல்வியால் ஆகஸ்ட் 15 அன்று வெளியாக இருந்த 'மக்கள் ஆட்சி' படத்தைத் தள்ளிப்போட்டு விட்டார் ஆர்.கே. செல்வமணி. ஆனாலும் விரைவில் வெளிவரப்போகிறது மக்கள் ஆட்சி.



ஜெயராம்-வினிதா
படம்-புதுநிலவு

## 'மீண்டும் இயக்குவேன்'

'அவதாரம்' படம் தோல்வியடைந்தாலும் அதன் இயக்குநரான நாசர் மனம் தளரவில்லை. இன்னும் நாலு படம் நடித்துவிட்டு, புதிய படம் ஒன்றை இயக்கப்போகிறாராம். 'அவதாரம்' படத்தைத் திரையிட நல்ல திரையரங்குகள் கிடைக்காமல் போனதால்தான் படம் அடிவாங்கியது. ஆனால் படம் பார்த்தவர்கள் பாராட்டியதால் மனதில் வலி இல்லை என்கிறார் நாசர்.

## கார்த்திக்கின் ஆசை

சொந்தப்படம் தயாரிப்பதில் இதுவரை கவனம் செலுத்தாமல் இருந்தார் கார்த்திக். சமீபகாலமாக அவரது படங்கள் தோல்விகளை சந்தித்து வருவதால் தற்போது புதிய யோசனையில் இறங்கிவிட்டார். சொந்தமாகப் படம் எடுத்து நடித்தால் தனது விருப்பப்படி படத்தைக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறாராம் கார்த்திக். 96ம் ஆண்டில் தனது சொந்தப் படத்தை ரசிகர்கள் எதிர்பார்க்கலாம் என்றும் அறிவித்துவிட்டார்.

## தோல்வியால் கவலையில்லை

'தக்டீர்வாலா' படத்தின் தோல்வி தன்னைப் பாதிக்கவில்லையென்று சொல்கிறார் ரவீணா ராண்டன்.

அக்ஷய் குமாரை இரகசியமாக திருமணம் செய்து கொண்டார் ரவீணா என்று பம்பாய் படவுலகில் பேசப்படுகிறது. அதனால் ரவீணாவின் மார்க்கெட் டல் அடிக்கத் தொடங்கிவிட்டது. திருமணச் செய்தி வெறும் வதந்தி என்கிறார் ரவீணா ராண்டன். அப்படியா?



சுவாதி
படம்-வசந்த வாசல்

★

* தீபாவளிக்கு வெளியாகும் ரஜினியின் 'முத்து' படத்தை அடுத்து பிரபு-ரோஜா நடிக்கும் 'பரம்பரை', சரத்குமார் நடிக்கும் 'பாமரன்' ஆகிய படங்களை இயக்கவுள்ளார் கே.எஸ்.ரவிக்குமார். இவற்றைத்தொடர்ந்து விஜய் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றையும் இயக்கவுள்ளார்.
* கே.டி.குஞ்சுமோன் தயாரித்த 'காதலன்' படத்தில் TAKE IT EASY என்ற வாசகம் இடம்பெற்றது. இப்போது இவரது தயாரிப்பில் உருவாகும் 'காதல் தேசம்' படத்தில் DON'T WORRY BE HAPPY என்ற வாசகம் இடம்பெறுகிறது.
* 'முறைமாமன்' படத்தை இயக்கியுள்ள சி.சுந்தர் இயக்கத்தில் கார்த்திக் நடிக்கும் 'நெஞ்சத்தை அள்ளித்தா' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக நக்மா நடிக்கிறார்.
* தமிழில் விஜயகாந்துடன் 'தாயகம்' படத்தில் நடித்து வரும் ரஞ்சிதா நான்கு மலையாளப்படங்களில் நடித்துவருகிறார். இவற்றில் சுரேஷ்கோபி ஜோடியாக இரண்டு படங்களில் நடிக்கிறார்.
* 'காதலன்' படத்தில் 'ஊர்வசி ஊர்வசி.....', 'பம்பாய்' படத்தில் 'ஹம்மா ஹம்மா....' போன்ற பாடல்களைப் பாடியுள்ள ஏ.ஆர்.ரகுமான், தற்போது பி.வாசு இயக்கும் 'லவ் பேட்ஸ்' படத்தில் 'நோ ப்ராப்ளம்' என்ற பாடலைப் பாடியுள்ளார்.
* 'புள்ளகுட்டிக் காரன்' வெற்றியால் திளைத்திருக்கும் பார்த்திபன், இப்போது 'பிரியமானவளே' படவேலைகளில் இறங்கியிருக்கிறார். 'பிரியமானவளே' படத்தை அடுத்து தாசரி நாராயணராவ் இயக்கும் தெலுங்குப்படம் ஒன்றில் நடிக்கவிருக்கிறார்.
* மலையாளப்பட இயக்குநரான சிவச்சந்திரன் இயக்கும் 'அரபிக்கடலோரம்' என்ற படத்தின் மூலம் மலையாளத் அறிமுகமாகிறார் ருபஸ்ரீ. இப்படத்திற்கு சிற்பி இசையமைக்கிறார்.

## மினி சினி

* படங்களின் பெயர்களைப் பதிவுசெய்யும் பிலிம் சேம்பரில் அண்மையில் 'கோல்டு பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தப் பெயரைப் பதிவுசெய்தவர் யார் தெரியுமா
* இந்தியில் அக்ஷய்குமார்-ரவீணா ராண்டன் ஜோடியாக நடித்துவரும் 'கிலாடி யோ படத்தில் இடம் பெறும் பாடல்காட்சி ஒன்று ரஷ்யாவில் உள்ள செஞ்சதுக்கத்தில் ப



திவ்யபாரதி-கஸ்தூரி-பாண்டியராஜன்

## விருது வாங்க ஆசை

'கருத்தம்மா' படத்திற்கு இந்திய அரசின் விருது கிடைத்ததல்லவா. அதனால் குஷியாகிவிட்டார் பாரதிராஜா. மீண்டுமொரு விருது வாங்கினால் என்னவென்று யோசித்தார். உடனே காரியத்தில் இறங்கிவிட்டார். சுதந்திரப் போராட்ட தியாகி ஒருவரின் கதையை வைத்து 'அந்திமந்தாரை' என்ற பெயரில் படம் எடுக்கிறார். ரேவதி நடிக்கப் போகிறார். நாசர் நடிப்பதாகவும் இருந்தது. நாசர் பிஸியாக இருப்பதால் வேறுயாரைப் போடலாம் என்று சிந்தித்துவருகிறார் பாரதிராஜா. இது ஒரு குறுகியகாலத் தயாரிப்பாக இருக்குமாம்.

## இளையராஜாவின் இரண்டாவது வாரிசு

கம்பியூட்டரில் கதாபாத்திரத்தின் உருவத்தை வரைந்துபார்த்து அதற்கேற்ப மேக்கப் போட்டு நடிக்கிறார் சரத்குமார். அவ்வாறு அவர் நடிக்கும் படம் அரவிந்தன். படத்திற்கு இசையமைப்பவர் இளையராஜாவின் மகன் யுவன் சங்கர் ராஜா. ஏற்கனவே இளையராஜாவின் மூத்த மகன் கார்த்திக்ராஜா இசைத்துறையில் புகுந்துவிட்டார். இப்போது இளையராஜாவின் இளையமகன் 'அரவிந்தன்' மூலம் அறிமுகமாகிறார். யுவன் சங்கர் ராஜாவிற்கு வயது பதினைந்து. இளம் கன்று பயமறியாது. ஆனால் இசையறியும். எப்படியோ இசைத்துறைக்கு இரண்டு வாரிசுகளைத் தந்துவிட்டார் இளையராஜா.

## தெலுங்கில் ரஜினி

தெலுங்குப் படவுலகில் ரஜினிகாந்தின் கொடி பறப்பதை முன்னரே சொன்னோம் அல்லவா. தெலுங்கு ஹீரோக்களின் வயிற்றிலும் புளி கரைத்துவிட்டார் ரஜினி. அவரது படங்களுக்கு மவுசு ஏறியிருப்பதால் அண்ணாமலை படத்தை தெலுங்கில் மொழிமாற்றம் செய்கிறார்கள். பெயர் என்ன தெரியுமோ? பில்லா. தமிழில் ரஜினி நடித்து முன்னர் வெளியான படமொன்றின் பெயர் 'பில்லா'.



படிப்பகம்

www.padippakam.com



ரோஜா-அர்ஜுன்-கவுண்டமணி
படம்-ஆயுத பூஜை

# பெயரில் தொடரும் குழப்பம்

'வாக்கப்பட்ட பூமி' என்று முதலில் பெயர் வைத்தார்கள். அது நன்றாக இல்லை என்று 'கரிசல் மண்' என்று பெயர் வைத்தார்கள். பின்னர் அதுவும் பிடிக்கவில்லை செந்தமிழ் செல்வன் I.A.S என்று பெயர் சூட்டினார்கள். இப்போது அதையும் மாற்றப்போகிறார்கள். இத்தனைக் குழப்பமும் பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் படத்திற்குத்தான். படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. இன்னும் பெயர்க் குழப்பம் தீர்ந்தபாடில்லை. வைரமுத்து எழுதி, தேவா இசையமைக்க 6 பாடல்கள் மட்டும் முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்டுவிட்டன.

ரோஜா-கவுதமி, நெப்போலியன், மணிவண்ணன், செந்தில், வடிவேலு, கீதா, வைஷ்ணவி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். சத்யராஜின் மனேஜர் இராமநாதன் தயாரிக்கும் படம் இது என்பது தெரிந்த செய்திதானே.

'அருவியே என்னைக் கட்டிப்பிடி' என்று தொடங்கும் பாடலுக்கு ரோஜா நடிக்கும் காட்சியும் படமாக்கப்பட்டுவிட்டது. தைப்பொங்கல் தினத்தன்று வெளியிட உத்தேசம்.

# 'பப்பா' ரக சம்பளப்பட்டியல்

இந்திப்படவுலக நட்சத்திரங்கள் வாங்கும் லேட்டஸ்ட் சம்பள விபரத்தை பம்பாய் சினிமா இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது. பட்டியல் இதோ. (வாயைப்பிளக்க வேண்டாம் பிளீஸ்)

அனில் கபூர்- 75 இலட்சம், சன்னிதியோல் - 75 இலட்சம், அக்ஷய் குமார் -50 இலட்சம், சல்மான்கான் - 50 இலட்சம். மாதுரி டிக்ஷித் - 50 இலட்சம், ஸ்ரீதேவி- 35 இலட்சம், ஜாக்கி ஷெரப் - 40 இலட்சம், கோவிந்தா - 50 இலட்சம், ஷாருக்கான் - 25 இலட்சம், ஜுகிசாவலா - 25 இலட்சம், ரேகா- 20 இலட்சம், மனிஷா -15 இலட்சம், தபு -12 இலட்சம், கஜோல்- 18, இலட்சம். ஷில்பா ஷெட்டி -15 இலட்சம். இதெல்லாம் இந்திய பணமதிப்பின்படிதான். நம் நாட்டு மதிப்பின்படி இன்னும் அதிகம்.

# மொரிஷியஸ் நாட்டில் சரத்

சரத்குமார்-நக்மா நடிக்கும் இரகசியப் பொலிஸ் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. இரண்டாம் கட்ட படப்பிடிப்புக்கு நக்மா சகிதம் மொரிஷியஸ் நாட்டுக்கு பறந்துவிட்டார் சரத். மொரிஷியஸ் நாட்டில் பாடல் காட்சிகளும், சண்டைக்காட்சிகளும் படமாக்கப்படுகின்றன. கசன்கான், ஆனந்தராஜ், ராதிகா, கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் நடித்து வருகின்றனர்.



இறக்குமதிக்குத் தடை?

# கட்டுப்படியானால் மட்டும்

ரோஜா-பம்பாய் இரண்டும் மணிரத்தினம் படங்கள். இரண்டும் ஹிந்தியில் மொழிமாற்றப்பட்டு சூப்பர் ஹிட். இதனால் கதிகலங்கிப் போனார்கள் இந்திப்பட தயாரிப்பாளர்கள். உடனே கூட்டம் போட்டு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். இனிமேல் பிறமொழி படங்களை இந்தியில் மொழிமாற்றுவதில்லை என்பதுதான் முடிவாம். இந்த முடிவைக்கேட்டதும் தமிழ்படத் தயாரிப்பாளர்கள் சிலருக்கு மின்சாரத்தில் மிதித்தது போன்ற அதிர்ச்சி. இலட்சம் இலட்சமாய் கொடுத்து பம்பாய் நடிகைகளை இறக்குமதி செய்வதேன்? கலைச்சேவைக்கா? கைநிறையச் சம்பாதிக்கத்தானே. இந்தி நடிகைகளை தமிழில் நடிக்க வைத்தால் அந்தப் படங்களை இந்தியில், தெலுங்கில் என்றெல்லாம் மொழிமாற்றி விற்றுவிடலாம். இப்போது இந்தியில் தடை வந்துவிட்டதால் பாதிப்பு ஏற்படும். இந்தி தவிர ஏனைய மொழிகளில் தள்ளிவிடலாம். ஆனால், இந்தியில் வரும் இலாபமளவுக்கு வராது. எனவே- இனிமேல் பெரிய பெரிய இந்தி நடிகைகளை தமிழுக்கு இறக்குமதி செய்யும் திட்டம் கைவிடப்படலாம். கட்டுப்படியானால் மட்டும் பொடி நடிகைகளை இறக்குமதி செய்துகொள்வார்கள்.

இந்திப்பட தயாரிப்பாளர்களது முடிவை மாற்றும் முயற்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

# திரையில் புதியவை

தமிழ் நாட்டில் புதிதாக திரைக்கு வந்துள்ள படங்கள் பிக்பாஸ், (சிரஞ்சீவி-ரோஜா) சூப்பர்லேடி (விஜயசாந்தி) ஆசை (அஜித்குமார்- சுபலட்சுமி) கோலங்கள் (ஜெயராம்-குஷ்பு) நம்நாட்டில் வீடியோ பிரதிகளாக இவை வெளிவந்துள்ளன. சின்னத் திரையில் பார்க்கலாம்.

# விஜயகாந்திடம் ஒரு கேள்வி

காதல் காட்சிகளில் நெருங்கி-சமயத்தில் நொருங்கி நடிக்கிறார்கள் ஹீரோக்கள். கல்யாணமாகாத ஹீரோக்கள் என்றால் சரி. கல்யாணமான ஹீரோக்கள் என்றால் மனைவிமார் கோபப்பட மாட்டார்களா? இக்கேள்வியை விஜயகாந்திடம் கேட்டார் ஒரு நிருபர். அதற்கு விஜயகாந்த் சொன்னபதில் இது;

"நான் நடிகன் என்று தெரிந்துதானே என் மனைவி கழுத்தை நீட்டினாள். நான் நடித்துவிட்டு வீடு திரும்பும்போது என்னை தன் கணவனாக மட்டுமே பார்க்கிறாள். இருவருமே ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மனதார நேசித்து மகிழ்ச்சியாக வாழ்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார் விஜயகாந்த்.

விஜயகாந்த் பற்றி மற்றொரு தகவல். ஏற்கனவே நடிக்க திட்டமிட்டிருந்த 'மேடே' ஆங்கிலப்படத்தை கைவிடவில்லையாம். ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறதாம். இது விஜயகாந்தே சொன்ன தகவல்.



# மிதுன் பிஸி

மாஜி நடிகராகி விட்டார் என்று கருதப்பட்ட மிதுன் சக்கரவர்த்தி மீண்டும் பிஸியாகிவிட்டார். 'ராவண் ராஜ்' படம் மூலம் மறுபடி ஒரு ரவுண்ட் வரத் தொடங்கி விட்டார். அடுத்த படமான 'ஜலாட்' வெற்றிபெறும் என்று நம்பப்படுகிறது. புதிதாக 6 படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார் மிதுன்.

# விஜயகாந்த் உறுதி

"இலங்கைத் தமிழர்கள் எப்போது பிரச்சனையெல்லாம் தீர்ந்து சந்தோசமாக வாழ்கிறார்களோ அன்றுதான் என் பிறந்தநாளைக் கொண்டாடுவேன்" என்று அறிவித்துள்ளார் விஜயகாந்த். ஆனாலும் பிறந்த நாளை முன்னிட்டு ஏழைகளுக்கு உதவும் காரியங்களை மட்டும் தொடர்ந்து செய்வேன் என்று உறுதிகூறியுள்ளார் விஜயகாந்த்.

# உண்மைச் சம்பவங்கள்

வித்தியாசமான படப்பெயர் வரிசையில் இன்னொரு படத்திற்கும் பெயர் சூட்டப் பட்டுள்ளது. படத்தின் பெயர் 'உண்மைச் சம்பவங்கள்.' தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் தயாராகிறது. 'எய்ட்ஸ்' நோய், போலிச்சாமியார்களின் சுத்துமாத்துக்கள் பற்றியெல்லாம் சொல்லப் போகிறார்கள். படத்தில் பாடல்கள் கிடையாதாம்.

மாதுரி, அனில்குமார் ஜோடியாக நடிக்கின்றனர்.

www.padippakam.com




## சுயசோதனை

சாதாரண சோப்பு வாங்கினாலும் அலசி ஆராய்ந்து பார்த்து வாங்குபவர் வெகு சிலர்தான். ஆனால், யோசிக்காமல் 'படக்'கென எதையாவது வாங்கிவிட்டு, பிறகு யோசிப்பவர் பலர். அதேபோல யோசிக்காமல், விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் எதையாவது சொல்லி விட்டால் அப்புறம் மனக்கஷ்டம்தான்.

நீங்கள் எப்படி? எதையும் ஆராய்ந்து செய்பவரா? முன்பின் யோசிக்காமல் உளறும் ஆசாமியா? இரகசியம் காப்பவர்தானா?

# வயதாக முன்னர் குழந்தை பெறும் ஆசையா?



ஒரு பெண் 21 வயதிற்குள் குழந்தை பெற நேரிட்டால் ஏற்படும் விளைவுகள்:

01. கருச்சிதைவு ஏற்படலாம்.
02. குறைப்பிரசவம் ஆகலாம்.
03. குழந்தை இறந்து பிறக்கலாம்.
04. குழந்தை பிறந்து ஓராண்டிற்குள் இறக்கலாம்.
05. குழந்தையின் பிறப்பு எடை குறைவாக இருக்கலாம்.
06. அங்கவீனத்துடன் குழந்தை பிறக்கலாம்.
07. மூளை வளர்ச்சி குன்றிப் பிறக்கலாம்.
08. குழந்தை அடிக்கடி நோய்வாய்ப் படலாம்.
09. வலிப்பு நோய் ஏற்படலாம்.
10. தாயின் உடல் வளர்ச்சி குறையலாம்.
11. பிரசவ கோளாறு ஏற்படலாம்.
12. பிரசவத்தின் போது தாய் இறக்கலாம்.
13. தாய்க்கு இரத்த சோகை ஏற்படலாம்.
14. குடும்ப வாழ்க்கையிலும், குழந்தை வளர்ப்பிலும் சலிப்புத் தன்மை ஏற்படலாம்.
15. போதிய சகிப்புத்தன்மை இல்லாமல் போகலாம்.
16. தாயின் இளமையும், வளமையும் விரைவில் நீங்கலாம்.
17. கருவளத் தன்மையால் கர்ப்ப பயம் நீடிக்கலாம்.
18. இளம் தாய் தன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் போகலாம்.
19. மனநில பாதிப்பினால் மனநோய் ஏற்பட வாய்ப்புண்டு.
20. மொத்தத்தில் குடும்ப வாழ்க்கையே கசந்து போகலாம்.

# வீட்டுக்கு வீடு தேவையான யோசனைகள்

01. அரிசியைச் சமைப்பதற்கு முன் அரைமணிநேரம் தண்ணீரில் நனையவிட்டுப் பின் சமைத்தால் சாதம் பொலபொலவென்று இருப்பதுடன் குறைந்த நேரத்தில் வெந்து விடும். இதனால் எரிபொருட் செலவு மிச்சம்.

02. நெருப்புத் தணல் நீற்றுப் போகாமல் பிரகாசமாய் எரிய, அரை கப் தண்ணீருடன் அரைத் தேக்கரண்டி வெடியுப்பைக் கலந்து தணலின் மீது தெளித்தால் போதும்.

03. தலையணை, மெத்தை இவைகளை



வெயிலில் உலர்த்தி எடுத்தால் உள்ளிருக்கும் பஞ்சுகள் விரிவடைந்து மெத்தென்று இருக்கும்.

04. நீருடன் பாலைக் கலந்து வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவினால் பாத்திரங்கள் பளிச்சென்று இருக்கும்.

05. தரையில் கண்ணாடிச் சாமான்கள் விழுந்து உடைந்துவிட்டால் கொஞ்சம் கோதுமை மாவைப் பிசைந்து உருண்டையாய் எடுத்துக் கொண்டு அவ்விடத்தில் ஒற்றியெடுத்தால் சிறு துண்டுகள் கூட வந்துவிடும்.

06. அடுப்புக்கரி ஒன்றை ஃபிரிட்ஜில் போட்டு வைக்க அதிலுள்ள துர்நாற்றம் போகும்.

07. எரியும் பல்பில் 2 சொட்டு சென்டைத் தெளித்தால் அறை முழுவதும் மணம் பரவும்.

08. பவுடர் வாசம் வரவில்லையெனில் வெய்யிலில் வைத்து எடுத்தால் மணம் வீசும்.

09. கத்தரி, வாழை இவைகளை நறுக்கி சிறிது உப்பு போட்ட நீரில் போட்டால் அவை கறுக்காது.

10. வெங்காயச் சாற்றை சிறிது எடுத்து படுக்கையருகில் தெளிக்க நுளம்புகள் அருகே நெருங்காது.

11. கறிவேப்பிலை வாடாமலிருக்க சிறிது நீருள்ள பாத்திரத்தில் கறிவேப்பிலையின் காம்புப்பகுதியை வைத்தால் ஐந்தாறு நாட்களுக்கு வாடாதிருக்கும்.

12. பாத்திரம் அல்லது பெட்டிகளின் அடியில் சிறிது விளக்கெண்ணெயைத் தடவினால் அப்பொருட்களை எறும்புகள் நெருங்காது.

13. பெருங்காய டப்பாவில் ஒரு பச்சைமிளகாய் போட்டால் பெருங்காயம் இளகிவிடும். தேவையானபோது கையாலேயே கிள்ளி எடுத்து விடலாம்.

14. கோடை காலங்களில் கரட், பீட்ரூட் வாடிப்போனால் ஒரு கரண்டி உப்பு சேர்த்த தண்ணீரில் ஒரு மணிநேரம் ஊற வைத்து எடுத்தால் புதிதுபோல தோற்றமளிக்கும்.

15. வெண்ணெய்யை காய்ச்சி இறக்கு கையில் அரைக் கரண்டி வெந்தயத்தைப் போட்டால் நெய் நல்ல மணமாயிருக்கும்.

# 'இரகசியம்' காப்பவரா நீங்கள்?

என்பதை அறிந்து கொள்ள விருப்பமா? இதோ எளிமையான 'குவிஸ்'.

கீழே உள்ள கருத்துக்களை படித்து, எத்தனை 'ஆம்' வருகிறது என்று கணக்கிடுங்கள். பிறகு விடைகளைப் படித்து நீங்கள் இரகசியம் காப்பவரா? அதற்கு முழுத் தகுதி உள்ளதா என்பதை 'செக்' பண்ணிக் கொள்ளுங்கள்.

ஓ.கே.! ரெடியா?

1. உறவினர், நண்பர் வீட்டு விழாக்களுக்குச் செல்லும்போது, நன்கு பழக்கப்பட்ட கடையில்தான் பரிசுப் பொருட்கள் வாங்கிச் செல்வேன். ஒருவேளை அந்தப் பொருளை மாற்ற விரும்பினால் சுலபமாக இருக்கும் பாருங்க!

2. ஏதாவது ஒரு விவகாரத்தில் துப்புக் கிடைக்கிறது. இருப்பினும் அதைப்பற்றி ஆராயுமுன் தகவலைப் பொலிஸூக்குச் சொல்லவே விரும்புவேன்.

3. எனது மருந்துப் பெட்டியில் தலைவலி, தடிமன் மருந்து எப்போதும் இருக்கும்.

4. எந்த வாகனத்தில் சென்றாலும் வழியில் பழுதாகி விட்டால் அதைச் சரி செய்வதற்குத் தேவையான 'ரூல்ஸ்' (கருவிகளை) எப்போதும் எடுத்துச் செல்வேன்.

5. கம்பனி லாபம் அறிந்து சம்பள உயர்வு பற்றிக் கோரிக்கை வைப்பேன். சும்மா வீம்புக்குச் சம்பள உயர்வு கேட்பதை விரும்பமாட்டேன்.

6. எனது திருமண வாழ்க்கை எத்தனை நாள் நீடிக்கும்? என்று அனாவசியமாக ஆராயமாட்டேன். அதே சமயம் என்னை நிர்ப்பந்தித்து திருமணம் செய்து வைக்க முடியாது. என் விருப்பம், கொள்கைதான் எனக்கு முக்கியம்.

7. காதலனை ஆடம்பரமாகச் செலவழிக்க வைத்து அதில் மகிழ்ச்சியாகக் காலங்கழிக்க விரும்பும் பெண்ணை மனைவியாக்கிக் கொள்வது முட்டாள்தனம்.

8. எனது நண்பனின் மகன் போதை மருந்துக்கு அடிமையாகிவிட்டான் என்று



தெரிந்தால் அவனைத் திருத்த என்னால் முடிந்தவரை முயற்சி செய்வேன். அவனைத் தனியாக அழைத்து தன் தவறை உணரும்படி செய்வேன்.

9. மற்றவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூற எனக்குப் பிடிக்கும். மற்றவர் என்னிடம் யோசனை கேட்கும் போது, சரியான யோசனைகளையே வழங்கி யிருக்கிறேன்.

10. குடித்துவிட்டுத் தகராறு செய்பவனிடம் தகராறு செய்ய மாட்டேன். ஏதாவது கேட்டுத் தொந்தரவு செய்தால் உடனே கொடுத்து அனுப்பிவிடப் பார்ப்பேன்.

11. எனக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் மட்டுமே இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வேன்.

12. எனது சொத்து மதிப்புகளைப் பற்றி வெளியே- 'மூச்' விடமாட்டேன்.

எத்தனை 'சரி' என்பதை எண்ணி விட்டீர்களா? இனி விடையைப் படித்து உங்களை 'எடை' போட்டுக் கொள்ளுங்கள்.

## மதிப்பெண்

9 – 12 'ஆம்' (மேலே உள்ளவற்றில் 9 விடயங்கள் அல்லது அதற்கும் அதிகமான விடயங்களோடு உங்களுக்கு உடன்பாடு என்றால்..): நீங்கள் எதையும் 'படக்'கென சொல்ல மாட்டீர்கள். இரகசியம் காத்து அதே சமயம் உண்மை என்று தெரிந்ததை மட்டுமே சொல்வீர்கள். நீங்கள் தவறாக சொல்லி விட்டீர்கள் என்று யாரும் உங்களை குற்றம் சொல்ல முடியாது. நீங்கள் நடந்து கொள்ளும் முறை சரியானது. பொறுமை காத்து, அவசரப்படாமல் நடந்து கொள்வதால்தான் அனாவசிய கெட்ட பெயரோ, சிக்கலோ உங்களுக்கு ஏற்படுவதில்லை.

5 – 8 'ஆம்': இவரிடம் எப்போதும் பரபரப்பான தகவல்கள் கிடைக்கும் என்று உறவினர், நண்பர்கள் நினைக்கும் அளவு எதிர்பார்ப்பை ஏற்படுத்துபவர் நீங்கள். அதே சமயம் எல்லாவற்றையும் சொல்லி விடாமல் அடுத்தவரின் எதிர்பார்ப்பை மேலும் மேலும் தூண்டும் வகையில் தான் (சொல்வதை தவணை முறையில்) செய்திகளைச் சொல்வீர்கள். நீங்கள் இப்படியே எல்லாச் செய்திகளையும் சொல்லி விடுவதால், அது விபரீதத்தில் கொண்டுபோய் விடுவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை உணர்ந்து இரகசியம் காக்க வேண்டும். பிறகு பாருங்கள் உங்கள் மதிப்பு உயர்வதை!

0 – 4'ஆம்': ஏதோ நல்லது சொல்கிறோம் என்ற நினைப்பில் கண்டபடி உளறி விடுவீர்கள். அப்புறம் அட்டா இதனால் தானே இவ்வளவு கெட்ட பெயர் என்பதை தாமதமாகத்தான் உணர்வீர்கள். எதையும் முழுமையாக ஆராய்ந்து பார்த்துச் சொல்ல முயற்சி செய்யுங்கள். நாம் உஷாராக இருக்க வேண்டும், பேச வேண்டும், செய்ய வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். இப்படி உளறுவாயாக இருந்தால் முகத்தில் கரிபூசிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே எதைச் சொன்னாலும், செய்தாலும் யோசித்துச் செய்ய முயற்சி செய்யுங்கள்.

# குழந்தைக்கு வயிற்று வலியா?



ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் சில சமயங்களில் ஓயாமல் அழுதுகொண்டே இருக்கும். அதிலும் விபரம் தெரிந்த குழந்தை தன் வயிற்றைத் தடவி வலிப்பைக் குறிப்பிடும். விபரம் அறியாத குழந்தைகளைச் சமாளிப்பது தான் மிகக்கஷ்டம்.

குழந்தை மல்லாக்காகப் படுத்துக் கொண்டு அழும். வலப்பக்கமோ, இடப்பக்கமோ புரளாது. வயிறு உப்புசமாகத் தெரியும். இதற்கு மருத்துவரை அணுகுமுன் மிக எளிய முறையில் சமையலுக்குப் பயன் படுத்தும் பெருங்காயத்தை இளம் சூட்டு நீரில் கரைத்து அதனுடன் சம அளவு ஓமவோட்டர் சேர்த்துக் கொடுக்க ஐந்து நிமிடங்களில் குழந்தையின் அழுகையில் தளர்ச்சி ஏற்படும். அப்போது குழந்தைகள் அணிந்திருக்கும் ஆடைகளைக் களைந்து விடுவது நல்லது. இதனால் குழந்தையின் உடலுக்குச் சரியான காற்றோட்டம் கிடைக்கும்.

அந்த நேரத்தில் உணவாகக் குழந்தைக்குப் பால் மற்றும் இதர உணவைக் கொடுக்கக் கூடாது.

குழந்தை அமைதியாகி ஒரு தூக்கம் போட்டு எழுந்தவுடன் திரவ உணவுப் பொருளைக் குழந்தைக்கு உணவாகக் கொடுக்கலாம்.

# பாதங்கள் பதமாக

**பின்பற்ற வேண்டியவை:**

1. கால்களை வெதுவெதுப்பான சோப்புத் தண்ணீரில் கழுவவும்.
2. சுத்தமான, இறுக்கமில்லாத செருப்பு, சப்பாத்து, காலுறைகளை உபயோகிக்கவும்.
3. புதுச் செருப்பை மெள்ளப் பழக்கப் படுத்திக்கொள்ளவும்.
4. நகங்களை அடிக்கடி வெட்ட வேண்டும்.
5. ஆணிபோன்றவை தோன்றினால் முரட்டுத்தனமாக எடுப்பது கூடாது. சரியான முறையில் கவனிக்க வேண்டும்.
6. கால்களுக்கு நல்ல இரத்த ஓட்டம் கொடுப்பது அவசியம். உதாரணமாக படுத்த நிலையிலிருந்து இரண்டு நிமிடம் சிறிது உயர்த்தி வைக்க வேண்டும். இவ்வாறு 20 முறை காலை,மாலை செய்வது நல்லது.

**தவிர்க்க வேண்டியவை:**

1. வெறுங்காலுடன் நடப்பது.
2. கால்களை கொதிக்கும் நீரில் கழுவுவது.
3. இறுக்கமான பாண்டேஜ்களை பயன் படுத்துவது.
4. காலில் ஏதேனும் அடிபட்டால் அயோடின் போன்ற எரிச்சலை உண்டாக்கக் கூடிய மருந்துகளைத் தடவுவது.

# சாதனை

எழுதி... எழுதியே ஒரு இந்தியர் உலக சாதனை படைத்து இருக்கிறார். அவர் பெயர் சந்திரகாந்த் சவான். இந்தியாவில் உள்ள மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர். வயது-91.

இதுவரை 1200 நாவல்கள் எழுதி இருக்கிறார். இந்த நாவல்களை எழுதி முடிக்க சுமார் 4 1/2 கோடி வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

தனது நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் ஒரு இலட்சம் பாத்திரங்களை உருவாக்கியுள்ள பெருமையும் இவரைச் சேரும். இது ஒரு உலக சாதனை என்பதால், 'கின்னஸ்' புத்தகத்தில் இவரது பெயர் இடம் பெற்றிருக்கிறது.




இவரது புத்தகங்கள் எப்போது வந்தாலும் உடனே தீர்ந்துவிடும். அந்த அளவுக்கு இவருக்கு இரசிகர்கள் பல இலட்சம் பேர்.

இவரது வீட்டில் எப்போதும் வாசக, வாசகியர் குழுமி இருப்பார்கள்.

பிரபல பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் இவரது தீவிர விசிறி.

# வீரமானவள்



யாசீர் அரபாத்துக்கு பெண் குழந்தை பிறந்தது தெரிந்த செய்திதானே. குழந்தைக்கு 'சக்வா' என்று பெயர் வைத்துள்ளார்கள். 'சக்வா' என்றால் அழகானவள், வீரம் நிறைந்தவள் என்று அர்த்தமாம்.

தன் மகளை புரட்சிகரமான பெண்ணாக வளர்க்கப் போகிறார் அரபாத்.

# காம்ப்ளியின் கஷ்ட காலம்

இந்திய கிரிக்கெட் அணியில் இளைஞர்களையும், இளைஞிகளையும் கவர்ந்திழுத்தவர் வினோத் காம்ப்ளி. திடீரென்று யார் கண்பட்டதோ காம்ப்ளியின் வீச்சு மூச்சிழுக்கத் தொடங்கி விட்டது.

18.01.1972இல் பிறந்த காம்ப்ளிக்கு இப்போது கஷ்ட காலம். மொட்டைத்தலை. காதில் ஒரு தொங்கட்டம். பிரெஞ்சுத் தாடி என்பவற்றோடு கொஞ்சக் காலம் அலைந்தார்.

சமீபத்தில் இந்திய 'ஏ' அணி கென்யாவுக்கு செல்லும்போது ஜடேஜா தலைமையில் இவரை ஆடுமாறு அனுப்பிவிட்டார்கள். 'என் நிலை இப்படியாச்சே' என்று கலங்கிய காம்ப்ளி இப்போது தன்னை மறுபரிசீலனைக்கு உட்படுத்தியிருக்கிறார்.

இந்திய அணியில் மீண்டும் இடம்பெற்றே தீருவது என்ற துடிப்புடன் கவாஸ்கரிடம் ஆலோசனை கேட்டு பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.




14 டெஸ்ட் போட்டிகளில் காம்ப்ளி விளையாடி இருக்கிறார். சராசரி ரன் விகிதம் 57.16. அது தவிர 57 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். சராசரி ரன் விகிதம், 41.53.

தற்போது ஆடும் வேகம் குறைந்து அவரை இந்திய அணி கழற்றி விட்டபோதும். அவருக்குள்ள செல்வாக்குக் குறையவில்லை. போகுமிடமெல்லாம் இரசிகர்களும், இரசிகைகளும் அவரைச் சுற்றி குவிந்து விடுகிறார்கள். "அவர்கள் என்னிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். அதனை நிறைவு செய்வேன்" என்கிறார் காம்ப்ளி.

## தண்ணீர் –தண்ணீர்

நாளொன்றுக்கு 8 டம்ளர் தண்ணீராவது குடிக்கவேண்டும். சாப்பிடச் செல்லும் ஒரு மணி நேரத்தின் முன்னரும், சாப்பிட்ட பின்னர் ஒரு மணி நேரத்தின் பின்னரும் தண்ணீர் குடிக்க வேண்டும். அதுபோல தூங்கச் செல்ல முன்னரும், தூங்கி எழுந்தவுடனும் தண்ணீர் பருக வேண்டும். பசி எடுக்கும்போது தண்ணீர் பருகக் கூடாது. அது நல்லதல்ல.

## சளி விலகும்

சளித்தொல்லை என்பது பரவலாக அனைவருக்கும் உள்ளதுதான். வீட்டில் இதற்கு செய்யக்கூடிய வைத்தியம் ஒன்று கூறுகிறோம்.

சாம்பிராணி, மஞ்சள், சீனி ஆகிய மூன்றையும் கொண்டு புகை பிடித்தால் சளி பறந்தோடி விடும்.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 05

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## விதியின் நிழலில் வாழ்க்கை

வாழ்க்கை
விதியின் நிழலுக்குள்
வந்து சேர்ந்துள்ளது!
••
நந்தவனங்களிலேயே
நடந்து பழகிய
அன்பின் சுவடுகள்
பாலைவனங்களில்
பயணிக்க முடியாமல்
பெரும்பாடு படுகிறது!
••
மலர் மஞ்சத்தில்
ஓய்வெடுக்க விரும்பிய
மனதை,
முட்களின் மீது
உருட்டி விட்டீர்களே!
••
இருவரும் இணைந்து
கற்பனைகளால் கட்டிய
அன்பு உலகினுள்
நான் மட்டும்
சுற்றிச் சுற்றிவந்து
சுருண்டு விழுகிறேன்!
••
நிழல் கேட்டு
உங்களிடம் வந்த
என்மீது
எதற்காக
நெருப்புப் போர்வையைப்
போர்த்தி விட்டீர்கள்?
••
வசந்தத்தை
வரவேற்கக் காத்திருந்த
என் இளமைக்குள்
எதற்காகத்
தணற்குச்சிகளை
எறிந்தீர்கள்?
••
"நீங்களா இப்படி?"
என்பதை
எண்ணி எண்ணியே
என்மனது
ஏகப்பட்ட
சலனங்களில்
சிக்கித் திணறுகிறது!
••
வாழ்க்கை
விதியின் நிழ்லில்
இளைப்பாறுகிறது!
••
செல்வி-பஹிமா ஜஹான்-
தெமட்டகொல்ல, மெல்சிரிபுர

## கல்லறைக்குள் காதலிப்போம்

கண்ணுக்குள் கலந்து
நெஞ்சுக்குள் குடியிருப்போம்
காற்றில் நடந்து
நிலவில் கை கோர்ப்போம்.
பேச்சு விடுத்து மௌனத்தில்
பரிபாசிப்போம்.
▫▫
பால பழம் மறப்போம்
பார்வைக்குள் பசி இருப்போம்.
புல்மீது பனித்துளியாய்
புன்னகைப்போம்.
பூவுக்குள் தேனாய் புகுந்திடுவோம்.
▫▫
பொல்லாத பேச்சையும்
காதலின் வெறுமையையும்
கடலுக்குள் புதைத்திடுவோம்.
வேரோடு காதலை
விழுத்த நினைத்து விட்டால்
போராடுவோம்.
▫▫
மோதல தொடருமென்றால்
சாதல் அணைத்து நின்றால்
அப்போதும் யாருக்கும்
தெரியாமல்
தடைகள் தொடராமல்
கல்லறைக்குள்
காதலிப்போம் வா!
ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13.

## ஏமாந்த அன்றில் இரவில்....!

சாமக்கோழி
கூவியாகிட்டு...
இரவும்
தூங்கியாகிட்டு...
'பிரிட்டன்' பலதும்
போட்டாகிட்டு...
...ம்ஹும்...!
+ + +
சிந்தித்து
சிந்தித்து
தலையே
சுமையாய் போச்சு...!
+ + +
குப்பவாரி போல்
விரலை மடக்கி
மண்டைநோக
சொறிந்து...
+ + +
படுத்த பாய் சத்தி
நிலத்தில் குத்தி
மூட்டையின்றி ஏமாந்து...
+ + +
நுளம்பென்று
சுவரிலுள்ள
கறுப்புப் பள்ளிகளை
அடித்து...
+ + +
சீ...
+ + +
தூக்கம் ,
தொலைந்து போயிற்று!
+ + +
அது என்றாலும்
எடுத்திருக்கலாம்
இதைப்போய்
எங்கே தேடுவது?
+ + +
இமைகள்
இரண்டிற்கும்
'சிப்'தைத்து
அல்லது
பிசின் பூசி ஒட்டியாவது
தூங்கவேண்டும் போல்...
ஆனால்
அதுதான்
இரு
துருவங்களாயிற்றே...!
+ + +
இரவின் தொண்டைக்குள்
உயிர்
பதைபதைக்கிறது!
+ + +
புவியின்
பிரசவத்திற்கு
பறவைகள் கூடி
ஒப்பாரி வைக்கிறது
இனி சூரியன் பிறப்பான்!
+ + +
எல்லாமே விடியும்
என் இதயம் மட்டும்
இரவாகவே இருக்கும்!
+ + +
மீராவோடை. எஸ். நளீம்

## மரணத்தை மன்னித்துவிடு!

தடுமாற்றங்களை
தகர்த்துவிடு!
!!
தவறுகளை
தண்டித்துவிடு!
!!
தீமைகளை
தீயில் இடு!
!!
தீண்டாமைகளை
தீர்த்துவிடு!
!!
துன்பங்களை
துறந்துவிடு!
!!
சந்தேகங்களை
சமாதியாக்கிவிடு!
!!
கொடுமைகளை
கொளுத்திவிடு!
!!
கோபங்களை
கோடையாக்கிவிடு!
!!
கேடுகளை
கேள்வியாக்கிவிடு!
!!
குற்றங்களை
குமிழ் நீராக்கிவிடு!
!!
பொய்களை
பொடியாக்கிவிடு!
!!
அச்சங்களை
அடுப்பில் இடு!
!!
இடையூறுகளை
இம்சைப்படுத்து!
!!
வறுமைகளை
வனாந்தரமாக்கிவிடு!
!!
வதந்திகளை
வன்மித்துவிடு!
!!
வம்புகளை
வறட்சியாக்கிவிடு!
!!
வெறுப்புகளை
வெட்டிவிடு!
!!
மனிதனே...
மரணத்தை
மட்டும்
மன்னித்துவிடு...!!
!!
ஷஹிர்ஷா தாஸிம் -
தர்கா நகர்

## சொல்லாமல் போன சொந்தக்காரிக்கு....

உன்
விழிகள் தொடும்
தூரத்திற்கே
மீண்டும் மீண்டும்
நான்
துரத்தப்படுகிறேன்.

காதலி
இப்போது
நீ எங்கிருக்கிறாய்....?
ஓர்
அந்நிய தேசத்திற்கா
இடம் பெயர்ந்து
போய் விட்டாய்...

நீ இல்லாத
குடியிருப்புக்களில்
தபால் காரன் எதற்கு
ஆறுதலுக்காகவா
அனுப்பி வைத்தாய்....?

இப்போதெல்லாம்
நினைவுப் பாத்திரம்
நீயிருந்த
நிலாக்கால
நினைவுகளால்தான்
நிரம்பியிருக்கிறது.

வசந்தங்களை இழந்த
இந்த
வடகிழக்கைப் போல
நான்
வருந்திக் கொண்டிருக்கிறேன்...
ஒரு
வார்த்தையாவது
சொல்லிவிட்டுப்
போயிருக்கலாம்....!

அ. சுதாகர்

## ஒரு காதலனின் சமாதியில்...

என்னவளே!
இறந்து போன காதலிக்காக
சாஜஹான் கட்டிய
மஹாலைப்பற்றி
கேள்விப்பட்டிருக்கிறேன்.
ஆனால்...,
நீ உயிருடன்
இருக்கும் போதே
உனக்காக - நான்
எழுப்பிய
கோபுரத்தை பாராய்!!!
நிட்டம்புவ-கலாயுவன்

## எனது கனவு...

எங்கோ
அமைதியின்
சந்தம் கேட்டது...
•••
சமாதான
நந்தவனத்தில்
இரு மொழிக்காதலர்கள்
ஒரு மொழியில்
கொஞ்சினர்!
•••
எப்படியோ
இளைஞர்கள்
'துப்பாக்கி'
என்றால் என்ன?
என்று கேட்டனர்!
•••
இப்போது
உடலை
ஈரமாக்குவது
வியர்வையும்
நீர்த்துளியும் மட்டுமே!
•••
ஒவ்வொரு நாளும்
வெண்புறாக்களுக்காக
விழா எடுக்கப்பட்டது
அதற்கு
'கழுகுகள்' தலைமை
தாங்கின!
•••
அதிகாலையில்
சேவல்கள்
அமைதியின்
வயதுகளைக்கூவின
•••
இங்கு
சேவல் கூவியதும்
நான்
விழித்துக்கொண்டேன்!
ஆனால்
அது எங்கள்
இறுதி நாட்களை
கூறியது போல்
இருந்தது.
கா.தினேஷ் - மட்டக்களப்பு

## கவிதை தந்தவளுக்காக...!

*****
என்
கவிதைகளுக்கு
இந்த
பூமியில் கிடைத்த
மிகப்பெரிய
கௌரவம்
நீ
சொல்லிவைத்த
'நன்றாக இருக்கின்றது'
என்பதுதான்!
*****
அந்த
உன்
மெல்லிதழ்
போர்த்திய
பொன்னாடைகளை
என்
ஹிருதய இல்லத்தில்
சட்டம் போட்டு
மாட்டி வைத்திருக்கிறேன்!
*****
உன்னை
சந்தித்த
பின்னர்தான்
தொலைந்துபோன
என் பேனா
சொல்லிக் கொள்ளாமலேயே
என்
சட்டைப்பையில்
அமர்ந்திருப்பதை
பார்த்தேன்!
*****
கடல் நீரை
"மை" ஆக்கி
வானத்தை
ஏடுகளாக்கி
உன்
விழிகள்
உதிர்த்த
கற்பனைகளை
என்
இதயக் களஞ்சியங்களில்
சேமித்து வைத்திருக்கிறேன்!
*****
இனி!!!
உன்
பயணங்களில்
அடியெடுத்து
வரப்போவது
நான்அல்ல.
உன்
கற்பனைகள்
விதைத்த
என்
கவிதைகள்தான்!
*****
ஹெந்தளை நவா




# இந்த வாரம் உங்கள் பலன்

(23.09.95 முதல் 30.09.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| கன்னி | - | சூரியன்,புதன்,வெள்ளி |
| துலாம் | - | செவ்வாய், இராகு |
| விருட்சிகம் | - | வியாழன் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

★ சந்திரன்-கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், கடன்படல் | பகல் 12 மணி |
| திங்கள்-புதிய முயற்சி, மனக் கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, இனசனவிரோதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில்நிலை சிறப்பு ,பொருள்வரவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- முயற்சிகளில் வெற்றி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிடப்பயணம், கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-காரியானுகூலம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த எண்ணம், பலவிதபேறு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்கவலை நீங்கும். | காலை 9 மணி |
| வெள்ளி- வெளியிடப்பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்தநிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெருள்வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- பணக்கஷ்டம், கடன்படல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், இனசன விரோதம். | காலை 6 மணி |
| வெள்ளி- மனக்கவலை, பொருள்பேறு. | பகல் 12 மணி |
| சனி- திடீர்ப்பயணம், செலவுமிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பொருள்வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள்வரவு, பூமிப்பேறு. | காலை 7 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- உயர்ந்த எண்ணம், பணக்கஷ்டம் | பி.ப. 2 மணி |
| சனி- இனசனவிரோதம், மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-வெளியிடப் பயணம், பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்-பொருள்வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர்நீங்கும், முயற்சிபலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- காரியசித்தி, உறவினர் உதவி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- வெளியிடவாழ்க்கை, பணச்செலவு. | காலை 8 மணி |
| வெள்ளி- துயர்நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- பணச்செலவு, கடன்படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, புதிய முயற்சி. | பகல் 11 மணி |
| புதன் - துன்பம் நீங்கும், இனசன உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- புதியநட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்கேடு, மனக்கவலை: | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப்பயணம், செலவுமிகுதி. | காலை 6 மணி |
| புதன்- துயர்நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள்வரவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பணவரவு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| சனி- பயனுள்ளசெயல், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச்செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண்கவலை, உறவினர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி- காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- வெளியிடவாழ்க்கை, உயர்ந்தநிலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை, பணச்செலவு. | காலை 6 மணி |
| புதன்- பொருள் நட்டம், கடன்படல். | பகல் 12 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, பணச்செலவு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடவாழ்க்கை, உயர்ந்தநிலை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- மனக்கவலை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், காரியசித்தி. | காலை 7 மணி |
| வியாழன்- பொருள்வரவு, கௌரவக்கேடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பொருள்வரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்தநட்பு, மனக்கவலை நீங்கும் | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள்வரவு, பெரியோர்உதவி. | காலை 7 மணி |
| புதன்- பயனற்ற செயல், கௌரவம் | பகல் 12 மணி |
| வியாழன்- துயர்நீங்கும், காரியசித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், பணவரவு. | மு.ப. 9 மணி |
| சனி- புதியமுயற்சி, மனமகிழ்ச்சி | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com





# அருவி



மலையை விட்டு இறங்குது
மணிகள் போல முழங்குது
சலவை செய்த துணியைப் போல்
கண்களுக்குத் தெரியுது.

அன்னை மண்ணில் விழுகையில்
அருவி யென்று சொல்கிறோம்.
மண்ணின் மடியில் தவழ்கையில்
நதியென் றதனைச் சொல்கிறோம்.

கொளுத்து கின்ற கோடையில்
குளிர்ந்த காற்றை வழங்குது
குளிக்கும் போது மேனியின்
கொடிய நோயும் தீருது.

நெசவுக் கேற்ற பாவு போல்
நேர்த்தி யாக மின்னுது
பசுமை பொங்கும் அருவியைப்
பார்க்கப் பார்க்க அழகுதான்.

விநாயகமூர்த்தி

அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்;
சிறியாரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.

சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஏமாற்றாதே ஏமாறாதே!



புதூர் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு விவசாயி தனது நிலத்தை உழுவதற்காகச் சென்று கொண்டிருந்தார். பாதையில் ஏதோ ஒரு பொருள் பளபளவென்று மின்னுவதைக் கண்ட அவர், குனிந்து அதை எடுத்தார்.

"இது என்ன! உடைந்த கண்ணாடித் துண்டா?" என்று அவர் பார்த்துக் கொண்டிருந்த போது, அந்த வழியே ஒரு வைர வியாபாரி வந்தான்.

அவன், விவசாயி ஒரு வைரக் கல்லை வைத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான். அது வைரக்கல் என்பது விவசாயிக்குத் தெரியாது என்பதை அவரது செயல்களில் இருந்து அறிந்து கொண்ட வைரவியாபாரி, அந்த வைரக்கல்லை விவசாயிடமிருந்து எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

அவன் விவசாயியை நெருங்கி, "ஐயா! என்ன ஏதோ ஒரு கண்ணாடித் துண்டை வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பி பார்க்கிறாய்? அது வெறும் கண்ணாடித் துண்டுதான்; நான் ஐம்பது ரூபாய் தருகிறேன். அதை எனக்குக் கொடு!" என்று கேட்டான்.

விவசாயி வைரவியாபாரியைப் பார்த்தார். ஒரு சாதாரண கண்ணாடித் துண்டிற்கு ஒரு மனிதன் ஐம்பது ரூபாய் தர முன் வருகிறான் என்றால், இந்தக் கண்ணாடித் துண்டு விலை மதிப்புடைய தாய் இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

"ஐம்பது ரூபாய் போதாது! இன்னும் அதிக விலை வேண்டும்!" என்று சொன்னார் விவசாயி.

"நூறு ரூபாய் தருகிறேன்!" என்றான் வைரவியாபாரி.

"ஊஹூம்! போதாது!" என்றார் விவசாயி.

"சரி இருநூறு ரூபாய் தருகிறேன். இதற்கு மேல் இந்தக் கண்ணாடித்துண்டு விலை பெறாது!" என்றான் வைர வியாபாரி.

"இதுவும் போதாது இன்னும் கொஞ்சம் அதிகம் தா" என்றான் விவசாயி.

"இன்னும் அதிகமெல்லாம் தரமுடியாது. ஐம்பது ரூபாயில் இருந்து இருநூறு ரூபாயாக கூட்டித்தருகிறேன். ஆனால் நீ பேராசைப்படுகிறாயே!" என்றான் வைரவியாபாரி.

"நீ குறைந்த விலையில் என்னிடம் இருந்து இதை அபகரிக்க நினைப்பது, என்னை விடப்பேராசை பிடித்தவன் என்று உன்னை எனக்குக் காட்டுகிறது!" என்றார் விவசாயி.

"இதோ பார்! நீ எதிர்பார்க்கிற அளவெல்லாம் இது விலைபோகாது. ஏதோ பார்க்க அழகாக இருந்தது. அதற்காக அதை வாங்கி அழகுக்காக அலமாரியில் வைக்கலாம் என்று நினைத்தேன். அவ்வளவுதான். இதற்கு இருநூறு ரூபாய் மிக மிக அதிகம்.

"எதற்கும் நான் அடுத்த ஊர்வரை சென்றுவிட்டு அரைமணி நேரத்தில் திரும்பிவருகிறேன். அப்பொழுது நீ உன் முடிவைச் சொல்!" என்று கூறிவிட்டு வைரவியாபாரி சென்றுவிட்டான்.

சொன்னதுபோல் அரைமணி நேரத்தில் வைரவியாபாரி திரும்ப விவசாயியை வந்து சந்தித்தான்.

"என்ன முடிவு செய்தாய்?" என்று கேட்டான்.

"அந்தக் கண்ணாடித் துண்டை ஒருவருக்கு ஐந்நூறு ரூபாயிற்கு விற்று விட்டேன்," என்றான் விவசாயி.

அதைக்கேட்ட வைரவியாபாரி திடுக்கிட்டு,

"அட முட்டாளே! அதை என்ன என்று நினைத்தாய்? அசல் வைரம். அதன் மதிப்பு எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சம் ரூபாய். இப்படி அநியாயமாக யாரோ ஒருவனுக்கு ஐநூறு ரூபாவுக்கு விற்றுத் தொலைத்து விட்டாயே. என்னிடம் ஆயிரம் ரூபாய் கேட்டிருந்தால்கூட கொடுத்திருப்பேன்!" என்று புலம்பினான் வைரவியாபாரி.

அதைக்கேட்ட வியாபாரி ,

"என்னையாரும் முட்டாளாக்க முடியாது. அது வைரம் என்று எனக்குத் தெரியும். அதன் உண்மையான விலையை உன் வாயாலேயே கேட்டு விடத்தான் எதுவும் தெரியாதவன் போல் நடித்தேன். இந்த வைரத்தின் மதிப்பு ஒரு இலட்சரூபாய் என்று நீயே சொல்லி விட்டாய். ஆகவே எனக்கு நீ எண்பதாயிரம் ரூபாய் தந்தால் இந்த வைரத்தை உனக்குத் தருகிறேன்!" என்றான்.

விவசாயியை ஏமாற்ற நினைத்து, தான் ஏமாந்து கொண்டதற்காக வெட்கப்பட்டான் வைரவியாபாரி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.09.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 109
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 106

பரிசுக்குரியவர்:
க.யோகேஸ்வரன்
பது/தமிழ் மத்திய கல்லூரி, ஹப்புத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். நமீர் உவைஸ், கே/பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி, வறகாபொலை. | எல். தர்மராஜ் இ/பரியோவான் தமிழ் மகா வித்தியாலையம், இறக்குவானை. |
| சௌம்யா பிரூராம், க/அசோகா வித்தி. கண்டி. | ரஞ்சனிமாலா, நல்லிலை பாற்றிய கன்னியர் பாடசாலை, நுவரெலியா. |
| க. கார்த்திக்கா, மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி, வாழைச்சேனை | மாஸ்றூன், அல்-ஹிதாயா வித்தியாலயம், மிராவோடை-04 |
| எம். இஸட். எவ். சில்மியா ஹேனமுள்ள, பாணந்துறை. | எஸ். பிரேமகிருஷ்ணராகுல் கதிரேசன் கனிஸ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி. |
| ரி. மீரால், லோவர் றோட், ஓர்ஸ் கில், திருக்கோணமலை. | செல்வன். எம். எப். எம். பஸ்ரின் மாவனல்ல. |

## பறக்கும் பாம்பு

பறக்கும் பாம்பு ஒரு மீட்டர் அல்லது 2 மீட்டர் நீளம் வரை இருக்கும்.

ஒரு மரத்தின் கிளையில் இருந்து மற்றொரு மரத்தின் கிளைக்குப் பாயக்கூடிய திறமை பெற்றிருக்கிறது.



பாயும்போது தன் உடலை நன்றாகச் சுருட்டிக் கொள்ளும். பின்னர் சுருள் வில்லைப் போலவும், அந்தச் சுருளை திடீரென்று அவிழ்த்துக் கொண்டு சம நிலைக்கு வந்துவிடும்.

## கல்லறை வாசகம்

உலகத்தையே தன் பிடியில் கொண்டுவர நினைத்தவர் மாவீரன் அலெக்ஸாண்டர்.

அவரது கல்லறையில் எழுதப்பட்டுள்ள வாசகம். இப்படி இருக்கிறது.

" உலகம் முழுவதும் தமக்குப் போதவில்லை என்று கூறிய இவருக்கு இப்போது கல்லறை போதுமானதாக இருக்கிறது".

## நரம்புள்ள நாக்கு

நாக்கில் நரம்பில்லையா? என்று சிலர் பேசுகிறார்கள் அல்லவா. நம்பாதீர்கள். நமது நாக்கில் 9 ஆயிரம் சுவை நரம்புகள் இருக்கின்றன.

## கண்கள்

மனிதனின் கண்கள் மிகச் சக்தி வாய்ந்தவையாகும். 17 ஆயிரம் விதவிதமான வர்ணங்களை கண்களால் பிரித்தறிய முடியும்.

# கண்டு பிடி - கண்டு பிடி

'யம்' என்று முடியும் சில சொற்கள் தரப்படுகின்றன. அவற்றுக்கான குறிப்புக்களை வைத்து சொற்களை கண்டு பிடியுங்கள்.

1 யம் - ருசிக்கும்
2 யம் - மணக்கும்
3 யம் - வெளுக்கும்
4 யம் - குடிகெடுக்கும்
5 யம் - நீலநிறம்
6 யம் - பத்திய மருந்து
7 யம் - குதிரை கட்டும் இடம்
8 யம் - மலிவு
9 யம் - கோழைத்தனம்

விடைகள்

1. வெங்காயம், 2. பெருங்காயம், 3. சாயம், 4. சாராயம், 5. ஆகாயம், 6. கசாயம், 7. லாயம், 8 நயம், 9. பயம்

# வாரம் ஒரு நாடு

## கிரெனடா



1983 இல் அமெரிக்கா இதை ஆக்கிரமித்தது. 1984 இல் பொதுத் தேர்தல். 1985 இல் அமெரிக்க இராணுவம் விலகியது.

**தலைநகர்** - சென்ஜோர்ஜ்
**பரப்பளவு** - 344 சதுரகிலோமீற்றர்.
**மொழி**- ஆங்கிலம், பிரேஞ்சு, ஆபிரிக்கன் படோய்ஸ்
**எழுத்தறிவு** - 95%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - கிழக்கு கரீபியன் டொலர்
**தனிநபர் வருமானம்:** 2800 டொலர்

**அமைவிடம்:**
கிழக்கு கரீபியன் கடலில் அமைந்துள்ள விண்வோர்ட் தீவுக்கூட்டங்களின் தெற்கே அமைந்துள்ளது. இதன் தெற்கே 150 கிலோமீற்றர் தொலைவில் ட்ரினிடாட்டும், வடக்கில் 110 கிலோமீற்றர் தொலைவில் செண்ட் வின்செண்ட்டும் அமைந்துள்ளன.

**வரலாறு:**
பிரிட்டன் 1974 இல் சுதந்திரம் வழங்கியது. 1983ல் இராணுவப் புரட்சி. சோவியத் துணையுடனான அரசு அமைக்கப்பட்டது.

**பொருளாதாரம்:**
சுற்றுலா மற்றும் விவசாயம் முக்கிய வருமான மூலங்கள், கொக்கோ, வாழைப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

# விடுகதைகளும் விடைகளும்

1. நித்தம் கொட்டும். சத்தம் இல்லை. அது என்ன?

2. புல்லைத் தின்னும் குதிரை அல்ல, காதோ நீளம் கழுதையும் அல்ல, தாவிச் செல்லும் தவளையும் அல்ல, குழிதோண்டி வாழும் எலியும் அல்ல, அதன் பெயர் என்ன?

3. கையில்லை மணி அடிப்பேன், உயிருமில்லை ஆனால் சொல்லியதை சொல்வேன். நான் யார்?

4. படம் எடுக்கும் பாம்பல்ல, பறக்கும் ஆனால் பறவையும் அல்ல, வாலை ஆட்டும் நாயும் அல்ல, நாட்டியம் ஆடும் பெண்ணல்ல அது என்ன?

5. கழுத்தை வெட்டினால் கண்கள் தெரியும் அது என்ன?

6. இயந்திரத்தில் நூற்காத நூலால் மீனவர் பின்னாத வலை அது என்ன?

7. நாளுக்கு நாள் இளைத்து போகிறேன், ஆனால் என்னைப் பற்றிய கவலை யாருக்கும் இல்லை. நான் யார்?

8. சொல்லின் சூரன்; சுமையின் வீரன்; கோட்டையின் மன்னன் -அவன் யார்?

விடைகள்

1. கண்ணிமைகள் 2. முயல்
3. தொலைபேசி 4. பட்டம்
5. நுங்கு 6. சிலந்திவலை
7. கலண்டர் 8. நாக்கு.

## அந்தப் பத்து

பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பார்களே. அது என்ன பத்து? தெரியுமா? மானம், குலம், கல்வி, அச்சம், அறிவு, தவம், முயற்சி, இரக்கம், காதல், உறவு. இப்போது தெரியுமல்லவா.

## இரகசியம் என்ன?

. பண்டைய கிரேக்க அறிஞர்களும், தத்துவ மேதைகளும், கவிஞர்களும் 80 வயதுக்கு மேல் வாழ்ந்தார்கள். இவர்கள் நீண்டகாலம் வாழ்ந்ததற்கான இரகசியத்தை கண்டறிய இப்போது ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

## விசேஷம்

மஞ்சள் நிறத்தில் உள்ள விசேஷ குணம் என்ன தெரியுமா? நெடுந் தொலைவில் நின்று பார்த்தாலும் கண்களுக்கு தெரிந்துவிடும்.


படிப்பகம்

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம்

## பட்டுக்கோட்டை பிரபாகர்



அமெரிக்காவின் தலை சிறந்த தனியார் துப்பறியும் ஸ்தாபனங்களில் ஒன்று ஜோ அன்ட் ஜோ. மிகப் பிரபலம். சின்சின்னாட்டியில் இருந்து வந்திருக்கும் கடித அழைப்பையும், இதையும் ஒப்பிடவே முடியாது. இது ஒரு பாங்கின் நகரத்துத் தலைமை அலுவலகம் என்றால், அது கிராமத்தில் எண்ணிக்கைக்காக துவக்கப்பட்ட சின்னக் கிளைதான். ஜோ அன்ட் ஜோவில் சாமர்த்தியங்களுக்கும், சாகசங்களுக்கும் நூறு சதவிகித வாய்ப்புக்கள் உண்டு. பெரிய நிறுவனம். தன் ஊழியர்களை செனட் உறுப்பினர்களைப்போல தாங்கும் நிறுவனம்.

மாலை சந்திப்பின் போது அவர்கள் சொல்லும் விபரங்களுக்கெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு தாராளமாக டபிள் யெஸ் சொல்லலாம்.

"டியர், யுவர் பிரேக் பாஸ்ட் ஈஸ் ரெடி" என்றாள் ரெய்ஸா.

பார்க்கர் ஸ்மித் இப்போதே தீர்மானத்திற்கு வந்திருந்தார். இன்டர்காம் எடுத்து கீழே பார்க்கிங் பகுதிக்கு அருகில் ஓய்வறையில் இருந்த தன் டிரைவரைத் தொடர்பு கொண்டு, "வெஸ்லி, இன்றைக்கு ட்ராஃபிக் எப்படியிருக்கிறது? மாலை ஐந்து மணிக்கு ஃபிலடல் ஃபியாவில் இருக்க வேண்டும் நான். எத்தனை மணிக்குப் புறப்படலாம்?"

"இன்றைக்கு ட்ராபிக் நார்மலாகத்தான் இருக்கிறது. மூன்று பதினைந்துக்குப் புறப்பட்டால் போதுமானது சர்."

"சரி. கேஸ் ஸ்டேஷன் போய் நிரப்பிக் கொண்டு வந்து வைத்துவிட்டு நீ போகலாம். மூன்று மணிக்கு வந்தால் போதும்."

"தாங்க் யூ சர்."

பார்க்கர் ஸ்மித் உற்சாகமாக எழுந்தார்.

சரியாக 5 மணிக்கு ஃப்ராங்லின் ப்ளாஸாவின் முதல் பாரில் இருந்தார் ஸ்மித்.

ஒரு ஸ்டுவர்ட் வந்து, "மிஸ்டர் பார்க்கர் ஸ்மித்?" என்றான்.

"யெஸ்"

"ஆறாம் நம்பர் பூத்தில் உங்களுக்காக மிஸ்டர் ப்ரூடியும் மிஸ்டர் அலன் மார்ட்டினும் காத்திருக்கிறார்கள். திஸ் வே ப்ளீஸ்"

உறுத்தாத வெளிச்ச ஹாலில் அவனைத் தொடர்ந்து நடந்த பார்க்கர், பூத் என்று அழைக்கப்பட்ட சற்று விசாலமான அறையின் கதவில் பாலிஷ் போடப்பட்ட பித்தளை '6' ஐப் பார்த்துக் கொண்டு, கதவைத் தட்டி அனுமதி பெற்று உள்ளே வந்தார்.

அறை வெப்பம் செய்யப்பட்டிருந்தது. கண்ணாடிச் சுவர்களை தடித்த திரைகள் மறைத்தது போக மிச்சமிருக்கும் பகுதிகளில் வாகனங்களின் ஊமை இயக்கங்கள். மூன்று வசதியான, தனித்தனியான குஷன் நாற்காலிகள் மத்தியில் நீளமாக டீப்பாய் இருந்தது. டீப்பாயின் மேல் பூங்கொத்து. ரேஷன் செய்யப்பட்ட செயற்கை வெளிச்சம்.

"குட் ஈவினிங் மிஸ்டர் பார்க்கர். நான் தான் ப்ரூடி ஜேம்ஸ்" என்று எழுந்து நின்று கையை நீட்டிப் பற்றி அழுத்தமாகக் குலுக்கினவனுக்கு பிரௌன் நிறத்தில் கண்கள். கறுப்பு சூட்டில் இருந்தான். இன்னொர் ஜாக்கெட்டுக்குள் டையைச் செலுத்தி இருந்தான். புன்சிரிப்புடன் இருந்தான். மீசையில்லாமல் இருந்தான்.

"குட் ஈவினிங்" என்று பார்க்கர் தன் தொப்பியைக் கழற்றி டீப்பாயின் மேல் கவிழ்த்து வைத்து விட்டு காட்டப்பட்ட சேரில் அமர்ந்தார்.

"மீட் மிஸ்டர் அலன்மார்ட்டின். செகண்ட் டைரக்டர் ஆஃப் ஜோ அண்ட் ஜோ."

"ஹலோ சார் நைஸ் டு மீட் யு"

அலன்மார்ட்டின் சிரித்தபோது இரண்டு பற்கள் தங்கப் பற்கள். கைகளில் கிளவுஸ் அணிந்திருந்தான். பிஸினெஸ் சூட்டில் இல்லாமல் கேஷுவல் ஃபுல் ஷர்ட் அணிந்து, மேலே கை இல்லாத லெதர் ஜாக்கெட் அணிந்திருந்தான். கண்ணாடி அணிந்திருந்தான். கையில் புகையும் சிகரெட் வைத்திருந்தான்.

"என்ன சாப்பிட விரும்புகிறீர்கள் மிஸ்டர் பார்க்கர்?"

"ஹெவியாக எதுவும் வேண்டாம். வைன் போதும். ஜஸ்ட் த்ரீ பெக்ஸ். ஒன் ஆஃப்டர் ஒன். அதுகூட இப்போது அவசரமில்லை."

நின்று கொண்டிருந்த ஸ்டுவர்ட்டை அருகில் அழைத்து பார்க்கர் சொன்னதைச் சொல்லிவிட்டு, தனக்குத் தேவையானதைச் சொல்லிவிட்டு, ப்ரூடிக்குத் தேவையானதை கேட்டுச் சொல்லிவிட்டு, "முப்பது நிமிடங்கள் கழித்து கொண்டு வந்தால் போதும்" என்றான் அலன்மார்ட்டின்.

அவன் சென்றதும் ப்ரூடி கேட்டான்:

"சென்ட்ரல் இண்ட்டெலிஜென்ஸ் ஏஜன்சியில் இருந்து எப்போது விலகினீர்கள் மிஸ்டர் பார்க்கர்?"

"சரியாகச் சொல்வதென்றால் இருபத்தி ஏழு நாட்கள் ஆகின்றன."

"சில சமயங்களில் வேலை ஓய்வுக்கான வயதைத் தாண்டிய பிறகும் சிலரை விசேஷ காரணங்களுக்காக பணியைத் தொடரச் சொல்வதுண்டே. தங்களுக்கு அப்படி எதுவும் வாய்ப்பு தர முன்வரவில்லையா ஏஜன்சி?"

"விரும்பியிருந்தால் அந்தச் சலுகையை நான் பெற்றிருக்க முடியும். புதியவர்களுக்கு வழிவிட்டு நான் விலகிக் கொண்டேன்."

"ஜோ அண்ட் ஜோவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

மிக நன்றாக உங்கள் நிறுவனத்தை எனக்குத் தெரியும். இரண்டு சந்தர்ப்பங்களில் எங்கள் உதவியை நாடியிருக்கிறீர்கள். நான் சொல்வது அட்மிரல் டர்னர் சி.ஐ.ஏ வின் டைரக்டராக இருந்த காலகட்டத்தில். சரி தானோ?"

"மிக சரி. மிஸ்டர் கார்ட்டர் ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் நாங்கள் எதிர்பார்க்காத ஒரு பெரிய ரகசியப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்திருந்தார்."

"அதுவும் தெரியும். ஃபோர்ப்ஸ் பத்திரிகையில் அந்த ரகசிய செய்தி ஹேஸ்யமாக வெளியிட்டதாக நீங்கள் மறுப்பு தெரிவித்திருந்ததும் தெரியும்."

"தகவல்களை விரல் முனையில் வைத்திருக்கிறீர்களே...... ஒரு தனியார் ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளைக்கூட இவ்வளவு தூரம் கவனித்து வந்திருக்கிறீர்களே..... ஆச்சரியமாக இருக்கிறது."

"பிரபலமான ஸ்தாபனமாயிற்றே..... வெளிநாடுகளில் கூட கைவரிசை காட்டும் ஸ்தாபனமாயிற்றே. கவனிக்காமல் இருக்க முடியுமா?" என்று பார்க்கர் தன் கோட் பாக்கெட்டில் இருந்து ஹோல்டரும் சிகெரட்பாக்கெட்டும் எடுத்து, சில வினாடிகளில் தொண்டையில் மென்த்தால் காட்டத்தை உணர்ந்தார்.

"வெல் எங்கள் நிறுவனத்தைப்பற்றி நிறைய அறிந்து வைத்திருக்கிறீர்கள். உயர்ந்த எண்ணத்தில் தான் இருக்கிறீர்கள். எங்களுடன் உங்களைப் பிணைத்துக் கொள்வதில் தயக்கம் ஏதாவது இருக்கிறதா?"

"என் சில கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், தயக்கம் எதுவும் இல்லை."

"என்ன உங்கள் கொள்கைகள்?"

"நம் நாட்டிற்கு எதிராக எந்த ஒரு காரியத்தையும் செய்வதில்லை."

"ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டிய கொள்கை."

"மிகவும் அவசியப்பட்டாலொழிய உயிர்ப் பலிகளை ஏற்றுக்கொள்வதில்லை."

"இது மனிதாபிமான அடிப்படையில் எழுந்த கொள்கை. பிறகு?"

"என் மரியாதையையோ, சுதந்திரத்தையோ எப்போதும் விட்டுக் கொடுப்பதில்லை."

"இது தன்மானம் வகுத்துத் தந்த கொள்கை. அப்புறம்?"

"அவ்வளவுதான்."

"மிஸ்டர் பார்க்கர், உங்கள் கொள்கைகளுக்கு மாறாக எங்கள் நிறுவனம் எப்போதும் நடந்துகொள்ளாது என்று அதன் முக்கியப் புள்ளி என்கிறவகையில் நான் உத்தரவாதம் அளிக்கமுடியும்."

"அப்படியானால் ஜோ அண்ட் ஜோவில் சேர எனக்குச் சம்மதம்."

"மகிழ்ச்சி. நிச்சயம் எங்கள் டைரக்டர் மிக மகிழ்வார். மாதச் சம்பளமாக எதிர்பார்த்தாலும்சரி, ப்ராஜெக்ட்வைஸ் எதிர்பார்த்தாலும் சரி எதற்கும் நாங்கள் சம்மதம்."

"பணம் எனக்கு இரண்டாம் பட்சம். நான் பிஸியாக இருக்கவிரும்புகின்றேன். அதனால் தான் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன். எப்போது சேர வேண்டும் மிஸ்டர் அலன்மார்ட்டின்?"

"நீங்கள் சம்மதம் என்று சொன்ன நிமிடமே சேர்ந்து விட்டீர்களே. இப்போது நீங்கள் ஜோ அண்ட் ஜோவின் முக்கிய நபர்களில் ஒருவர். வெல் மிஸ்டர் ப்ரூடி, அவருக்காக காத்திருக்கும் முதல் ப்ராஜெக்ட்டை விரிவாகச் சொல்லுங்கள். நான் சில நிமிடங்களில் வருகிறேன்."

அலன்மார்ட்டின் எழுந்து கொண்டு பூத்துடன் இணைந்திருந்த டாய்லெட் அறைக்குள் சென்றான். ப்ரூடி சொல்லப் போகும் ப்ராஜெக்ட்டிற்காகக் காத்திருந்தார் பார்க்கர்.



"தங்களுக்கு இந்தியாவுடன் பரிச்சயம் உண்டா மிஸ்டர் பார்க்கர்?"

"ஓரளவு உண்டு."

"நீங்கள் எங்களுக்காக முதல் முதலாகச் செயல்படப்போவது இந்தியாவில்தான்" என்றான் ப்ரூடி ஜேம்ஸ்.

பார்க்கர் ஸ்மித் ஆர்வமானார்.

பார்க் அவன்யுவில் வால்டோர்ஃப் ஆஸ்டோரியா ஹோட்டல் அங்கங்கே நறுக்கப்பட்ட பர்த் டே கேக் போலநின்றது. போனால் போகிறதென்று வானம் கொஞ்சம் வெளிச்சம் பூசிக்குளித்துக் கொண்டிருக்க.... டைவிங் போர்ட் இல்லாத க்ளோஸ்ட் நீச்சல் குளத்தில் இதமான வெப்ப நீரில் நீந்திக் கொண்டிருந்தார் பார்க்கர் ஸ்மித்.

"சார் உங்களுக்கு ஒரு போன் கால்" என்று பணியாளன் கார்ட்லெஸ் டெலிபோனைக் கொண்டு வந்தான்.

பார்க்கர் ஸ்மித் நீரில் மிதந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, பணியாளன் நீட்டிய பூத்துண்டால் கையைத் துடைத்துக் கொண்டு வாங்கி, "ஹலோ, பார்க்கர்."

"குட்மார்னிங் மிஸ்டர் பார்க்கர். நான் ஆனி பேசுகிறேன்."

"குட்மோனிங் எப்போது வந்தாய்?"

"உங்கள் வீட்டிற்கு வந்து மூன்று நிமிடங்கள் ஆகிறது. அங்கிருந்துதான் பேசுகிறேன். நேற்று நீங்கள் போனில் பேசியதில் இருந்து ஒரே தவிப்பாய் இருக்கிறது. நான் அங்கு வரட்டுமா?"

"வேண்டாம். 15 நிமிடங்களில் நான் வீட்டில் இருப்பேன். அதுவரை ரெய்ஸா தரும் தேனீரைப் பருகு. என் அறையின் மேஜையின் மேல் சரவணகுமார் என்று எழுதின மணிலா கவர் ஒன்று இருக்கிறது. அதில் இருக்கும் விபரங்களைப் படித்து வை."

"யெஸ் சார்"

பார்க்கர் ஸ்மித் புறப்பட்டு, சொன்ன நேரத்திற்குள் தன் வீட்டில் இருந்தார்.

ஆனி சிகப்பு நிறத்தில் இரண்டு பீஸ் கவுன் அணிந்திருந்தாள். சிகரெட் புகைத்துக் கொண்டு டெலிவிஷனில் யாங் கீ ஸ்டேடியத்தில் நடந்து கொண்டிருந்த பேஸ் பால் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரெய்ஸாவும் அருகில்.

"இன்று இறுதி ஆட்டம். இல்லை?" என்றார் உள்ளே வந்த பார்க்கர்.

"ஆமாம். மெக்ஸிகோவின் டீம் படு வீக். ஆனாலும் நம்மை திணறடிக்கிறார்கள். என் சீஃப் எடிட்டரிடம் 50 டாலர் பந்தயம் கட்டியிருக்கிறேன். அநேகமாகத் தோற்று விடுவேன் என்று நினைக்கிறேன்."

"இப்போது உன் ஆர்வம் இதில் என்றால், நாம் மெதுவாகப் பேசிக் கொள்ளலாம் ஆனி."

"நோ,நோ, இதில் தோல்வி நிச்சயம். நீங்கள் வரும்வரையில் பார்க்க நினைத்தேன்" என்ற ஆனி ரிமோட் கண்ட்ரோலில் டெலிவிஷனைக் கழுவிவிட்டு, சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் நசுக்கிவிட்டு, "சொல்லுங்கள், எதற்காக என்னை வரச்சொன்னீர்கள்?"

"சொல்கிறேன். ரெய்ஸா, ஆனிக்கு டீ கொடுத்தாயா?"

"கொடுத்தார்கள்."

"படிக்கச் சொன்ன விபரங்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது? சரவணகுமார் என்கிற ஒரு இந்தியச் சிறுவனைப் பற்றிய உயரம், உடை, பிறந்த தேதி, விலாசம் என்று விபரங்கள் உள்ளன."

"அவன் சிறுவன் இல்லை. ஒரு பொக்கிஷம்."

"புரியவில்லை."

"சமயம் வரும்போது புரிய வைக்கிறேன். அமெரிக்காவின் ஒரு பெரிய ஸ்தாபனம் எனக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறது. அந்த வேலைக்காக எனக்கு ஐம்பதாயிரம் டாலர் தர சம்மதித்திருக்கிறது."

"ஒரு ப்ராஜெக்ட்டிற்கா?" என்றாள் வியப்பாக.

"ஆமாம். முக்கியமான வேலை. உன் பாஸ்போர்ட் உயிருடன் இருக்கிறதல்லவா?"

"இருக்கிறது."

"இந்த வேலையில் எனக்கு உதவியாக இந்தியா வர விரும்புகிறாயா? பத்து நாட்கள். பத்தே நாட்கள். உன் விடுமுறை நாட்கள் கரைவதோடு, உனக்கு பத்து சதவீத தொகை வருமானமாகவும் கிடைக்கும்" என்ற பார்க்கர் ஸ்மித் அவள் கண்களை உன்னிப்பாகப் பார்த்தார்.

"நைஸ் ஐடியா, ரொம்பகாலமாக உங்கள் அருகில் இருந்து உங்கள் செயல்திறன்களை .கவனிக்க ஆசைப் பட்டிருக்கிறேன். அவசியம் வருகிறேன். எப்படிப்பட்ட வேலை என்று....."

"சொல்கிறேன். அந்த சரவண குமாரை இங்கே கொண்டுவர வேண்டும்."

"அவ்வளவுதானா? சிம்ப்பிளாகத் தெரிகிறதே... இங்கே என்றால் அமெரிக்காவுக்குத்தானே?"

"ஆமாம். ஆனால் இது நீ நினைப்பது போல சுலபமான வேலை இல்லை. அவன் இங்கே வரப்போவது இந்தியாவுக்கும் தெரியக்கூடாது. அமெரிக்க அரசாங்கத்துக்கும் தெரியக்கூடாது."

"அதெப்படி முடியும்?"

"முடியவேண்டும். பார்க்கர் ஸ்மித் முடியாது என்று எதற்குமே சொன்னதில்லை. ஆனி, தனியார் நிறுவனம் என்பதால் அரசாங்கத்திற்குத் தெரியக் கூடாது என்று அவர்கள் விரும்புவதில் நியாயம் இருக்கிறது. இது ஒரு சவால் போல எனக்குப்பட்டதால் நான் ஏற்றுக் கொண்டேன். இது பரிபூரண ரகசியத் திட்டம். ஒரு வகையில் குற்றமே. ஆனால் நமக்கு டாலர்களை அள்ளிக்கொடுக்கும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக செய்யப் படும் குற்றம். இதில் துரோகம் எதுவும் இல்லை. உயிர்வதை எதுவும் இல்லை. வைரக்கல்லை கூழாங் கல்லாக பாவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதன் மதிப்பு தெரிய வாய்ப்பில்லை. அதன் மதிப்பைத் தெரிந்தவர்கள் அடையநினைப்பது இயற்கை. உபயோகம் தெரிந்தவர்கள் உபயோகிப்பது தப்பில்லை. முன் சொன்ன உதாரணம் தான் நினைவுக்கு வருகிறது. பலம் பொருந்தின யானையை சர்க்கஸ் கூடாரத்தில் இருந்து மீட்டு பெரிய வேலைகளை ஒப்படைக்கப் போகிறார்கள். நாம் செய்யும் வேலை-அந்த மீட்பு வேலைதான்."

"பாதி புரிகிறது. பாதி புரியவில்லை. என்றாலும் உதவியாக இருக்கப் போகும் இந்தப் பத்துநாட்கள் எனக்கு நிறைய புதிய அனுபவங்களைத் தரப்போகின்றன என்னும் நம்பிக்கையில் நான் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்கிறேன்."

"இது ரகசியமான திட்டம் என்பதைச் சொல்லி விட்டேன். ஆகவே இரகசியத்தை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்றும் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்."

"தேவையில்லை. வற்புறுத்தி என்னிடம் விஷயம் வரவழைக்கப்படும் சூழ்நிலையில் என் ஆவிதான் பதில் சொல்லும். எப்போது புறப்பட வேண்டும்?"

"அநேகமாக நாளை மறுநாள். நாளை உறுதி செய்கிறேன்."

"இந்தியாவில் எங்கே தங்குகிறோம்?"


"தமிழ்நாடு என்னும் மாநிலத்தில். அதன் தலைநகர் சென்னையில்" என்றார் பார்க்கர் ஸ்மித்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ். ஜெயகுமார்
வயது: 30
முகவரி: 56/1, 2ம் கட்டை, பசறைவீதி, பதுளை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: முகமட் கான்
வயது: 28
முகவரி: 16, குருநாகல் வீதி, புத்தளம்.
பொழுதுபோக்கு: கதைப் புத்தகம், வீடியோ கேம்.



பெயர்: கே. பிரதீபன்
வயது: 14
முகவரி: 131/85, ஏ. ஜெம்பட்டா தெரு, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: டி.வி. வானொலி, பத்திரிகை.



பெயர்: முகமட் சுக்ரி
வயது: 38
முகவரி: P.O.BOX-34037-73251, ADELIYA, KUWAIT.
பொழுதுபோக்கு: சினிமா, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். லோகி
வயது: 24
முகவரி: PFORRANT MAIHOF, ROSENBERGOHE-06, 6004, LUZERN, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். பமீலா
வயது: [illegible]
முகவரி: முகைதீன் மொஸ்க் வீதி புதிய [illegible]த்தான் குடி.
பொழுதுபோக்கு: பூந்தோட்டம் வளர்த்தல், முத்திரை சேகரித்தல்.

பெயர்: எம். பாலா
வயது: 22
முகவரி: 130, டாக்டர் பிரிட்டோ, பாபாபுள்ளே பிளேஸ், கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14.
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம். நபாயிஸ்
வயது: 18
முகவரி: 115, கிம்பத்தை வீதி, வேறவத்தை, பாணந்துறை.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: வி. காந்தன்
வயது: 25
முகவரி: P.O.BOX-1218, JUBAIL-31951, K.S.A.
பொழுதுபோக்கு: டி.வி பார்த்தல், புத்தகம் படித்தல்.

பெயர்: எம். ஸியாத்
வயது: 21
முகவரி: ஆனைச் சேனை, மூதூர்-02.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஆர். ராஜா
வயது: 27
முகவரி: பௌவனகந்த எஸ்டேட், அவிசாவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, திரைப்படம்.

பெயர்: முகமட் ஹனி
வயது: 22
முகவரி: 560, நீரெல்ல, அக்குறணை, கண்டி.
பொழுதுபோக்கு: பாடல்கள், பேனாநட்பு, சினிமா.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## 43

**அ**வள் வெளியே வந்தபோது, எங்கு பார்த்தாலும் அவள் எதிர்பார்த்த இரைச்சல், உத்வேகமயமான ஜனங்களின் கூச்சல் நிறைந்து ஒலித்தது. வாசல் நடைகளிலும், ஜன்னல்களிலும் கூட்டம் கூட்டமாக நின்றவாறு பாவெலையும் அந்திரேயையும் ஜனங்கள் ஆவல் நிறைந்த கண்களுடன் பார்ப்பதைக் கண்டதும் அவளது கண்கள் இருண்டு, அந்த இருளில் ஏதோ ஒரு புதுநிற ஒளி நிழலிட்டு ஆடுவது போல் அவளுக்குத் தோன்றியது.

ஜனங்கள் அவர்களோடு குசலம் விசாரித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் அன்று சேமம் விசாரித்த பாவனையில் ஏதோ ஒரு புதிய அர்த்தம் பொதிந்திருப்பதாகத் தோன்றியது. அவர்கள் அமைதியோடு சொன்ன வார்த்தைகள் அவள் காதில் அரையும் குறையுமாய் விழுந்தன:

"அதோ, தலைவர்கள் போகிறார்கள்."

"நமக்குத் தலைவர்கள் யாரென்றே தெரியாது."

"நான் ஒன்றும் தப்பாய்ச் சொல்லவில்லையே."

வேறொரு வாசலிலிருந்து யாரோ உரக்கச் சத்தமிட்டுச் சொன்னார்கள்:

"பொலிஸார் அவர்களைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்; அத்துடன் அவர்கள் தொலைந்தார்கள்!"

"அவர்கள்தான் ஏற்கெனவே இவர்களைக் கொண்டு போனார்களே!"

ஒரு பெண்ணின் அழுகுரல் ஜன்னல் வழியாகப் பாய்ந்து வந்து தெருவில் எதிரொலித்தது:

"நீ செய்யப்போகிற காரியத்தை யோசித்துப்பார். நீ ஒன்றும் கல்யாணமாகாத தனிக்கட்டைப் பிரமச்சாரியில்லை!"

அவர்கள் அந்த நொண்டி ஜோசிமவ் வீட்டின் முன்பாகச் சென்றார்கள். ஜோசிமவ் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது காலை முறித்துக்கொண்டு விட்டான். அதிலிருந்து அவன் நொண்டியாய்ப் போனான்; தொழிற்சாலை மாதாமாதம் அவனுக்குக் கொடுக்கும் ஓய்வுச் சம்பளத்தில் காலம் தள்ளி வருபவன் அவன்.

"பாவெல்!" என்று தன் தலையை ஜன்னல் வழியாக வெளியே நீட்டிக் கொண்டு கத்தினான் அவன். "அடே போக்கிரி! அவர்கள் உன் கழுத்தை முறித்து விடுவார்களடா. உனக்கு என்ன நேரப்போகிறது பார்!"

தாய் ஒரு க்ஷணம் நடுநடுங்கி, பிரமையடித்து நின்றாள். அவள் உள்ளத்தில் கூர்மையான கோப உணர்ச்சி ஒரு கணம் ஊடுருவிச் சென்றது. அவள் அந்த நொண்டியின் கொழுத்துத் தொளதொளத்த முகத்தைப் பார்த்தாள். அவன் ஏதோ திட்டிவிட்டு தலையை உள்ளே இழுத்துக் கொண்டான். அவள் வெகுவேகமாக நடந்து சென்று தன் மகனை எட்டிப்பிடித்தாள். அவனுக்குப் பின்னாலேயே நடந்தாள், கொஞ்சம்கூடப் பிந்தாமல் நடக்க முயன்றாள்.

பாவெலும் அந்திரேயும் எதைப்பற்றியும் கவலை கொள்ளவோ கவனித்ததாகவோ தெரியவில்லை. அவர்களைக் குறித்துச் சொல்லப்படும் பேச்சுக்கள்கூட அவர்கள் காதில் விழவில்லை. அவர்கள் அமைதியாவும் அவசரமில்லாமலும் நடந்து சென்றார்கள். போகும் வழியில் அவர்களை மிரோனவ் நிறுத்தினான். அவன் ஒரு அடக்கமான மத்திய வயது ஆசாமி. அவனது நேர்மையும் நாணயமும் பொருந்திய வாழ்வினால் எல்லோரிடமும் நன்மதிப்பும் பெற்றிருந்தான்.

"நீங்கள் கூட வேலைக்குப் போகவில்லையா, தனீலோ இவானவிச்?" என்று கேட்டான் பாவெல்.

"இல்லை. என் மனைவிக்கு இது பிரசவ நேரம். மேலும், எல்லோரும் இப்படி உற்சாகமாயிருக்கிற நாளிலே......" அவன் தனது தோழர்களை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டுத் தணிந்த குரலில் சொன்னான்:

"நீங்கள் இன்று தொழிற்சாலை மானேஜருக்கு ஏதோ தொந்தரவு கொடுக்கப் போவதாக, சில ஜன்னல்களை உடைத்தெறியப் போவதாக, பேச்சு நடமாடுகிறதே, உண்மைதானா?" என்று கேட்டான்.



"நாங்கள் ஒன்றும் குடிகாரர்களில்லையே!" என்றான் பாவெல்.

"நாங்கள் வெறுமனே தெருவழியே அணிவகுத்துச் செல்லுவோம். கொடிகளைத் தாங்கிக் கொண்டும், பாட்டுக்களைப் பாடிக் கொண்டும் செல்லத்தான் உத்தேசம்" என்றான் ஹஹோல். "நீங்கள் எங்கள் பாட்டுக்களைக் கேளுங்கள். அதுதான் எங்கள் நம்பிக்கையின், கொள்கையின் குரல்!"

"உங்கள் கொள்கையெல்லாம் எனக்குத் தெரியும்" என்று ஏதோ சிந்தித்தவாறே சொன்னான் மிரோனவ். பிறகு "நான்தான் உங்கள் பத்திரிகைகளைப் படிக்கிறேனே. ஆ! பெலகேயா நீலவ்னா! நீயுமா?" என்று தாயைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு சத்தமிட்டான்; "நீயுமா இந்தப் புரட்சியில் கலந்துவிட்டாய்?"

"சாவதற்கு முன்னால் நான் ஒருமுறையேனும் சத்தியத்தோடு அணிவகுத்துச் செல்லவேண்டும்!"

"அடி சக்கை! ஆனால், நீதான் தொழிற்சாலைக்குள் தடை செய்யப்பட்ட பிரசுரங்களைக் கொண்டு வந்தாய் என்று அவர்கள் சொல்லிக்கொள்வது உண்மை என்று தான் தோன்றுகிறது."

"யார் அப்படிச் சொன்னது?" என்று கேட்டான் பாவெல்.

"ஹூம். அவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். சரி, நான் வருகிறேன். நீங்கள் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள்."

தாய் அமைதியோடு புன்னகை புரிந்தாள். அவர்கள் தன்னைப் பற்றி அப்படிப் பேசிக்கொண்டார்கள் என்பதைக் கேட்பதற்கு அவளுக்கு ஆனந்தமாயிருந்தது.

"நீயும் கூடச் சிறைக்குப் போவாய், அம்மா!" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் பாவெல்.

சூரியன் மேலெழுந்து, வசந்த பருவத்தின் புதுமையிலே தனது கதகதப்பைப் பொழியத் தொடங்கியது. மேகங்கள் கலைந்து போய்விட்டன. அவற்றின் நிழல்கள் தெளிவற்று உலைந்து போய்விட்டன. மேகங்கள் தெருவுக்கு மேலாக மெதுவாக நகர்ந்து, வீட்டுக் கூரைகள் மீதும், மனிதர்கள் மீதும் தவழ்ந்து அந்தக் குடியிருப்பு முழுவதையுமே தூசி தும்பு இல்லாமல் துடைத்துச் சுத்தப்படுத்துவது போலவும், மக்களது முகங்களில் காணப்பட்ட சோர்வையும் களைப்பையும் நீக்கி களைந்துவிடுவது போலவும் தோன்றியது. எல்லாமே ஒரே குதூகலமயமாய்த் தோன்றியது. குரல்கள் பலத்து ஒலித்தன; ஆலையின் யந்திர ஓலத்தை மக்கள் ஆரவாரக்குரல்கள் அமுங்கடித்து விழுங்கிவிட்டன.

மீண்டும் ஜன்னல்களிலிருந்தும் வாயிற்புறங்களிலிருந்தும் ஜனங்கள் பேசிக்கொள்ளும் பல்வேறு பேச்சுக்கள் தாயின் காதில் விழத்தொடங்கின. அந்தப் பேச்சுக்களில் சில விஷம் தோய்ந்ததாகவும், பயமுறுத்துவதாயும் இருந்தன. சில உற்சாகமும் சிந்தனையும் நிறைந்து ஒலித்தன. ஆனால் இந்தத் தடவை அவளுக்கு அந்தப் பேச்சுக்களை வெறுமனே கேட்டுக்கொண்டு மட்டும்போக முடியவில்லை. அந்தந்தப் பேச்சுக்குத் தக்கவாறு எதிருரை கூறவும், விளக்கவும், வந்தனம் கூறவும் விரும்பினாள் அவள். பொதுவாக, அன்றைய தினத்தின் பல்வேறான வாழ்க்கை அம்சங்களிலேயும் அவள் பங்கெடுத்துக் கொள்ள விரும்பினாள்.

ஒரு சின்னச்சந்து திரும்பும் மூலையில் சுமார் நூறு பேர்கள் கூடி நின்றார்கள். அவர்களுக்கு மத்தியிலிருந்து நிகலாய் வெஸோவ்ஷிகோவின் குரல் உரத்து ஓங்கி ஒலித்தது.

"அவர்கள் பழத்தைப் பிழிந்து சாறு எடுப்பது போல், நம் இரத்தத்தைக் கசக்கிப் பிழிகிறார்கள்!" என்று சொன்னான் அவன். அவனது வார்த்தைகள் ஜனங்களது மூளையை முரட்டுத்தனமாகத் தாக்கின.

"அது சரிதான். ஆமாம்!" என்று பல்வேறு குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன.

"இந்தப்பயல் ஏதோ தான்னாலான மட்டும் முயல்கிறான். இரு, நான் போய் அவனுக்கு உதவுகிறேன்" என்று சொன்னான் ஹஹோல்.

பாவெல் அவனைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்னால் அவன் தனது நெடிய மெலிந்த உடலோடு, ஒரு கார்க்கைத் திருகித் துளைத்துச் செல்லும் திறப்பான்போல, அந்தக் கூட்டத்துக்குள் ஊடுருவி உள்ளே சென்றுவிட்டான்.

செழித்துக் கனத்த குரலில் அவன் சத்தமிட்டான்: "தோழர்களே! உலகில் பல்வேறு இன மக்கள் குடியிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். யூதர்கள், ஜெர்மானியர்கள், ஆங்கிலேயர்கள், தாத்தாரியர்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் நான் இதை நம்பவில்லை. உலகில் இனங்கள் இரண்டே இரண்டு தான்-ஒன்றுக்கொன்று ஒத்துக்கொள்ளாத இரண்டே மனித குலங்கள் தான் இருக்கின்றன. ஒன்று பணக்காரர் குலம்; மற்றொன்று பஞ்சை ஏழைகளின் குலம்! ஜனங்கள் வெவ்வேறு விதமாக உடை உடுத்தலாம்; வெவ்வேறு மாதிரியான மொழிகளில் பேசலாம். ஆனால் பிரேஞ்சுக்காரராகட்டும், ஜெர்மானியராகட்டும், ஆங்கிலேயராகட்டும்-அவர்களில் பணக்காரராயிருப்பவர்கள் உழைக்கும் மக்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதை மட்டும் நீங்கள் தெரிந்து கொண்டால், அவர்கள் அனைவருமே தொழிலாளர்களை ஒன்று போலவே நடத்துகிறார்கள் என்பதை, அவர்கள்தான் தொழிலாளரை உறிஞ்சிக் குடிக்கும் கொள்ளை நோய் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்!"

கூட்டத்தில் யாரோ சிரிப்பது கேட்டது.

"ஆனால், அதே சமயத்தில்-தாத்தாரியனானாலும், பிரஞ்சுக்காரனானாலும் அல்லது துருக்கியனானாலும்-எந்த

## மக்சீம் கார்க்கி

நாட்டுத் தொழிலாளியானாலும் சரி, அவர்களையும் நீங்கள் பாருங்கள். அப்படிப் பார்த்தால், ரஷ்யாவிலுள்ள தொழிலாளர்கள் எப்படி நாயினும் கேடுகெட்டு வாழ்கிறார்களோ அதே வாழ்க்கையைத்தான் சகல நாட்டுத் தொழிலாளர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்!"

அந்தச் சந்துப்பாதையில் மேலும் மேலும் ஜனங்கள் கூடினார்கள். அவர்கள் தங்கள் கழுத்துக்களை எட்டி நீட்டிக்கொண்டும், குதிகாலால் எம்பி நின்றுகொண்டும் ஒரு வார்த்தைகூடப் பேசாது அவன் பேசுவதைக் கேட்டார்கள்.

அந்திரேய் தன் குரலை மேலும் உயர்த்தினான்:

"வெளிநாடுகளிலுள்ள தொழிலாளி மக்கள் இந்தச் சாதாரண உண்மையை ஏற்கெனவே தெரிந்துகொண்டு விட்டார்கள். இன்று, இந்த மே மாதப்பிறப்பன்று....."

"பொலிஸ்!" என்று யாரோ கத்தினார்கள்.

நாலு குதிரைப் பொலிஸ்காரர்கள் அந்தச் சந்துக்குள் நேராக வந்து குதிரைகளைக் கூட்டத்துக்குள் செலுத்தினார்கள். தங்களது கையிலிருந்த சவுக்குகளால் வீசி விளாசி அறைந்து கொண்டு சத்தமிட்டார்கள்.

"கலைந்து போங்கள்!"

மக்கள் தங்கள் முகங்களைச் சுழித்துக் கொண்டே அந்தக் குதிரைகளுக்கு வழிவிட்டு ஒதுங்கினார்கள்; சிலர் பக்கத்திலிருந்த வேலிப்புறத்தில் ஏறிக்கொண்டு விட்டார்கள்.

"அடேடே! குதிரைகளின் முதுகிலே பன்றிகளைப் பாரு டோய்! 'வீராதி வீரருக்கு வழிவிடு' என்று இவை கத்துவதைக் கேளுடோய்!" என்று எவனோ உரத்துக் கத்தினான்.

ஹஹோல் தெருவின் மத்தியில் அசையாது நின்றுகொண்டிருந்தான். இரண்டு குதிரைகள் அவன் பக்கமாகத் தலையை அசைத்தாட்டிக் கொண்டே நெருங்கி வந்தன. அவன் ஒரு பக்கமாக ஒதுங்கினான். அந்தச் சமயத்தில் தாய் அவனது கையைப் பற்றிப் பிடித்து, அவனைத் தன் பக்கமாக விருட்டென்று இழுத்தாள்.

"நீ பாவெலின் பக்கமாக நிற்பதாய் எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாய். ஆனால், இங்கேயோ தன்னந்தனியாக எல்லாத் தொல்லைகளையும் நீயே ஏற்கிறாய்" என்று முணுமுணுத்தாள் அவள்.

"ஆயிரம் தடவை மன்னிப்பு. போதுமா?" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ஹஹோல்.

ஒரு கனமான, பயங்கரமான நடுக்கம் நிறைந்த ஆயாச உணர்ச்சி தாயின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து மேலெழும்பி அவளை ஆட்கொண்டது. அவளது தலை சுழன்றது. இன்பமும் துன்பமும் மாறி மாறி ஏதோ ஒரு மயக்கம் உண்டாயிற்று. மத்தியானச் சாப்பாட்டுக்கு எப்போதடா சங்கு அலறும் என்று ஆதங்கப்பட்டுத் தவித்தாள் அவள்.

அவர்கள் தேவாலயம் இருந்த சதுக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள். தேவாலயச் சுற்றுப்புறத்தில் உற்சாகம் நிறைந்த இளைஞர்களும் குழந்தைகளுமாக சுமார் ஐநூறு பேர் கூடியிருந்தார்கள். கூட்டம் முன்னும் பின்னும் அலைமோதிக் கொண்டிருந்தது. மக்கள் பொறுமையற்று, தங்கள் தலைகளை நிமிர்த்தி உயர்த்தித் தூரத்தையே ஏறிட்டுப் பார்த்து எதையோ எதிர்நோக்கித் தவித்துக் கொண்டு நின்றார்கள். ஒரே உத்வேக உணர்ச்சி எங்கும் பரிணமித்துப் பரந்தது. சிலர் செய்வது இன்னதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

# நல்ல போராட்டம்

சிலாபம்-பொ. புஷ்பராஜா

**மூ**ன்று மாதமாகியும் அசோகனிடம் இருந்து கடிதம் ஒன்றும் வரவில்லையே என புலம்பிக் கொண்டு இருந்தார் இளைப்பாறிய கிராமசேவகரான கந்தையா. எட்டு மாதங்களுக்கு முன்புதான் தன் ஒரே மகன் அசோகனை பிரான்சுக்கு அனுப்பிவைத்திருந்தார் கந்தையா.

மிகவும் கஷ்டப்பட்டு தன் மகள் ராதிகாவின் திருமணத்திற்கு சீதனமாக சேர்த்து வைத்திருந்த தங்க நகைகள் எல்லாவற்றையும் விற்று, வீடு வளவு காணியையும் ஈடுவைத்து ஏஜென்சிக்காரன்மூலம் அசோகனை பிரான்சுக்கு அனுப்பிவைத்தார். கந்தையா ஐயா அசோகனுக்கு இன்டர் நெஷனல் பாஸ்போர்ட் எடுக்க எவ்வளவோ முயற்சித்தும் முடியாது போய்விட்டது. பையனும் கொஞ்சம் வாட்ட சாட்டமாக மூக்கும் முழியுமாக இருந்தபடியினால் கொஞ்சம் பிரச்சனையாகிவிட்டது. பின் ஏஜென்சிக்காரன் மூலம் 20 ஆயிரம் ரொக்கம் கொடுத்து ஹெல்மட் பாஸ்போர்ட் மூலமே அசோகனை முதலில் சிங்கப்பூருக்கு அனுப்பிவைத்தார். பின் சிங்கப்பூரில் உள்ள பெண் ஏஜென்சிக்காரி எப்படியோ ஒருவாறு பிரான்சுக்குள் அசோகனை நுழையவைத்துவிட்டாள். அசோகனுக்கு கிளாலிப் படகுப் பயணத்தைவிட சிங்கப்பூர் பிரான்ஸ் விமானப்பயணம் ஒருவித பயத்தை உண்டாக்கிவிட்டது.

இப்போது வீட்டுக்கு வெளியே மாமரநிழலில் கந்தையா ஈசிச்செயாரில் உட்கார்ந்து கொண்டு முரசில் வந்த மகாபாரதக் கதையை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது மகள் ராதிகா "அப்பா" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தாள்.

"என்ன பிள்ள பெரிசா சத்தம்"

"அப்பா அண்ணர் கடிதம் போட்டிருக்கிறார்". கந்தையா மிக அவசரமாக கடிதத்தைப் பிரித்தார். கடிதத்திற்குள் ஐந்து ஆயிரம் பிராங் பணம் இருந்தது. பிரான்ஸ் பணத்தைக் கண்டதும் மனதிற்குள்ளேயே சிரித்தார். கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்:

அன்புள்ள அப்பா, அம்மாவுக்கு அசோகன் எழுதிக் கொள்வது; நான் நல்ல சுகம். நீங்கள் எப்படி சுகம்?

எவ்வளவோ கஷ்டப்பட்டு போனமாதம் தான் ஹோட்டல் ஒன்றில் கஸ்கோன் (வெயிட்டர்) வேலை கிடைத்தது. என்னுடன் சுருட்டுக் கொம்பனியில் சுருட்டு சுத்திய



நவரத்தினம் அண்ணர் மூலம் தான் வேலை கிடைத்தது. அவர்தான் சிபாரிசு பண்ணினார்.

அதற்காக அவருக்கு இரண்டாவது மாத சம்பளத்தை கமிஷனாக கொடுக்க வேண்டும். இவர்தான் இந்த "ரெட்ரோஸ்" ஹோட்டலின் மனேஜர். இந்த ஹோட்டல் பிரான்ஸ்காரனுக்கு சொந்தமானது.

நவரத்தினம் அண்ணரும் முதலில் என்னைப் போல ஒரு கஸ்கோன்வாகத்தான் வேலைக்குச் சேர்ந்தாராம். குறுகிய காலத்திலேயே இந்த நாட்டுப் பாசையான பிரஞ்ஜ் பாசையை பேச நன்றாக பழகிக் கொண்டார்.

ஹோட்டல் பத்ரோனின் (முதலாளியின்) நம்பிக்கைக்குப் பாத்திரமானாராம். எங்கள் பத்ரோனின் பெயர் நெப்போலியன் பியர். இவன் அழகானவன். வயது ஐம்பதிருக்கும். வாரத்திற்கு ஒருமுறைதான் ஹோட்டலுக்கு வருவான். ஹோட்டலின் முழுப் பொறுப்பும் நவரத்தினம் அண்ணரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு எனக்கு வேலையும் ரொம்பக் கஷ்டம். எல்லோரும் நினைப்பது போல பிரான்ஸ் நாடு சொர்க்கபூமியல்ல. இங்கும் நம் நாட்டைப் போல பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர். இவர்கள் நம்நாட்டு பிச்சைக்காரர்களைப் போலவே வீதி ஓரங்களிலும், மரத்தின் அடியிலும், பேமன்ட் வழிகளிலும் உறங்குவர். ஒரு ரொட்டித் துண்டுக்கே வழி இல்லாதவர்களும் இங்கு வாழ்கின்றனர்.

இங்கும் போட்டி பொறாமைகள், போராட்டங்கள் வேலையில்லாத் திண்டாட்டம் என்பனவும் உண்டு. இத்துடன் முதல் மாத சம்பளத்தில் ஐந்து ஆயிரம் பிராங் பணம் அனுப்பியுள்ளேன். சிவாவின் கடனை அடைத்துவிடவும்.

நான் பிரான்ஸ் நாட்டுக் குளிரிலே செத்து, செத்து உழைக்க வேண்டும். அப்போதுதான் தங்கை ராதிகாவின்ர சீதனப்பணத்தை தேடலாம். தங்கையை கரைசேர்த்துவிட்டால் ஓரளவு பிரச்சனை தொலைந்து போன மாதிரிதான்.

இரண்டு நாட்களாக எனக்கும் தலை வலி. ஒன்றும் பயப்படத் தேவையில்லை. இரண்டு வில்லைகளைப் போட்டால் சரியாகி விடும். மழைக்காலம். வெளியேசெல்ல முடியவில்லை.

நானும் ஹோட்டலின் பின்பகுதியில் உள்ள குப்பைபோடும் ரூமின் ஒரு பகுதியை எனக்கு ஒதுக்கிக்கொண்டேன். எவ்வளவோ கஷ்டப்பட்டு கெஞ்சிய பின்தான் நவரத்தினம் அண்ணர் ஒதுக்கித் தந்தார். அதற்கும் அரைமாத சம்பளத்தை கமிஷனாக கேட்கிறான். எனக்கு குப்பைபோடும் ரூம் கிடைத்ததால் இலங்கைப் பணம் பத்தாயிரம் மிச்சம். இல்லாவிட்டால் ரூம் வாடகை பிராங் ஆயிரத்து எழுநூறு தர வேண்டும். எனக்கு இப்போது பத்தாயிரம் பிராங் சம்பளமாகக் கிடைக்கின்றது. செலவுதான் ஜாஸ்தி.

இலங்கையிலே மர்மமான முறையில் தமிழர்கள் கொல்லப்பட்டு வாவியில் மிதப்பதாக அறிந்தேன். இது உண்மையா? இதைவிட கழுத்தறுப்புக்கள் பிரான்ஸிலே நம்மவர்களிடையே உள்ளது. ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பதில் நம்மவர்கள் கெட்டிக்காரர்கள்.

மற்றும்படி விசேடம் ஒன்றுமில்லை. அம்மாவின் நாரிப்பிடிப்பு வலி எப்படி? ஊர் நாட்டு வைத்தியரிடம் காட்டி எண்ணெய் பூசவும் உடன் பதில்.

மகன் அசோகன்.

கடிதத்தை வாசித்து முடிந்ததும் கந்தையா வாயிலிருந்த சுருட்டை தூக்கி வீசினார். அவரின் கண்களில் கண்ணீர் வடிந்தது. மெதுவாக தோளில் தொங்கிக் கொண்டிருந்த சால்வையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்.

வீட்டுக்குள்ளே இருந்து வெளியே வந்த ராதிகா "ஏனப்பா கண்ணீர் விடுகிறீர்கள்?"

"பிள்ள உன் அண்ணர் பிரான்ஸிலே நல்ல போராட்டம் ஒன்று நடத்துகிறான். பாவம். இந்தா கடிதத்தைப் பார்"

கந்தையா கடிதத்தை ராதிகாவிடம் கொடுத்தார். அவளும் வாசித்தாள். அவளையும் அறியாமல் கண்கள் கலங்கின. அவளால் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை. கண்களின் பார்வையை கண்ணீர் மறைத்துக்கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரத்துக்காக....

**போராட்டம் என்று புறப்பட்டு இயக்க மோதல்களால் அநாதையாகிப் போன ஒரு முன்னாள் போராளி தன் அப்பாவுக்கு எழுதிய மடல். போராட்டத்தின் மறுபக்கத்தில் உள்ள சோகங்களில் இது ஒரு துளி மட்டும்தான்.**

**நிஷாந்தன்**

கனவுச்சுமைகளோடு நீண்ட தூரம் நடந்து களைத்துப்போய் ஆஸ்பத்திரி கட்டிலில் ஓய்வாகப் படுத்துக் கொண்டிருக்கிறேன். ஓய்வென்று சொல்வதற்கு இல்லையப்பா-இருமலோடு தினம் போராடுகின்றேன். தடவிப் பார்க்கின்றேன் என் உடம்பை...... வரிவரியாய் எலும்புகள் மேலே தெரிகின்றன......மேடு பள்ளங்களில் ஏறி இறங்குகின்றன கைகள்.

ஓ...... ஏழையாய் இருந்தாலும் வந்து விசாரிக்கும் உறவுகள் கட்டிலை மொய்த்துக் கொள்கின்றபோது... விம்மி அழுகின்றேன். இந்த ஆஸ்பத்திரியின் நிரந்தர வதிவாளனாகி ஆறுமாதங்களாகிவிட்டபோதிலும் யாரும் வந்து விசாரித்ததில்லை.

ஊரிலே ஒருக்கா காய்ச்சல் வந்து மானிப்பாய் கிரீன் ஆஸ்பத்திரியில் இருந்த போது..... நீங்கள் உங்கள் பெரிய கெரியல் பூட்டிய சைக்கிளில் தம்பியையும், தங்கச்சியையும் ஏத்திக் கொண்டு எத்தனை தடவை வந்து பார்த்திருப்பீர்கள்.... எங்கள் தோட்டத்து கப்பல் வாழைப் பழங்கள்..... பக்கத்து அறையில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்து சாப்பிட்டிருக்கிறேன்.

திரும்பிப்படுத்துக் கொள்கிறேன். பக்கத்துக் கட்டிலில் சின்னப் பெண்ணுக்கு தாய் சோறு ஊட்டிவிடுகின்றா..... எனக்கு விபரம் தெரிகின்ற நாட்களுக்கு முன்னே அம்மாவை இழந்த போதும்..... நாங்கள் பள்ளிக்கூடம் விட்டு மத்தியானம் வருகின்றபோது கஞ்சிவடித்து தேங்காய்ப்பூ போட்டு வைத்திருப்பீர்களே அப்பா......

தொடர்ந்து எழுத முடியாமல் தவிக்கிறேன். பாழாய்ப்போன இருமல் வந்து தொலைக்கின்றது.



என் நிலமை.... நான் பட்ட துன்பங்கள்.... நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழீழக் கனவுகள்.... என்தாயகம்...... எனது மக்களின் விடுதலைக் கனவுகளோடு வீட்டை விட்டு வந்த எனக்கு சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு.... 'மண்டபம் கேம்ப்' எனது தாயகமானது.

அப்பா.... நான் என்ன தவறு செய்தேன்? இயக்கமென்றால் என்னவென்று தெரியாத உங்களிடம் போய் கேட்கிறேன்-சோறு தண்ணி இல்லாமல்.... மாவிட்டபுரத்தில் வீட்டுக்கு வீடு மாறி ஒழித்த நாட்கள் எத்தனை.....? வேளைதவறி கிடைக்கும் சோறு கூட தொண்டைக்குள் இறங்க மறுக்கும்..... சின்னச் சத்தத்திற்குக்கூட முழிபிதுங்கி விழித்தநாட்கள்.....!

எனக்கு என்ன குறைவச்சீங்களப்பா....? முன் மட்காட்டில் குதிரைபூட்டிய பழைய மொடல் ரலி-நீர்வேலி கணபதிப்பிள்ளையிடம் வாங்கிய சைக்கிள்...மாலை நேரங்களில் மல்லாகஞ்சந்தி, சீனன்கடை கொத்துரொட்டி எல்லாம் கற்பனைக் கனவுக்காட்சியாக வந்துபோகின்றன.

என் குடிசைக்கு முன் இருக்கும் ராமாயீ தூக்குச்சட்டியுடன் வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும்போது..... குடிசைக் கப்புக் கருகே..... 'புதியவார்ப்பு' கதாநாயகிமாதிரி கப்பில் கன்னத்தை வைத்துக்கொண்டு ஒரு புன் சிரிப்பு உதிர்க்கும் சித்திரா.

சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாய்நாடு திரும்பியவர்கள்.... நாடோடி வாழ்க்கை...! மாதக்கணக்கில் வீடுதிரும்பாத தகப்பன் வீட்டுக்கு வருகின்றபோது..... அடிதடியில் பக்கத்து வீட்டுக்கு ஓடிப்போகும் சித்திரா...... நடு இரவுக்குப்பின் ஒன்றுகலந்துவிடும் தாயும் தகப்பனும். வயிறு பசிக்கின்றதப்பா, ஊரிலே என்றால் தோட்டத்து மரவள்ளிக் கிழங்குக்கறியும் சூடைக்குழம்பும்.... நாவில் எச்சில் ஊறுகிறது..... இந்தியாவுல அதுவும் மண்டபம் கேம்புல ஒரு ரூபாய்க்கு ஆறு இட்லியும் இல்லையென்றால் சிலோன் மக்களில்... எங்களைப் போன்றோரின் உயிர்கள் இந்தியாக் காற்றுடன் எப்பவோ கலந்திருக்கும்.

வாழையிலையில் சாம்பாருக்கு... ரசத்திற்கு... மோருக்கு என்று தனித்தனியாக மலைபோல் சோறு குவித்து இரவுக்கும் சேர்த்துச் சாப்பிடும் போது...... மலைத்து நிற்கின்ற சர்வர்..... பொறுக்க முடியாத ஓட்டல் முதலாளி- 'அளவுச்சாப்பாடு' என்ற போட் மாட்டிவிட்டாரப்பா... இருந்த ஒரு வழியும் அடைக்கப்பட்டு விட்டநிலை.

ஊரிலே என்றால் கவுனாவத்தை..... மாவிட்டபுர ஏற்றம் பிராம்பத்தை கோயில்கள் வேள்வியென்றால்..... கடிக்கிற எங்கள் வீட்டு நாய்கூட பங்கு இறைச்சிக்காக வருகின்றவருக்கு மரியாதையோடு வாலை ஆட்டும். அன்று தோட்டத்து வேலைக்கு விடுதலை. எல்லோரும் சேர்ந்து சீயாக்காய் அரப்பு வச்சி முழுகுவோம்..... சேட்போடாத சாப்பிட்டு வீங்கிய வயிற்றைக் காட்டிக் கொண்டு சந்தோசத்தோடு நிமிர்ந்து நடக்கின்ற அந்த நினைவுகளை ஒருதரம் நினைத்துப் பார்க்கிறேன்.

என் தலைமயிரை கையால் கோதிவிட்டு பார்க்கிறேன். கைவிரல்கள் தலைமயிரில் சிக்கிக் கொள்கின்றன. வீட்டைவிட்டு நான் வெளிக்கிட்ட பிறகு இந்தத்தலை சீயாக்காயைப் பார்த்திருக்காது. தலையில் என்னைப் பிடிப்பு இல்லையென்றால் என்னை ஒழுகும் வரை தலையில் நல்லெண்ணை வைத்து விடுவீர்கள்.

மத்தியானச் சாப்பாடு வந்திருக்குதப்பா... கூட்டு, பொரியல் என்று சொல்கிறார்கள். என்னால் சாப்பிட முடியாமல் இருக்கின்றது. வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு விழுங்கிக்கொள்ளக்கூட சக்தியில்லாமல் இருக்கின்றேன். இளநீர் குடிக்க வேண்டும் போல் இருக்குதப்பா! யாரிட்ட சொல்லி விட.....

முகமெல்லாம் பத்தையாய் தாடி வளர்ந்திருக்கு....முகத்தை தடவிக்கொள்கிறேன். சவாரிக்கு கொண்டு போகும் குழுவன் மாடு மாதிரி வளுவளுப்பா குண்டா இருந்த என் உடம்பைப் பார்க்கின்றேன். தோட்டத்துக்கு வேலைக்கு வருகின்ற பெண்டுகள்..... சின்ன வயசில் என்னைக் கொஞ்சுகின்ற போது.... "கண்ட கண்ட எச்சில்பட்டு எண்ட பெடியனுக்கு தேமல் பட்டிட்டு அவனை சும்மா விட்டிட்டு வேலையைப் பாருங்க" என்று நீங்கள் பேசுவீர்கள்...

நீங்கள் இண்டைக்கு என்னை நேரில பார்த்தா அழுவீங்களப்பா.... எங்களுக்கு பொறுப்பா இருந்த மாரிசங்கூடல் சின்னத்துரையின் மகன் மாஸ்டரும் கனடா போயிட்டான் என்று கேள்விப்பட்டேன்..... அவன் மட்டும் அல்ல என்னோடு ஊர்ல இயக்கத்தில இருந்த அனேகப் பெடியள் வெளிநாட்டுக்குப் போயிட்டாங்கள். இயக்கத்தைவிட்டு மெட்ராஸில் இருந்து மண்டபம் கேம்ப் வந்தபோது என்னோட இந்த ஓட்டைக் குடிசையில் அஞ்சாறு பெடியள் இருந்தாங்க. அவங்ககூட தங்களுடைய வசதியைப் பார்த்து போயிட்டாங்க.

இரவில் நுளம்புத் தொல்லை ரொம்ப அதிகம். கருவாட்டு கணக்கா காய்ந்த நிலையில் இருக்கும் என்னுடம்பில் இரத்தம் தேடிவந்து நிற்கும் நுளம்புக்கடிகூட இப்ப வலிக்கிறதில்ல. சில நேரங்களில பரிதாபப் பட்டு பக்கத்துக் கட்டிலில் நோயாளியைப் பார்க்க வந்திருக்கும் உறவுகள் விரட்டியடித் திருக்கின்றனர்.

நான் உங்களையும் சகோதரங்களையும் வந்துபாப்பன் என்ற நம்பிக்கை எனக் கில்லை... ஒருநாளிரவு நேரம் சென்று வீடு வந்ததற்கு கோபப்பட்டீங்க. அடுத்த நாள் இயக்கப் பெடியனோடுதான் போய்ட்டு வந்தேனென்று கேள்விப்பட்ட போது.... "டேய் செல்வம் என்னோட தோட்டம் செய்யப் பிடிக்கயில்ல எண்டாலும், லொறிய அல்லது மினி பஸ்ஸ எடுத்துத்தாறன் நீ ஓடு- ஆனா என்ன விட்டுப்போகாதே" என்று சொன்னியள் நான் அன்றைக்கு நீங்க சொன்னத கேட்டிருந்தா இன்றைக்கு இந்த நிலமை வந்திருக்குமா? என் காதுக்கருகில் நீங்கள் இன்னமும் சொல்ற மாதிரி கேட்குதப்பா....

அப்பா எனக்கு மூச்சு வாங்குது.... எழுத முடியாம கை நடுங்குது என்றாலும் கடைசியாய் நான்..... அப்பா எனக்கு தங்கச்சியைப் பார்க்கவேணும் போல் இருக்கு. ரெத்தினா, சிவா, சிறி, அவங்க ஆம்பிளையள் எந்த வழியில் என்றாலும் பிளைச்சுக்கொள் வாங்க.... தங்கச்சிக்கு நல்ல இடத்தில கல்யாணம் கட்டிவைங்கோப்பா.... நீங்க இப்ப நடந்து திரியேக்க செய்தாச்சரி. நீங்களும் படுத்த படுக்கையா, இல்லாமப் போய்ட்டா தங்கச்சி தனியாளாயிடுவாள்.

என் கண்கள் இருட்டிக்கொண்டு வருது. என்னால எழுத மு.......டி......யா......


*பின்குறிப்பு: 'மண்டபம் கேம்ப்' என்பது தமிழ் நாட்டில் உள்ள அகதிமுகாம்களில் ஒன்று.*

# பிரிய துரோகி!

**கோகிலா குமாரவேல் - இரத்தினபுரி**

கவிதா! அவன் கவிதைகளில் கரைந்து கொண்டிருப்பவள். நினைவுகளில் நிரந்தரமாகிப் போனவள். பத்திரிகைக்கும், வானொலிக்கும் அவன் எழுதும் கவிதைகளில் கவரப்பட்டுக் கடிதகடிதமாய் அவனுக்கு வரைந்து தள்ளிக்கொண்டிருந்தாள். அவளின் கலாரசனையில் அவன் வியந்துதான் போனான். மடல்கள் தொடர்ந்தன. அவன் மனதும் அவளுக்குள் தொலைந்து கொண்டிருந்தது.

ரோஜாவாய், மீனாவாய் அவளைக் கற்பனை செய்தான். இலங்கை வந்த உலக அழகு ராணியை விதவிதமான போஸ்களில் டீவியில் பார்த்து வியந்தவன், கவிதாவையும் அந்தப்படியே தனக்குள் வர்ணித்துக்கொண்டான்.



கலையுலக நண்பியொருவனின் திருமணத்தில் எதிர்பாராத விதமாக கவிதாவைச் சந்தித்தவன் திகைத்துத்தான் போனான். அந்த ஐஸ்வர்யா ராயே அவளிடம் மண்டியிட வேண்டும். வெள்ளை நிற சல்வாரியில் அப்சரா தேவதையே வையகத்துக்கு வந்து விட்டதோ என்றுகூட சந்தேகமாக இருந்தது. கவிஞனல்லவா? அவளின் அழகை ஏடேடாக எழுதித் தள்ளவேண்டும் போலிருந்தது. சிரிக்கும்போது எட்டிப்பார்க்கும் கன்னக் குழியும், கலகலப்பான பேச்சும் அவனை எங்கோ சிறகடித்துப் பறக்கவைத்தன.

அதன்பின் தொடர்ந்த சந்திப்புக்களில் ஒருமுறை சொல்லியே விட்டான்.

"நான் உன்ன விரும்புகிறேன்." மௌனம் அனுஷ்டித்தாள்.

"உனக்கு என்ன பிடிச்சிருக்கா?" மௌனமே பதிலானது.

"நீ யாரையாவது காதலிக்கிறியா?" இல்லையென்பது போல் தலையாட்டினாள். அதுவே மனதுக்கு சற்று ஆறுதலாகவும் இருந்தது.

"நான் அழகாயில்லையா?" இப்பொழுது அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"ரொம்ப அழகாயிருக்கீங்க" பெருமை பிடிப்படவில்லை. அவளுக்குத் தெரியாமல் சேட் காலரைச்சற்று தூக்கிவிட்டுக் கொண்டான்.

"அப்போ ஏன் நான் கேட்டதற்கு பதிலில்ல?"

"இங்க பாருங்க ரவி! நான் உங்க கவிதையில கவரப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனா உங்கள காதலிக்கவோ இல்ல கல்யாணம் பண்ணிக்கவோ எனக்கு எந்த அவசியமும் இல்லன்னு நினைக்கிறேன். நான் அந்தளவுக்கு முட்டாளுமில்ல. வாழ்க்கை பூரா கற்பனை உலகில் வாழ்ற உங்களுக்கெல்லாம் குடும்பத்தைப்பற்றி நினைக்கவே நேரமில்ல. அப்புறம் எதற்கு காதல் கல்யாணம் எல்லாம்? வானவில்லில் சேலைகட்டி, நட்சத்திரங்களை நகைகளாக மாட்டி அழகுபார்த்து பெருமைப்பட்டுக் கொள்வது வாசிக்கத்தான் அழகாயிருக்குமே தவிர, வாழ்க்கைக்கு சரிப்பட்டுவராது. நான் இப்படிப் பேசறேன்னு கோபப்படாதீங்க. எங்கேயாவது நல்ல தொழிலா தேடி வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக்க பாருங்க ரவி!"

அட்வான்ஸ் அட்வைஸை வழங்கிவிட்டு அவள் சிட்டாய்ப் பறக்க, அவன் மட்டும் சகலதும் உடைந்து போனதாய் அமர்ந்திருக்கிறான். அவன் பேனை மட்டும் புதிய கவிதைக்கு அத்திவாரமிட்டது.

"என் பிரிய காதல் துரோகியே!"

**யுத்தத்தின் கரங்கள் கிழித்துப் போட்ட காதல் கதைகளில் ஒன்று!**

# அந்த முகாமில்



**அக்கரைப்பற்று ஸாலி இப்னு நபீஸா**

வெகு நேரமாகியும் அமான் இன்னும் உறங்கவில்லை. இரவின் நடுவைப் பிளந்து சில்லூறு சங்கீதம் இசைத்தது. திடீரென்று துப்பாக்கிச் சத்தமும், ஷெல் சத்தமும் கேட்டன. பயத்தோடு அமான் எழுந்தான். என்ன செய்வதென்றே தெரியவில்லை. பின்கதவைத் திறந்து பின்வீட்டுக்காரரின் வேலியால் பாய்ந்து ஓடினான். அவனைப் போலவே அந்தக்கிராமமே ஓடியது. பள்ளிகளிலும், பாடசாலைகளிலும் அவர்கள் அகதியானார்கள். தாயொரு பக்கமாக.... பிள்ளை ஒரு பக்கமாக..... கணவனைப் பிரிந்த மனைவியாக...... அன்பு வேர் அறுபட்டது. அமானின் நினைவுகள் பர்ஜாவைச் சுற்றியது.... 'பாவம் அவள் இந்த நேரம் எங்கு இருப்பாளோ.... அதுவும் வயதான தாயுடன்.'

அவர்கள் அகதியாகவந்து பத்துநாட்களாகிவிட்டன. அது அவர்களுக்கு பகல் உணவு கொடுக்கும் நேரம்- ஆதலால் சாப்பாட்டு பார்சல் வாங்குவதற்காக வெயிலையும் பொருட்படுத்தாது நின்றான். பல நாட்களாக உணவு ஒழுங்காகக் கிடைக்காததால் பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. பார்சலை வாங்கியவாறு திரும்பியவன் அதிர்ந்து போனான். எதிரே பர்ஜா நின்றாள். ஆரம்பத்தில் அவனால் அவளை அடையாளம் காண முடியவில்லை. உருக்குலைந்து, கண்குழிவிழுந்து இருந்தாள். அணிந்திருந்த சட்டை கிழிந்திருந்தது. வெட்கத்தோடு முந்தானையால் பீற்றலை மூடினாள். அமான் அவளின் கோலத்தைக் கண்டு அழுது விட்டான். அவளுக்கும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அதை அடக்கிய வண்ணமே "எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே அழுதா எப்படி?" அவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"உனக்கு....ஏதாவது...... நடந்தா அதை என்னால் தாங்கமுடியாது?"

"சின்னப்புள்ள போல...... அழுறியளே? அழாதங்கொ."

"நீ இவ்வளவு நாளும் எங்கே இருந்தாய் பர்ஜா.......?"

"இதுக்கு முந்தி நாங்க பள்ளிக்கொடத்துல இருந்தம். சாப்பாடு, உடுப்பு ஒண்டும் அங்கே ஒழுங்காக கெடக்கல்ல; அதான் இஞ்ச வந்தம்."

சாப்பிடவில்லை என்று அவள் சொன்னதும் துடித்துவிட்டான். அவன் கையிலிருந்த சாப்பாட்டை அவளிடம் கொடுத்தான். கையில் வாங்கிக் கொண்டாள். "நீங்க...... நீங்க சாப்புட்டெயெளா".....?

"ஓம்"....

"பொய் சொல்றியள்!"

"இல்ல பர்ஜா! உண்மையா சாப்புட்டன்." பசி வயிற்றைக் கிள்ளியபோதும் பொய் சொன்னான்.

பர்ஜா சாப்பாட்டை வாங்கிக் கொண்டு அம்மாவுக்கும் கொடுத்து உண்ண சிட்டாய்ப் பறந்தாள். பசியால் அவன் வயிறு பேசியது. கிணற்றடிக்குச் சென்று நீரைக்குடித்தான். இப்போது அவனுக்கு கோழிக்கறியும் சோறும் சாப்பிட்ட திருப்தி.

'பர்ஜாவின் சட்டை கிழிந்திருப்பதை நினைக்கும் போது வேதனை அமானின் நெஞ்சுக்குள் தீயை மூட்டியது. எப்படியாவது பர்ஜாவுக்கு ஒரு சட்டை சீலை வாங்கிக் கொடுக்க வேண்டும், என்று நினைத்தான்.

அகதிகளின் அவலக்கண்ணீரைக் கேள்விப்பட்ட பக்கத்து ஊர் மக்கள் உணவு, உடை, மருந்து சேகரித்துக் கொண்டு வந்து அகதிகளுக்கு கொடுத்தார்கள். அந்தவகையில் அமானுக்கு ஒரு வெள்ளைச் சீலை கிடைத்தது. 'பர்ஜாவுக்கு அதைக்கொடுத்தால் சட்டைதைத்து போடுவாள்' என்ற எண்ணம் தோன்றவே அதை எடுத்துச் சென்று எதுவுமே பேசாமல் பர்ஜாவிடம் நீட்டினான்.

பர்ஜாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அமானைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழவேண்டும் போல இருந்தது. இருந்தும் இன்றைக்காவது அவனை அழவைக்கக் கூடாது என்பதற்காக, கஷ்டப்பட்டு சிரிப்பை வரவழைத்த வண்ணமே...

"இதென்ன வெள்ளப் போடவ...... செத்த...... பொணத்த சுத்துற துக்கா....?" என்றாள். அதைக்கேட்டு விட்டு அவன் சிரிப்பான் என்ற குறும்பு நோக்கத்தில்தான் அதை அவள் சொன்னாள். மற்றைய நாட்களில் என்றால் அமான் அதைக் கேட்டுவிட்டு குலுங்கிக் குலுங்கி சிரித்திருப்பான். ஆனால் அவன் இப்போதிருக்கும் நிலையில் அவனால் சிரிக்கமுடியவில்லை. அதுவும் அவனுக்கு முள்ளாய்க் குத்தியது.

"நாளைக்கு...... இந்த சீலையால் சட்டை தச்சி போட்டுவந்து காட்டணும். சரியா.....?"

மௌனமாக தலையை ஆட்டினாள்.

"ஒருநாள் வாசிகசாலையில் வைத்து, ஏதோ ஒரு முக்கியமான விஷயம்..... பிறகு சொல்வதாக சொன்னாயே. அது என்ன பர்ஜா....?"

அதை அவன் ஞாபகப்படுத்திய போது பர்ஜாவின் முகம் நாணத்தால் சிவந்தது. அவர்களின் காதல் விவகாரத்தைப் பற்றி அவளின் உம்மாவிடம் சொல்லி திருமணத்திற்கு சம்மதம் வாங்கியிருந்தாள். அதைத்தான் அன்று சொல்ல நினைத்தாள்.

இப்போதும் அமானிடம் அதைச் சொல்ல மனம் துடித்தும் நாணம் வார்த்தைகளுக்கு திரை போட்டு மறைத்தது.

"பிறகு.....சொல்றேன்..."

அமான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் சொல்லாமலே பர்ஜா ஓடிவிட்டாள்.

மறுநாள் பர்ஜாவைச் சந்திக்க அமான் போனான். ஆனால் அவளைக் காணமுடியவில்லை. தொடர்ந்து ஒரு வாரமாக அவளின் தரிசனம் அவனுக்குக் கிட்டவில்லை. இன்னும் ஒரு நாள் அவளைக் காணாவிட்டால் நெஞ்சு வெடித்துவிடும் போல இருந்தது.

மறுநாள் அந்த அகதிமுகாமில் யாரோ மௌத்தானதாக கதை பரவியது.

விசாரித்தபோது.... அது வேறு யாருமில்லை-பர்ஜாதான்!

அந்த அகதி முகாமுக்கு வந்ததன் பின்பு அவளுக்கு மூளைக்காய்ச்சல் ஏற்பட்டது. அதை அவளும் போடுபோக்காக விட்டுவிட்டாள்.

அகதிமுகாமுக்கு வரும் வைத்தியரும் கடமைக்காக எதையோ செய்துவிட்டு போனார். இறுதியில் அவளை மரணம் அரவணைத்துவிட்டது. அவளுக்கு சட்டை தைப்பதற்காக அமான் கொடுத்த வெள்ளைச் சீலை அவளின் இறந்த உடலை மூடியது.

"பர்ஜா....... பர்ஜா....." என்று கத்தியவாறு அந்த அகதிமுகாமின் சுவரில் தலையை முட்டி முட்டி கதறிக்கொண்டிருந்தான் அமான்.



நன்றி-பாக்யா



படிப்பகம்

www.padippakam.com

# சிரிப்பதற்கு மட்டுமல்ல

தருவது ரசிகன்





**ம**யக்கத்தில் இருந்தான் மன்னன். கூறவந்த விடயத்தை எப்படித் தெரிவிப்பது என்ற தயக்கத்தில் இருந்தார் அமைச்சர்.

"என்ன அமைச்சரே. ஏன் ஆடுகிறீர். ஆண்கள் நடனமாடினால் எனக்குப் பிடிக்காது."

தனது நகைச்சுவையை தானே வியந்து நகைத்தான் மன்னன்.

"மன்னா!"

"அது நான்தான் என்ன?"

"ஒரு முக்கியமான தகவல்!"

"அப்படியா? பிறகெதற்கு மூடி வைத்திருக்கிறீர்? சொல்லும்!"

"சுந்தரவல்லி..."

அமைச்சர் அந்தப் பெயரை உச்சரித்த போது மன்னவன் விழிகள் அகல விரிந்தன. அமைச்சருக்கு உள்ளூர நடுக்கம் எழுந்தது.

"என்ன... சுந்தரவல்லிக்கு... என்ன?"

"நமது ஒற்றர் படை சந்தேகப்படுகிறது. எதிரிகளின் ஆளாக இருக்கலாமோ என்று!"

ஒரே மூச்சில் சொல்லி முடித்துவிட்டு, அச்சத்தோடு நோக்கினார் மன்னவன் முகத்தை.

நினைத்தது சரிதான். மன்னவன் விழிகளில் நெருப்பு. அணில்போல இருந்த மீசையிலே துடிப்பு.

"யார் சொன்னது? கட்டுக் கதையை எடுத்துவந்து கொட்டிவிடுகிறீரா?"

அமைச்சர் மிருதுவான குரலில் பதில் சொன்னார்.

"இல்லை மன்னவா. கட்டுக்கதைகளை தங்கள் காதுகளுக்கு தருமளவுக்கு பொறுப் பில்லாத ஒருவன் அல்ல நான்!"

"ஓஹோ... ஆதாரம் இருக்கிறதா?"

"சந்தேகம் இருக்கிறது. ஆதாரம் சேகரிக்க தங்கள் அனுமதி தேவைப் படுகிறது."

"அனுமதி எதற்கு?"

"சுந்தரவல்லியைத் தொடர்ந்து கண் காணிப்பதற்கு!"

மன்னவன் தன் அமைச்சரை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல நோக்கினான்.

"உமக்கு எத்தனை வயது?"

"அறுபது வயது!"

"அறுபது வயதில் அந்தப்புரத்தை எட்டிப் பார்க்க நினைக்கிறீரே நியாயமா?"

"மன்னா!"

"போதும் போய் வாரும். வேண்டாம் வேறெதுவும் பேச வேண்டாம்."

•••

**மோ**கனப் புன்னகை சிந்தியது தந்தச் சிலை.

தழுவிக் கொண்டான் மன்னவன். தழுவிப்பட்டுக்கொண்டே தந்தச் சிலை அசைந்தபோது, மன்னவன் உடல் முழுக்க காமன் கணைகள் பாய்ந்து வதைத்தன.

தந்தச் சிலையின் முதுகை தடவிக் கொடுத்தபடியே மன்னவன் நினைத்தான். 'இந்தச் சிலையை என்னிடம் இருந்து பிரிக்க நினைக்கிறார்களே!'

மன்னவன் கரம் முதுகில் மட்டுமே அதிக நேரம் தரித்துவிட்டதால், மன்னவன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டதாக தந்தச் சிலை புரிந்து கொண்டது.

"மன்னா, என்ன யோசனை. என்னிடம் சொல்லக் கூடாதா?"

தந்தச் சிலை சட்டென்று விம்மியழத் தொடங்கியது.

"ஏன் அழுகிறாய் சுந்தரவல்லி?"

"பஞ்சணையில் மட்டும் வஞ்சனை யில்லாமல் வாரித் தருகிறீர்கள் சுகத்தை! நெஞ்சணையில் இடம் தந்து யோசனைகளை மட்டும் பரிமாற மறுக்கிறீர்கள். சந்தேகமா மன்னவா?"

அழுதுகொண்டே கேட்டாள். அல்லது அழுவதுபோல நடித்துக் கொண்டே கேட்டாள்.

"சந்தேகமா? எனக்கா? பூவுக்குள் நஞ்சென்று தெரிந்தால் வண்டு தேடி வருமோ?

## இலக்கிய நயம்

சுந்தரவல்லி, தேனுக்குள் கூட விஷம் இருக்கலாம். பூவுக்குள்கூட பூ நாகம் இருக்கலாம். ஆனால் உனக்குள் சந்தோச சுரம் மட்டுமே நிறைந்திருக்கிறது. சந்தேகம் எனக்கு எப்படி வரும்?"

சுந்தரவல்லியின் வயிற்றில் முகம் புதைத்தான் மன்னன். உதடுகளால் சுகம் அறிந்தான் மன்னன்.

அவன் தலைமுடி கோதிவிட்டு, காதுமடல்களை விரல்களால் நீவிவிட்டு, குனிந்து உச்சந்தலையில் இதழ் முத்திரை பதித்தாள் சுந்தரவல்லி.

நிமிர்ந்த மன்னவன் முகம் முன் எழில்களில் மோதிக் கொண்டது. இப்போது நெஞ்சுக்குள் நெருப்பு பற்றிக் கொண்டது.

•••

**த**ளபதி மாறன் கண்களை மூடி ரசித்தான்.

மதன சுந்தரி அவன் மார்பில் இதழ்களால் நாட்டியம் ஆடினாள்.

சிலிர்த்துப் போனான். சொர்க்கம் பக்கத்தில் என்று கிறங்கிப் போனான்.

மார்பில் சாய்ந்திருந்த மதனசுந்தரி கேட்டாள்,

"பிடித்திருக்கிறதா?"

"இதுவரை படித்தறியாத கதை. பிடிக்காமல் போகுமா? பலரிடம் கதை அறிந்தவன் நான். ஆனால் யாருமே இப்படியொரு கதை அறிய வைத்தது இல்லை."

அவள் வெள்ளிக்காசுகள் தரையில் கொட்டியதுபோல நகைத்தாள்.

"கதையெல்லாம் ஒன்று தான். சொல்லும் முறையிலே தான் புதுமை."

"வித்தகிதான் நீ, ஒப்புக் கொள்கிறேன்."

"தினமும் புதுமை வேண்டாமா?"

"இன்னமும் இருக்கிறதோ புதுமை?"

"கலைக்கு ஏது எல்லை?"

"மகிழ்ச்சி. இந்தச் சிலைக்கு என்ன தேவை?"

"கலைக்கு விலையா?"

"இல்லை; விருந்துக்கு நன்றி."

"நன்றி சொல்லில் வேண்டாம்."

"காமன் வில்லில் பூட்டித் தரவோ?"

"வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன். அதுவும் வேண்டும். வேறொன்றும் வேண்டும்!"

"அது என்ன வேறொன்று?"

"என் இதய மன்னவன் இந்த நாட்டின் மன்னவனாக வேண்டும். நான்அரசியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை. தாங்கள் அரசராக வேண்டும் என்றும் ஆசைப் படுகிறேன்."

"பேராசை!"

"தவறு தளபதியாரே தவறு. இந்தப் பேரழகன் பார் போற்றும் பூபதியாக வேண்டும் என்பது நியாயமான ஆசைதான்."

"அப்படியானால் மன்னர்?"

"சதுரங்கத்தில் காய்களை வெட்டுவதுதான் வெற்றிக்கு வழி!"

"துரோகமல்லவா?"

"இல்லை; விவேகம்!"

சொல்லியபடியே மாறனை தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். விடுபட்டு நிமிர்ந்த மாறன் நகைக்கத் தொடங்கினான்.

அந்த அறையின் வாயில் கதவு திறக்கப்பட்டது.

சுந்தரவல்லி தலையில் இடி விழுந்தது போலானாள்.

மன்னவனும், அமைச்சரும் திறக்கப்பட்ட கதவின் வழியாக உள்ளே வந்து கொண்டிருந் தனர்.

சுந்தரவல்லி மயங்கிப் போய் தரையில் சரிந்தாள்.

மன்னவன் தன் விழிகளில் நன்றி உணர்வை தேக்கி வைத்துக் கொண்டு அமைச்சரையும் தளபதியையும் நோக்கினான்.

"அமைச்சரே தளபதியை வைத்து நீர் ஆடிய நாடகம் என் விழிகளைத் திறந்தது. பகைவனின் ஆளாக நமக்குள் பகை விதைக்க வந்தவளின் சுயரூபம் புரிந்தது. நீரே அமைச்சர். நீரே நண்பர். சிரித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல தூய நட்பு. நெறி கடந்து செல்லும்போது தடுத்து இடித்துரைப்பதும் நட்பென்று காட்டி விட்டீர்."

மன்னவன் அமைச்சரை மார்புறத் தழுவிக் கொண்டான்.

அமைச்சரின் நட்பினை மன்னவன் புகழ்ந்துரைத்தது தவறே அல்ல என்கிறார் திருவள்ளுவர். எப்படி? இப்படி;

**"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"**

குறள் -784. அதிகாரம்-79.

## விமானத்தில் ரசியர்கள்?

**அன்டநோவ் விமான பைலட் ஒரு புலியாமே?**

கே.சீதாராமன், நீர்கொழும்பு.

புலிதான்-ஆனால் குட்டிப்புலி. எட்டா யிரம் மைல்கள்தானே பறந்திருக்கிறார். இந்தியாவில் ஒரு பைலட் அனுபவத்தில் புலியாக கணிக்கப்படுவதாயின் குறைந்தது 25 ஆயிரம் மைல்களாவது பறந்திருக்க வேண்டும்.

▫▫▫

**நம்நாட்டின் வளர்ச்சி வீதம் கூடு கின்றதா? குறைகின்றதா?**

செல்வன்-கொழும்பு-15.

நிச்சயமாக கூடியிருக்கின்றது. ஏழு பேர் பலியானார்கள் என்று செய்தி வந்தாலே ஐயோ... அய்யய்யோ... என்று ஒப்பாரி வைத்தது அந்தக் காலம். இப்போதெல்லாம் எழுபதுபேர் பலியானாலும் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல் எவ்வளவு ருசிகரமாக வதந்திகள் பரப்பிக்கொண்டு திரிகிறார்கள் பார்த்தீர்களா? இதுவும் ஒரு வளர்ச்சிதானுங்களே!

▫▫▫

**'அன்டநோவ்' விமானத்தில் ரசியர்கள் பயணம் செய்தார்கள் என்று கூறப்படுகிறதே?**

ஏ.புஹாரி-மருதானை.

விழுந்தது ரசியர்களிடம் வாங்கிய விமானம் என்பதும், ரசியா விமானிகள்தான் அதனைச் செலுத்த பயிற்சி கொடுத்தார்கள் என்பதும் இரகசியமல்ல. விமானத்தில் ரசியர்கள் சென்றிருந்தால்கூட, பயிற்சி யளிக்கவே சென்றனர் என்று கூறியிருக்க லாம். மறைக்கவே தேவையில்லை. ஆகவே- அது ஒரு வதந்தி. (குண்டுவீசச் செல்லும் விமானத்தில் போயிருந்தால் மறைக் கிறார்களோ என்று சந்தேகிப்பது நியாயம்.)

▫▫▫

**சிந்தியா! மனிதர்கள் பேதங்கள் இல்லா மல் ஒன்றுபட்டு வாழ்ந்தால் இவ்வுலகம் எப்படி இருக்கும்?**

தமிழ்ச்செல்வி பெருமாள்-பறகடுவ.

உலகத்தைவிடுங்கள். நம் நாடு எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பாருங்கள். எனது கற்பனையை சொல்கிறேன் கேளுங்கள்: தமிழ்ச்செல்வி அடையாள அட்டையை மறந்துவிட்டு, தாராளமாக தலைநகர் வந்து செல்லக் கூடியதாக இருக்கும். காலிமுகத்திடலில் நின்று 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று உரத்துப் பாடக்கூடியதாயிருக்கும். மிகுதியை நீங்களே கற்பனை செய்யுங்கள்.

▫▫▫

**நடிகைகள் 'நாய்' வளர்ப்பது ஏன்?**

வி.கோபி-வெள்ளவத்தை.

தங்களைச் சுற்றி இருப்பவர்கள் திருடர் கள் என்று நினைப்பதால். (ஆகா... என்ன அருமையான கேள்வி!)

▫▫▫

## சிந்தியா பதில்கள்

**என் காதலி என்னை நேருக்கு நேர் பார்ப்பதற்கு அச்சப்படுகிறாள். என்ன செய்யலாம்?**

எஸ்.விஜயன்-அக்கரைப்பற்று-07.

ஏன் விஜயன், அவ்வளவு பயங்கர மாகவா இருக்கிறீர்கள்?

▫▫▫

**தமிழன் என்று சொல்லடா... பூர்த்தி செய்யுங்கள் சிந்தியா.**

எம்.மகேந்திரன்-இந்தகல மேற்பிரிவு.

சோதனை முகாமில் தவித்து நில்லடா.

▫▫▫

**டியர் சிந்தியா! கடவுளுக்காக நாமா? நமக்காக கடவுளா?**

டி.திவாகரன்-பதுளை.

"ஆட்டுவித்தால் யார்ஒருவர் ஆடாதாரே கண்ணா" அதன்படி பார்த்தால் நாமெல்லாம் பொம்மைகள்.

▫▫▫

**நிம்மதி சீர்குலைந்துவிட்டால் என்ன செய்யலாம்?**

மு.தெய்வீகரஞ்சனி-பதுளை.

புயல்வீசி ஓய்ந்தபின்னர் மன உறுதி யோடு மறுபடி சீராக்க வேண்டும்.

▫▫▫

**சென்னையில் இலங்கை தூதரகத்தில் வெடித்த குண்டு பற்றி?**

எம்.சல்மான் பாரிஸ்-கஹட்டோவிட.

ரஜினிகாந்த் மறுபடியும் ஏதாவது சொல்லிவிடப் போகிறார். சொன்னார் என்று வையுங்கள், செல்வியின் கோபத்தோடு வேறு சிலரின் கோபத்தையும் சம்பாதிக்க வேண்டி யிருக்கும்.

▫▫▫

**டியர் சிந்தியா! அண்மையில் தமிழகத்தில் மிகச் சிக்கனமாக ஒரு திருமணம் நடந்ததாமே, உண்மையா?**

அபிமன்யு-நுவரெலியா.

ஆயிரம் கோடிகள் கையில் வைத்திருப் பவர் சில கோடிகளை மட்டுமே செலவழிப் பது சிக்கனம்தானே. செலவாளித்தனம் என்றால் முழுவதையுமல்லவா கொட்டி யிருக்க வேண்டும்!

▫▫▫

**சீனாவில் நடைபெற்ற பெண்கள் மாநாடு பற்றி?**

ஐ.எம்.ஹனீபா-தம்பலகாமம்.

இப்படி எத்தனை மாநாடுகள் நடந்து விட்டன. யாரோ தயாரித்துக் கொடுத்த உரையைக் கொண்டுபோய் வாசித்துவிட்டு, வசதியுள்ள பெண்கள் பெயரெடுத்துக் கொள்ளவே இவ்வாறான மாநாடுகள் உதவு கின்றன. உதாரணம் - ஹிலாரி கிளிண்டன்.

▫▫▫

**கோபம் வந்தால் என்ன செய்வீர்கள்?**

எம். சத்தியமூர்த்தி-பேருவளை.

ஓடிப்போய் ஒளிந்துகொள்வேன். யார்மீதாவது பிரயோகித்தால்தானே வம்பு.

▫▫▫

**நடிகைகள் கவர்ச்சியாக நடிப்பது ஏன்?**

கே.உதயராசு - சித்தாண்டி-3.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வ தற்காக.

▫▫▫

**கண்ணதாசன் பாடல்களில் உங்களுக்கு பிடித்த வரிகள்?**

த.அர்ஜீன்குமார்-லெநன்டிகுருப்.

ஒன்றா-இரண்டா-எடுத்துச்சொல்ல?

## குறுக்கெழுத்துப் போட்டி இல-119

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | |
| | ■ | 4 | | | | |
| | ■ | | | ■ | | ■ |
| 5 | | | | | ■ | 6 |
| | ■ | 7 | | | | |
| ■ | 8 | | ■ | ■ | ■ | |
| 9 | | | ■ | 10 | | |

### இடமிருந்து வலம்

01. சிறிய தோணிகளில் பயணம் செய்ய உதவுவது.
03. கலைஞனின் கைகளால் உருவாகும் இது ஆலயங்களில் அமரத்துவம் பெறும்.
04. இதனை அறிந்துதான் பிச்சையிட வேண்டுமாம்.
05. சில நாடுகளில் குற்றவாளிகளைத் தண்டிக்கப் பயன்படுகிறது.
07. இளம் பெண்கள் தாம் விரும்பும் ஆண் களிடம் எதிர்பார்ப்பது.
09. மரஞ்செடி கொடிகளில் காணப்படும் இதனை சில மனிதருக்கும் ஒப்பிடுவதுண்டு.
10. ஓலை என்றும் கூறுவார்கள்.

### மேலிருந்து கீழ்

01. எந்தக் காரியத்திலீடுபட்டாலும் இது இருந்தால் நிச்சயம் வெற்றிதான்.
02. ஒருவனை முழு மனிதனாக்க இது உதவும் என்று அறிஞர்கள் கூறுவார்கள்.
03. என் சாண் உடம்புக்குப் பிரதானமானது.
04. எதனை அறுத்தெறிந்தாலும் இதனை அறுத்தெறிய முடியாது.
06. மனித உடம்பு இறுதியில் ஒரு பிடி இதுதான்.
08. நீர் தேங்கியுள்ள இடங்களில் இதனைக் காணலாம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.09.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-119
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-117ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பா | லை | 2 வ | ன | ம் | ■ | 3 தா |
| யா | ■ | ள் | ■ | 4 ஓ | 5 நா | ய் |
| 6 ச | ர | ள | ம் | ■ | ரை | ப் |
| ம் | ■ | ல் | ■ | 7 அ | ■ | பா |
| ■ | 8 ம | ■ | 9 சோ | ம் | ப | ல் |
| 10 பா | து | கா | ப் | பு | ■ | ■ |
| 11 வி | ரை | வு | ■ | 12 லி | ல் | லி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 117இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. செல்வி. வி. சீவரட்ணம், வெள்ளவத்தை.
2. கே. திருநாவுக்கரசு, வவுனியா.
3. எம். ஸனாஸ், கொழும்பு-12.
4. சிம்லா காதர், திக்குவெல்ல .
5. திருமதி. சி. லிண்டா, கந்தானை.
6. பி. யோகநாதன், பண்டாரவளை.
7. எம். முஸம்மில், தும்மளசூரிய.
8. பதூர்தீன் எப்.றிஹானா, நுவரெலியா.
9. எஸ். ராஜ்மோகன், செங்கலடி.
10. செல்வி. எஸ். கலைவாணி, இரத்தினபுரி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

# மகாபாரதம்

## முடிவுரை

**பம்பாயைச் சேர்ந்த பி.ஆர்.சோப்ரா நிறுவனத்தினர் தயாரித்த தொலைக் காட்சித் தொடரான மகாபாரதம், எம்.ரி.வி. நிறுவனத்தினரால் கடந்த 94 வாரங்கள் ஒளிபரப்பப்பட்டன. பீஷ்மரின் உயிர் பிரிவதுடன் அக்காட்சிகள் முடிவடைகின்றன. ஆனால், மகாபாரதக் கதை அத்துடன் முடிவடைவதில்லை.**

**யுதிஷ்டிரமாமன்னன்- மணிமுடி தரித்து அரசபரிபாலனம் செய்து மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இறுதியில் பூதவுடலுடனேயே சொர்க்கலோகம் செல்கிறார். இதனை வடமொழியில் வியாச மாமுனிவரும் தமிழில் வில்லிபுத்தூராரும் மிகச் சிறப்பாகத் தருகின்றனர். வியாசபகவான் தமது தெய்வீக சுலோகங்களால் கூறும் தகவல்களை ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து தருகிறோம்.**

✪ ✪

குருச்சேத்திரப் போரில் வெற்றி பெற்ற பாண்டவர்கள் தாய் குந்திதேவியுடனும் பாஞ்சாலியுடனும் அஸ்தினாபுரம் வந்து பெரிய தந்தையாரான திருதராட்டிர மாமன்னனதும் அரசி காந்தாரியினதும் ஆசிகளைப் பெறுகின்றனர். தொடர்ந்து அஸ்தினாபுரி மாமன்னரான யுதிஷ்டிரருக்கு முடிசூட்டுவிழா நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து அம்புப்படுக்கையில்கிடக்கும் பீஷ்மரின் ஆசிகளைப் பெறுகின்றனர். பீஷ்மரும் தமது கடமை முடித்து கண்களை மூடுகிறார். அவருடைய இறுதிக் கிரியைகள் முடிவடைந்ததும் யுதிஷ்டிரர் மிகுந்த வேதனை அடைகிறார். தனக்கு அரச பதவி வேண்டாம் என்று பதவியைத் துறக்க முன்வருகிறார்.



இதேகாலகட்டத்தில் வியாசமாமுனிவர் யுதிஷ்டிரரிடம் வந்து சத்திரியருடைய தர்மத்தைப் பற்றி எடுத்துரைத்து ஆட்சிபுரியும்படி வற்புறுத்துகிறார். சகோதரர்களும் யுதிஷ்டிரருக்கு அறிவுரை கூறி ஆட்சியை ஏற்கும்படி கூறுகின்றனர். நாரதமாமுனிவரும் வந்து அறிவுரை தருகிறார்.

யுதிஷ்டிரரும் ஏனையோரும் கங்கைக் கரை சென்று ஒரு முழு மாதம்வரை தங்கியிருந்து போரில் மறைந்த சகலருடைய ஆத்மசாந்திக்காக பல கிரியைகளைச் செய்து முடித்த பின்னர் அஸ்தினாபுரம் வருகின்றனர்.

பாண்டவர்களை அஸ்தினாபுரியில் சேர்த்துவிட்டு கிருஷ்ணர் தமது நாடான துவாரகைக்குச் செல்கிறார். வழியில் உதங்க மகரிஷியைக் காண்கிறார். பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்குமிடையில் நடைபெற்ற பயங்கரப் போர் பற்றிய விபரங்களை உதங்கர் கேட்டறிகிறார். கவுரவர்கள் அழிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற உதங்கர் கிருஷ்ணன் மீது கடுங்கோபமுற்றுச் சபிக்க முற்படுகிறார். கிருஷ்ணர் தனது விஸ்வரூபத்தைக் காட்டி, தர்மமும் நீதியும் நிலைபெறவே குருச்சேத்திரப்போர் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். கிருஷ்ணர் சாட்சாத் மகாவிஷ்ணுவின் அவதாரமே என்று அறிந்த உதங்கர் மன்னிப்புக் கோரியதுடன் ஒரு வரத்தினையும் கேட்டுப் பெறுகிறார்.

தான் எங்கு சென்றாலும் தனக்குத் தாகம் ஏற்பட்டால் உடன் பருகுவதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்க வரமளிக்கும்படி விண்ணப்பிக்கிறார். கிருஷ்ணரும் அவ்வரத்தினை அளித்துவிட்டுச் செல்கிறார்.

உதங்கர் தன் வழியே செல்லும் போது அவருக்கு தாகம் ஏற்பட்டது. அவ்வழியே அழுக்கான ஆடைகளுடன் அவலட்சணமான ஒருவன் ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டு வந்தான். அவனுடன் பல நாய்களும் வந்தன. உதங்கரின் தாகத்தை உணர்ந்த அந்த மனிதன் தண்ணீர் கொடுக்க முன்வந்த போது அவனுடைய தோற்றத்தைக் கண்டு அருவருப்பினால் தண்ணீர் பருக மறுத்து விட்டார். இதேவேளை கிருஷ்ணர் தோன்றி அந்தச் சண்டாள வடிவத்தில் தண்ணீர் பாத்திரத்துடன் வந்தவர் தேவேந்திரன் என்றும், பாத்திரத்தில் இருந்தது தேவாமிர்தமே என்றும் விளக்கி, துறவியானாலும் பல உண்மைகளைத் தெரியாமலும் ஆசாபாசங்களைத் துறக்காமல், உயர்வு தாழ்வு எனும் மனப்பான்மை நீங்காமல், பேதமையில் உழலும் உதங்கருக்கு மேலும் பல போதனைகளைத் தந்தார். வேதனை அடைந்த உதங்கர் உண்மையை உணரலானார்.


அஸ்தினாபுரியில் யுதிஷ்டிரமாமன்னர் அஸ்வமேதயாகம் ஒன்றினைச் சிறப்பாக நடத்தி முடித்தார். திருதராட்டிரரையும் காந்தாரியையும் எந்தவித குறையுமின்றி காத்துவந்தனர். அவர்களுக்குச் செய்ய வேண்டிய சகல பணிவிடைகளையும் குந்திதேவி செய்தார். இருப்பினும் திருதராட்டிரர் மீது தனது வெறுப்பினை பீமன் அடிக்கடி வெளிக்காட்டவே செய்தான். இவ்வாறு 15 வருடங்கள் திருதராட்டிரரும் காந்தாரியும் அரண்மனையில் தங்கியிருந்தனர். மேலும் அரசபோகத்தில் திளைத்திருக்க விரும்பாத திருதராட்டிரர் தனது மனைவியுடன் வனவாசம் மேற்கொள்ள விரும்பினார். அவர்களுக்குச் சேவை செய்ததன்பின் தன்னுயிரைத்துறந்து வானகம் செல்வதே தன் ஆசை என்று கூறி குந்தியும் கானகம் புறப்பட்டார். இம்மூவரையும் மேலும் தடுத்து வைக்க எவராலும் முடியவில்லை. வியாச மாமுனிவரும் வந்திருந்து அவர்களைக் கானகம் அழைத்துச் சென்றார்.

கானகத்தில் ஆக மூன்று வருடங்கள் மட்டுமே இம் மூவரும் தவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். வனத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயில் இவர்களும் அகப்பட்டு பூதவுடல் நீத்தனர்.

### சாதுக்களின் சாபம்

துவாரகை திரும்பிய கிருஷ்ணர் அங்கு 36 வருடங்கள் நல்லாட்சி புரிந்தார். யாதவர்கள் எக்குறையுமின்றி வாழ்ந்தனர். ஒரு நாள் துவாரகையை நோக்கி சில சாதுக்கள் வந்தனர். அவர்களின் ஆற்றலைப் பரிசோதிக்கும் நோக்குடன் துவாரகை இளவரசன் சாம்பவன் கர்ப்பிணிப் பெண் போன்று வேடம் பூண்டு, சந்நியாசிகளை அணுகி, தன் வயிற்றிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்று வினவினான். கோபமடைந்த முனிவர்கள் "உன் வயிற்றில் குழவிதான் உள்ளது. அதுவே யாதவ வம்சத்தைச் சின்னாபின்னப்படுத்தி அழித்தொழிக்கும்" என்று சாபமிட்டனர்.

யாதவர் குலத்தில் பல்வேறு குழுக்கள் தலையெடுத்து ஒரு குழுவினருடன் மற்றொரு குழுவினர் போரிடத் தொடங்கினர். இதனால் இனமே அழியத் தொடங்கியது. பலராமரால் இக்குழுச் சண்டைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியாமற்போய்விட்டது.



அவரும் உயிர் நீத்தார். கிருஷ்ணரும் தனது பணிகள் உலகில் முடிவடைந்து விட்டதை உணர்ந்து கானகம் சென்று தியானத்தில் அமர்ந்தார். அப்போது ஒரு வேடுவன் எய்த அம்பொன்று அவருடைய வலது பாதத்தை ஊடறுத்தது இதனால் அவருடைய ஆன்மாவும் உடலை விட்டுப் பிரிந்தது.

கிருஷ்ணரின் மறைவினைக் கேள்வியுற்ற பாண்டவர்கள் மிகவும் வருந்தினர். புவி வாழ்வின் அநித்யத்தை உணர்ந்த அவர்கள் அபிமன்யுவின் மகன் பரிக்ஷித்தை அஸ்தினாபுரியின் மன்னனாக முடிசூட்டிவிட்டு புனிதத்தலங்களை நாடி யாத்திரை புறப்பட்டனர். அவர்களுடன் பாஞ்சாலியும் இணைந்து கொண்டாள். அவர்களுடன் எங்கிருந்தோ வந்த ஒரு நாயும் சேர்ந்து கொண்டது.

பல தீர்த்தத் தலங்களையும் தரிசித்த பின்னர் இமயமலையின் அடிவாரம் சேர்ந்து அங்கிருந்து மலைமீது ஏற ஆரம்பித்தனர். இமாசலத்தின் பனி படர்ந்த செங்குத்தான பாதையில் ஏறுவது யுதிஷ்டிரரைத் தவிர ஏனையோருக்கு முடியாமற் போய்விட்டது. முதலில் திரௌபதியும் பின்னர் சகாதேவனும் தொடர்ந்து நகுலன், அர்ச்சுனன், பீமன் என்றும் ஒவ்வொருவராக மடிந்தனர். யுதிஷ்டிரர் சோர்வடையாமல் மேலே ஏறிக்கொண்டிருந்தார். அவருடன் அந்த நாயும் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தது.

### சொர்க்கத்தில் சோதனைகள்

ஓரிடத்தில் தேவேந்திரன் தனது இரதத்துடன் யுதிஷ்டிரரை எதிர்கொண்டு, அதிலேறி தன்னுடன் சொர்க்கலோகம் செல்ல வருமாறு அழைப்பு விடுத்தான். யுதிஷ்டிரர் இரதத்திலேறு முன்னரே அவரைத் தொடர்ந்து வந்த நாய் இரதத்தில் ஏறிக்கொண்டது. இதனைக் கண்ட இந்திரனுக்குக் கடுங்கோபமேற்பட்டது. நாயை இரதத்தில் இருந்து அப்புறப்படுத்த முயன்ற போது யுதிஷ்டிரரும் இரதத்தை விட்டு இறங்கிவிட்டார்.

"தேவேந்திரரே! இந்தக் கடுங்குளிரிலும் என்னை விட்டுப் பிரியாமல் இந்த ஜீவன் என்னை நிழல் போல் தொடர்ந்து வந்திருக்கிறது. இந்த ஜீவனுக்கு இந்த இரதத்தில் இடம்தர மறுத்தால் எனக்கும் இந்த இரதம் வேண்டியதில்லை. நான் சொர்க்கபுரி செல்வதானால் இந்த நாய்க்கும் அங்கு இடம் தரப்படவேண்டும். இல்லையேல் அந்த சொர்க்கலோக வாழ்க்கை தேவையில்லை" என்றார் யுதிஷ்டிரர்.

"யுதிஷ்டிர மாமன்னரே! சொர்க்கத்தில் இந்த கேவலமான நாயை எவ்வாறு அனுமதிக்க முடியும்? தங்களை மட்டும்தான் சொர்க்கம் ஏற்கும்." இவ்வாறு கூறினார் தேவேந்திரன்.


"அவ்வாறானால் அந்த சொர்க்கபுரி எனக்கு வேண்டவே வேண்டாம். இந்த நாய் எங்கே போகப் போகிறதோ அங்கே நானும் செல்லப்போகிறேன்" என்றவாறு யுதிஷ்டிரர் அவ்விடம் விட்டு அகலத் தொடங்கினார்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. நாய் உருவில் தர்ம தேவனான இயமதர்மன் தான் யுதிஷ்டிரரைத் தொடர்ந்து வந்திருக்கிறார் என்ற உண்மை புலப்பட்டது. யுதிஷ்டிரரின் திடசித்தத்தையும் உயிர்களிடத்தில் அவர் கொண்டுள்ள பாகுபாடற்ற தன்மையையும் பரிசோதிக்கவே தான் நாயுருவில் தொடர்ந்ததாகக் கூறி தர்மராஜன் யுதிஷ்டிரரை வாழ்த்திவிட்டு மறைந்தார்.

இந்திரனுடன் தேரிலேறி சொர்க்கபுரியை அடைந்ததும் யுதிஷ்டிரர் கண்டகாட்சி அவரிடம் பெரும் ஐயப்பாட்டைக் கிளறியது. அங்கு மிக மகிழ்ச்சியாக துரியோதனன் வீற்றிருப்பதைக் கண்டார்.

அதனைக் கடந்து அப்பால் சென்றதும் சகிக்கமுடியாத துர்நாற்றமும் நாலாபுறமும் அவலக்குரல்களும் எழுந்ததை அவதானித்தார். "சொர்க்கலோகத்தில் இத்தகைய அருவருப்பான இடமும் உண்டா? நான் திரும்பிவிடுகிறேன். அதற்குமுன் என் தாயுடன் சகோதரர்களையும், திரௌபதியையும் காண விரும்புகிறேன்" என்று அவரை வழிநடத்திய தேவதூதனிடம் யுதிஷ்டிரர் கேட்டார். அப்போது "எங்களை இக் கொடுமையான இடத்தில் விட்டுச் சென்றுவிடாதீர்கள். தாங்கள் இங்கு நிற்பதால் எங்களுக்கு ஓரளவு தெம்பு உண்டாகிறது..... போய்விடாதீர்கள்" என்று பல குரல்கள் கேட்டன. தூதனிடம் அவர்கள் யார் என்று யுதிஷ்டிரர் கேட்டார். அதற்கு தூதன், "இவர்கள் தங்க்ள் சகோதரர்களும் உறவினர்களும் திரௌபதியுமாவர்" என்று கூறினான். அதிர்ச்சியுற்ற யுதிஷ்டிரர், மேலே செல்ல மனமில்லாமல், "இந்த இடம் எத்தகைய கொடூரமானதாக இருப்பினும் நான் இங்கேயே இருந்துவிட விரும்புகின்றேன். நான் இங்கே இருப்பதானால் இவர்கள் ஓரளவு நிம்மதி அடைவதாகக் கூறுகிறார்களே! அவர்களுடைய நிம்மதிக்காக நான் எதையும் தாங்கச் சித்தமாகிவிட்டேன்" என்றார்.

இவ்வாறு கூறிய யுதிஷ்டிரர் முன், மீண்டும் தர்மராஜனான இயமன் தோன்றினார். "மகனே! உன்னுடைய உண்மையான தன்மைகளை வெளிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட பரிசோதனைகளில் நீ வென்றுவிட்டாய். நீ இங்குபார்த்த துரியோதனனோ நீ கேட்ட உனது உறவினர்களின் குரலோ-எல்லாம் எம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மாயத் தோற்றங்கள். ஆகவே



உன்னுடைய தூல சரீரத்தை விடுத்து தூய்மையான மோட்சத்துக்குரிய அழிவற்ற நித்திய உடலை எடுத்துக்கொள்வதற்குரிய தகுதியைப் பெற்றுவிட்டாய். நீ இதோ நிற்குமிடம்தான் சொர்க்கலோகம்-இங்கு உன்னைச் சார்ந்தவர்களெல்லாம் பேரானந்தமாக இருக்கின்றனர். நாரதமாமுனிவரும் இதோ உன் அருகில்தான் நிற்கிறார்."

இவ்வாறு இயமதர்மன் கூறியதும் பூவுலகுக்குரிய உடலை நீக்கி பேரானந்தப் பெரு அமைதி நிலையினை யுதிஷ்டிரர் அடைந்தார்.

### ஐந்தாவது வேதம்

தர்மம் தளர்ந்து அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம், அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அந்தப் பரம்பொருள் மாநிட உருவெடுத்து வருவதாக வேதங்கள் கூறுகின்றன. இத்தகைய சம்பவம் எப்போதும் நடைபெறுவதில்லை.

நீதியை நிலைநிறுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட திட்டம் தீட்டப்பட வேண்டும். இறைவனும் மாநிட அவதாரம் எடுப்பதானால் அதற்கும் உரிய திட்டம் செம்மையாக வகுக்கப்படுகிறது. அப்போதுதான் அவதாரத்தின் இலட்சியம் ஈடேறும். மனித உருவில் இறைவன் மனிதருடன் மனிதனாகவே வாழ்ந்து இயல்பாகவே தனது கைங்கரியத்தை நிறைவேற்றி மறைகிறான்.

இத்தகைய தத்துவத்தை விளக்கும் உலக மகாகாவியமான மகாபாரதம் ஐந்தாவது வேதம் என்று வர்ணிக்கப்டுகிறது.

மாமுனிவர் வேதவியாசர் மகாபாரதத்தை 8,000 சமஸ்கிருத சுலோகங்களில் வடித்தார். தனது மகன் சுகதேவன் மூலம் இதனைப் பரப்பினார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவான இக்கதையில் மனித வாழ்க்கை மேன்மை அடைவதற்கான எண்ணற்ற மார்க்கங்கள் தரப்பட்டுள்ளன. இக்கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் காலங்கடந்தும் சிரஞ்சீவியாக வாழ்வதைக் காண்கிறோம். இதில் இடம்பெற்ற பெரும்பாலான போதனைகள் அன்று எவ்வாறு பொருந்தியதோ இன்றும் நமது அன்றாட வாழ்க்கையுடன் பொருந்துகின்றன. இனிமேல் வரும்காலங்களிலும் இவை பொருந்தவே செய்யும்.

வியாசமாமுனிவரால் யாக்கப்பட்ட சுலோகங்களுடன் பல்வேறு காலங்களில் மேலும் 92,000 பாடல்கள் இணைக்கப்பட்டு இன்று மொத்தம் ஒரு இலட்சம் சுலோகங்களுடன் மகாபாரதம் பொலிவுறுவதாகக் கூறப்படுகிறது. காலத்துக்கேற்ற கருத்துக்களை இணைப்பதற்காக அவ்வப்போது அறிஞர்களால் சேர்க்கப்பட்ட சுலோகங்கள் இடம்பெற்றமையினால் இக்காவியத்தில் ஆங்காங்கே முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கிருஷ்ணபரமாத்மா அருளிய கீதையிலும் முரண்பாடுகள் வரத்தான் செய்கின்றன. இவற்றையெல்லாம் தவிர்த்து மொத்தமாக நாம் பெறும் அநுகூலங்களை மட்டும் சிரத்தையுடன் கருத்தில் கொள்வோமானால் உரிய பலன் கிட்டும்.

மகாபாரதத்தின் தத்துவங்களை விளக்குவதானால் அது மற்றுமொறு மகாபாரதமாகவே விரிவடையும் என்பதனால் இத்துடன் இதனை நிறைவு செய்கிறோம்.

சுய நன்மைக்காகவோ பயத்தினாலோ உயிரபாயம் நேருமோ என்ற அச்சத்தினாலோ தர்மத்தைக் கைவிடலாகாது என்ற உண்மையினை வலியுறுத்தும் இக் காவியத்தைப் படிப்பவர்கள், படிப்பதைக் கேட்பவர்கள், கேட்டதை மீண்டும் பலருக்கு கூறுபவர்கள் அனைவரும் பெரும் பேறு பெறுவார்கள் என்று மகாபாரத முடிவுரையில் கூறப்படுகிறது. அத்தகைய சிறப்புக்களனைத்தையும்-இப்பத்திகளைப் படித்து இன்புற்ற அனைவருக்கும் நல்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிக் கொள்கிறோம்.

### எமது நன்றி

இந்தியாவில்-புதுதில்லி தூர்தர்ஷன் மூலம் பி.ஆர்.சோப்ராவின் மகாபாரதத் தொடர் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்த பொழுது இது இந்தியா முழுவதையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது.

இலங்கையில் இத்தொடர் எம்.ரி.வி. மூலம் ஒளிபரப்பாகவிருக்கிறது என்பதனை அறிந்த எம்மவர் மிகுந்த உற்சாகமடைந்தனர். ஆனால் இக்காவியத்துடன் ஏதோ ஒருவகையில் மிகமிக நெருக்கமுடைய தமிழ் மக்கள் இத்தொடரில் இந்தியில் இடம்பெற்ற உரையாடல்களைப் புரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் தவித்தனர். சிங்கள மொழியில் மட்டும் உரையாடல்கள் மொழிபெயர்த்து திரையில் இடம்பெறச் செய்தமையினால் ஏமாற்றமடைந்தனர்.

இக்காலகட்டத்தில் கொழும்பு கொம்பனித்தெருவில் வசித்த எனது நண்பர் திரு.தியாகராஜா அவர்களின் மனைவி திருமதி பாக்கியலட்சுமி தியாகர்ராஜா அவர்கள், "தினமுர'சில் மகாபாரதத் தொடரின் உரையாடல் தமிழாக்கத்தை வெளியிடலாமே" என்று ஆலோசனை கூறினார். அது ஒரு நல்லயோசனை என்று பட்டமையினால் ஆசிரியர் அவர்களினதும் நிர்வாகி அவர்களினதும் அனுமதியைப் பெற்று எம்.ரி.வி. நிறுவனத்துடன் தொடர்பு கொண்டேன். அவர்களும் ஒப்புதல் அளித்தார்கள். தொடரின் ஏழாவது அங்கத்திலிருந்து தினமுரசில் தமிழ் உரையாடல்கள் இடம்பெற்றன. வாசகர்களும் போதுமான ஆதரவை நல்கியமை, அவர்கள் அனுப்பிய கடிதங்கள் மூலம் தெரியவந்தது.

மகாபாரதத் தொடரில் இடம்பெறும் உரையாடல் அத்தனையையும் பிரசுரிப்பதானால் பத்திரிகையில் ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு பக்கங்கள் தேவைப்படும். ஆகவே சுருக்கமாக- கூடுமானவரை கருத்தும் சுவையும் குன்றாமல் தமிழாக்கித்தந்தோம்

இக்காலகட்டத்தில் இத்தமிழாக்கத்துக்குத் தூண்டுகோலாயிருந்த திருமதி பாக்கியலட்சுமி தியாகராஜா அவர்கள்-காலையில் குளித்துவிட்டு பூஜையறையில் பிரார்த்தனையிலீடுபட்டிருந்தபோதே அவருடைய உயிர் பிரிந்து அமரரானார். தெய்வபக்தியும் தர்ம சிந்தனையும் நேர்மையும் ஒருங்கே அமையப்பெற்ற அருங்குணவதியான அவ்வம்மையாரை-இப்பணி முடியும் தறுவாயில் நினைவுகூருவது எனது தலையாய கடமையாகும்.

இப்பணி சிறப்புற்று நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய எம்.ரி.வி. நிறுவனத்தினருக்கும், இடமளித்து உற்சாகமூட்டிய ஆசிரியர், நிர்வாகி மற்றும் சக ஊழியர்களுக்கும், முக்கியமாக எமது வாசகர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-இராஜகுமாரன்-


**பிரதிகள் தேவையானால் தொடர்பு கொள்ளவும்**

மகாபாரதத் தொடர் பிரசுரமான தினமுரசு இதழ்களில் குறிப்பிட்ட சில பிரதிகளே கைவசமுள்ளன. பிரதிகளைப் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ 15/= பெறுமதியான முத்திரைகளை, கடித உறைக்குள் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

நிர்வாகி.

**அடுத்த வார முரசில் ஆரம்பமாகிறது**

**இராமாயணம்**

தருவது~மகாபாரதப் புகழ் இராஜகுமாரன்

இனிப்பான செய்தி

வாரம் தோறும் வாசகர்கள் பங்கு கொள்ளும் இராமாயணப் போட்டி

இலக்கிய நாவல்கள் பரிசுகளாக





www.padippakam.com
படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# சிரிப்போ இதழ் விரிப்போ!

நாம் வாழும் உலகில்தான் நாமறியாமல் எத்தனை விநோதங்கள். அவற்றில் சில இங்கே!



↑ படத்தில் இருப்பது 'டொல்பின்.' ஆனால், குட்டி டொல்பின். இப்போதுதான் பல் முளைத்திருக்கிறது. (அதுதான் சிரித்துப் பார்க்கிறதோ?) தாய் டொல்பின் குட்டிஈனும் போது அதனைச் சுற்றி ஒரு டொல்பின் பட்டாளம் காவலுக்கு நிற்கும். சுறாக்களின் தாக்குதலில் நின்று காப்பாற்றத்தான் அப்படி ஒரு வியூகம். குட்டிபோடுவதில் ஒரு திட்டமிட்ட முறையை டொல்பின்கள் கடைப்பிடிக்கின்றன. ஒரு குட்டி ஈன்றபின் 2 அல்லது 3வருட இடைவெளியில்தான் மறு குட்டி. டொல்பின்களுக்குள் போட்டி பொறாமை கிடையாது. (உங்களுக்கு பொறாமையாக இருக்குமோ?) ஆபத்து ஏற்பட்டால் ஒரு விதமான ஒலி எழுப்பும். ஏனைய டொல்பின்கள் உதவிக்கு விரைந்து வரும்.

டொல்பின்கள் மனிதர்களுக்கு எதிரிகளல்ல. கடலில் விழுந்த மனிதர்கள் பலரை கரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளன. ஆனால் பொல்லாத மனிதர்களோ டொல்பின்களுக்கு வலைவீசி கொன்றுவிடுகின்றனர். (புத்தியப்படி)

பசித்தால் வேட்டைக்குத் தனியாகச் செல்வதில்லை. கூட்டமாகப் புறப்பட்டுச் சென்று மீன் கூட்டத்தை 'லபக்' கென்று வாய்க்குள் இழுத்துவிடுகின்றன. அதுதான் உணவு. மீன்களின் எதிரி, மனிதரின் நண்பன்.

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

## அடிக்கும்-ஆனால் தெரியாது



↓ சொன்னால் நம்பமாட்டீர்கள். படத்தில் இருப்பது போர்விமானம். பொம்பர்ரகம் ஏன் இப்படி இருக்கிறது? அங்கேதான் இருக்கு சமாச்சாரம். ராடர்களை வைத்துத்தான் விமானங்களின் நடமாட்டத்தை கவனிக்கிறார்கள். எதிர்நாட்டு விமானம் ஊடுருவினால் ராடர்கள் காட்டிக் கொடுத்துவிடும். உடனே ஏவுகணையை அனுப்பி டமால் டமால். அல்லது இன்னொரு போர் விமானத்தை அனுப்பி நேருக்கு நேர் டுசிம். டுசிம். ஆனால் படத்தில் இருக்கும் விமானத்திடம் அதுவெல்லாம் செல்லாது. ஏன் தெரியுமா? ராடர் கருவிகளின் பார்வைக்கே இது தெரியாது. பூனையின் பாதச்சுவட்டின் சத்தம் கேட்டாலும்கேட்கும். இதன் சத்தமே கேட்காது. கரிய நிறமாக இருப்பதால் இரவு நேரத்தில் எதிரி நாட்டுக்குள் ஊடுருவினால் கண்பார்வைக்கும் உடனே தட்டுப்படாது. ↓

இந்த பயங்கரமான போர் விமானம் தற்போது அமெரிக்க விமானப்படையால் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. 36,590 கிலோ நிறையுள்ள குண்டுகளை காவிச் செல்லும். அணு ஆயுதங்களும் அதில் அடக்கம். 'நோர்த்றொப் பி-2ஏ' என்று பெயர் வைத்துள்ளார்கள்.

கிட்டத்தட்ட இதேபோல உள்ள மற்றொரு விமானம் எவ்.117. வளைகுடா யுத்தத்தில் ஈராக்கில் இருந்த 12 மீட்டர் தடிப்பான கொங்கிரீட் பங்கருக்குள் இருந்த விமானநிலையம் ஒன்றை எவ்.117 வீசிய லேசர்கதிர் மூலம் வழிநடத்தப்பட்ட குண்டு தகர்த்தெறிந்தது. அதுவும் அமெரிக்க விமானம்தான். அமெரிக்க போர் விமானங்கள் விபத்துக்களில் சிக்குவது குறைவு.

## ஆசைக்கிளி- அபூர்வக்கிளி



↑ நம் நாட்டு கிளிகளிடம் இல்லாத ஒன்று இக்கிளியிடம் இருக்கிறது. சிவப்பு வர்ணமாக இருக்கிறதல்லவா. சிறகு விரித்து பறக்கும் போது மேலும்பல வர்ணங்கள் தெரியும். சிறகுகள் மூடி இருப்பதால் தெரியவில்லை. இதன் பெயர், எலக்டஸ் கிளி. நியுகினியா மற்றும் பசுபிக் தீவுகளில் வாழுகின்றன. இவற்றின் ஒலியும் பெரிதாகக் கேட்கும். தனியாக திரிவதில்லை. இரை தேடிப் புறப்பட்டால் குறைந்தது 80 கிளிகளாவது அணிவகுத்துத்தான் பயணம். படத்தில் இருப்பது ஆண்கிளி. பெண் கிளி பச்சை வர்ணமாக இருக்கும். நிறத்தை வைத்தே ஆணா, பெண்ணா என்று உடனே சொல்லிவிடலாம்.

## பனியில் மட்டும்தான்



↑ படத்தில் இருப்பவை 'மவுண்ட் சில்லி மஞ்சாரோ' வகைக் குரங்குகள். ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இனம் இது. ஆனால் ஒரு விஷயம். எங்கே அதிக குளிர் இருக்கிறதோ அங்கேதான் இவை வாழும். 19,340 அடி உயர மலைகளில் தான் இவை படுஜோராக நடமாடுவதைக் காணலாம். குரங்குகளில்கூட எத்தனை ரகம்.


## என்னைத் தெரியுமா?





கடலில் தான் வாழ்க்கை. தரையிலும் வந்து இளைப்பாறிச் செல்லும். இதன் பெயர் எலிஃபன்ட் சீல். இதில் ஆண்கள் தான் பலசாலிகள். படத்தில் இருப்பது ஆண் எலிஃபன்ட் சீல். யானைபோல தும்பிக்கையும் இருக்கும். எடை 5300 இறாத்தல் வரை. நீளம் 14 அடிமுதல் 16 அடிவரை. பெண் எலிஃபன்ட்சீல்களுக்கு தும்பிக்கை கிடையாது. எடையும் ரொம்பக் குறைவு. இதனால் ஆண் எலிஃபன்ட் சீல்களுக்கு 'மூட்' வந்துவிட்டால் பெண் எலிபஃன்டுக்கள் பாடுதான் ரொம்ப சோகம். [illegible] காமல் காயங்களோடு தான் [illegible] இருக்கும். அது மட்டு [illegible] -செப்டம்பரிலும்தான் எலிஃபன்ட் சீல்களுக்கு காதல் வரும். 11 மாதம் [illegible] காலம். பாலூட்டிந்தான் [illegible] ஆயுட்காலம் 14 வருடங்கள். [illegible] தாவரங்கள் [illegible] உணவு. நீர்யானைகளும், எலிஃபன்ட் சீல்களும் ஒன்றுதான் என்று நினைத்துவிடாதீர்கள்.

## முன்னேறிப் பாய்ச்சல்





↑ முன்னேறிப் பாய்ச்சலில் வல்லவர் இவர். 18.29 மீற்றர் தூரத்தை 'ட்ரிப்பிள் ஜம்ப்' மூலம் தாண்டியிருக்கிறார். இது உலக சாதனை. இவரது பெயர்: ஜொனதன் எட்வட்ஸ். பிரித்தானியாவைச் சேர்ந்தவர். முன்னேறிப் பாய்ச்சலில் ஒரு [illegible] வெற்றி வாய்ப்பை தவறவிட்டார். 1991 இல் நடந்த உலக சாம்பியன் போட்டியை தவறவிட்டதை இப்போது நினைத்தும் வருந்துகிறார். அதன் பின்னர் வந்த போட்டிகளை தவறவிடாமல் பிடித்துக் கொண்டார். இப்போது 'ட்ரிப்பிள் ஜம்ப்' பாய்ச்சலில் இவர்தான் ராஜா.